உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாவது பதிப்பு

சுடர் 32 கதிர் 297 புரட்டாதி 03ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 19செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20

பக்கங்கள்: 28

தேர்தல் முறைமையை மாற்றப் புதிய திருத்தம்

அவசரமாகக் கொண்டு வருகின்றது அரசு

கொழும்பு, செப்ரெம்பர். 19

20ஆவது திருத்தச் சட்டவரைவை அடியோடு கைவிடுவதற்கு அரசு நேற்று இரவு முடிவு செய்துள்ளது. இது நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக இன்று அறிவிக்கப்படும். 20ஆவது திருத்தத்துக்குப் பதிலாக தேர்தல்முறைமை மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. தேர்தல்முறைமை மாற்றத்தைக்கொண்டு வருவதன் ஊடாக, தேர்தலை ஒத்திவைப்பதற்கு பிற்போடுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

20ஆவது திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்றில் முன்வைத்து, அனைத்து மாகாண சபைகளினதும் தேர்தலை ஒரே நாளில் நடத்த அரசு திட்டமிட்டிருந்தது. இதனூடாக ஆயுள் காலம் இந்த மாத இறுதியுடன் முடிவடையும் மூன்று மாகாண சபைகளினதும் தேர்தலைப் பிற்போடவும் எண்ணியிருந்தது. இந்தச் சட்டவரைவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்தச் சட்டவரைவை நிறைவேற்றுவதாயின் நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன், பொது வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும் என்று தனது வியாக்கியானத்தை உயர் நீதிமன்றம் அறிவித்தது.

வாக்கெடுப்பு எதற்கும் இப்போது செல்வதற்கு அரசு தயார் இல்லை என்பதால், 20ஆவது திருத்தச் சட்டத்தில் ஏதாவது திருத்தம் மேற்கொண்டாவது அதனை நிறைவேற்ற அரசு முயற்சிகள் மேற்கொண்டது. சட்டமா அதிபர் உள்ளிட்ட சட்ட வல்லுநர்களுடன் அரசு இது தொடர்பில் தீவிரமாக ஆராய்ந்தது. எந்தவொரு வழியும் இல்லை என்று நேற்று முன்தினம் இரவு சட்ட வல்லுநர்கள் கைவிரித்தனர்.

இதனையடுத்து, 20ஆவது திருத்தத்தைக் கைவிடுவது என்ற முடிவை அரசு நேற்று எடுத்தது. நாடாளுமன்றில் இன்று பி.ப. 1 மணிக்கு சபாநாயகர் உயர் நீதிமன்றின் வியாக்கியானத்தை முன்வைப்பார். அதனைத் தொடர்ந்து அரசு தனது நிலைப்பாட்டை அறிவிக்கும். பி.ப. 3

>> 25

யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்த பாம்பால் பரபரப்பு

யாழ்ப்பாணம், செப். 19

பாம்புக் கடிக்கு இலக்காகிய ஒருவர், சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் தன்னைத் தீண்டிய பாம்பை போத்தலில் அடைத்து வைத்தியசாலைக்கு எடுத்துவந்துள்ளார். அந்தப் பாம்பு போத்தலுக்குள்ளேயே 10 குட்டிகளைப் போட்டதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றுப் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ்ப்பாணம், காரைநகரில் நேற்று முன்தினம் ஒருவருக்குப் பாம்பு தீண்டியுள்ளது. அவர் சிகிச்

>> 25

சுன்னாகம் கழிவு ஒயில் விவகாரம்:

நொதேர்ன் பவர் நிறுவனத்தின் சீராய்வு மனு நேற்றுத் தள்ளுபடி

மேன்முறையீட்டு நீதிமன்று கட்டளை

கொழும்பு, செப். 19

சுன்னாகம் நொதேர்ன் பவர் மின் உற்பத்தி நிலையத்தை இழுத்து மூடுமாறு உத்தரவிட்ட மல்லாகம் நீதிமன்றின் கட்டளைக்கு எதிராக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனு நேற்றுத் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையை மீளவும் மல்லாகம் நீதிவான் மன்றுக்கே பாரப்படுத்தியது மேன்முறையீட்டு நீதிமன்று.

சுன்னாகம் உள்ளிட்ட

>> 25

தேர்தலுக்கான தயார்படுத்தலில் அரசியல் கட்சிகள் சுறுசுறுப்பு

கொழும்பு, செப். 19

கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடைபெறுவதற்குரிய சாத்தியக்கூறுகள் பிரகாசமாகத் தென்படுவதால், அதை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காக முக்கிய தேசிய அரசியல் கட்சிகள் தற்போதே தயார்படுத்தல் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

சிறு கட்சிகளை வளைத்துப் போட்டு கூட்டணி அமைத்தல், தொகுதி அமைப்பாளர் பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தல், பரப்புரைக்குரிய வியூகங்களை வகுத்தல் என்று தேர்தலுக்கே உரித்தான முக்கிய பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. தேர்தலுக்கான அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்ட பின்னர் கட்சி தாவுதல், காலைவாருதல் போன்ற சம்பவங்களும் அரங்கேறுவதற்குரிய சாத்தியம் காணப்படுவதால் அரசியல் கள்த்தில் பரபரப்புக்கு பஞ்சமிருக்காது என்ற எதிர்பார்க்கப்படு

>> 25

எல்லாற்ர கவனமும் தேர்தலிலதான் போகப் போகுது. அப்போ வீதியல உள்ள உறவுகள்???

see more news in newuthayan.com

வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவருக்கு திடீர் இடமாற்றம்

கொழும்பு, செப். 19

வெலிக்கடைச் சிறைச்சாலையின் பதில் தலைமை மருத்துவ அதிகாரி கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். 19 சிறைச்சாலை மருத்துவர்களின் வேண்டுதலின் அடிப்படையிலேயே இடம்மாற்றம் இடம்பெற்றுள்ளது என்று சிறைச்சாலை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்ற அல்லது விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்படுகின்ற, அரசியல்வாதிகள், உயர் பதவி நிலை அதிகாரிகள் உடனடியாகவே சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்படுகின்றமை தொடர்பில் கடும்

>> 25

மகிந்த தலைமையில்

பொது எதிரணியினரின் முக்கிய கூட்டம் இன்று

கொழும்பு, செப். 19

கொழும்பு அரசியலில் குழப்பமான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டநகர்வு தொடர்பில் ஆராய்வதற்காக மகிந்த ராஜபக்ச தலைமையில் அவர் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று நடைபெறும் கலந்துரையாடலில், மகிந்த அணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்டாயம் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய வியாக்கியானத்தால் அரசுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதனைத் திருத்தியாவது சட்டவரைவை நிறைவேற்ற மேற்கொண்ட முயற்சிகளும் பிசுபிசுத்துள்ளதால், மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டுள்

>> 25

மகிந்த அணி தெரிவிப்பு

20 கைகூடாததால் புதிய திருத்தத்தை தேடுகிறது அரசு

தேர்தலை இழுத்தடிக்க வேண்டாமெனவும் வலியுறுத்து

கொழும்பு, செப். 19

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு முன்னெடுத்த முயற்சி கைகூடாதென்பதால், புதிய தொரு சட்டத்திருத்தத்தின் பிரகாரம் தமது நோக்கத்தை அடைவதற்கு அரசு திட்டம் போட்டு வருகின்றது என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன சுட்டிக்காட்டினார்.

மகிந்த அணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுப் பகல் பொரளையிலுள்ள என். எம். பெரேரா மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளின் ஆயுள்காலம் இந்த மாதத்துடன் நிறைவடைகின்றது. காலம்தாழ்த்தாது தேர்தலை நடத்துமாறு மகிந்த அணி அரசை வலியுறுத்தி வருகின்றது. இதன்பிரகாரம் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை இழுத்தடிப்பதற்காக அரசு 20ஆவது திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. இதற்கு எதிராக மகிந்த அணி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. இதற்கமைய '20' குறித்தான

>> 25

உள்ளூராட்சி சபைகளிடம் மாவீரர் துயிலும் இல்லங்கள்

விரிவு பக். 2

அமெரிக்க நுழைவிசைவு பொன்சேகாவுக்கு மறுப்பு

ராணுவம் மீதான போர்க்குற்றச்சாட்டுகளே அதற்குக் காரணமென அவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 19

"இலங்கை இராணுவத்தின் மீது போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. முன்னாள் இராணுவத் தளபதி என்ற வகையில் என்மீதும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இதனாலேயே அமெரிக்காவுக்குச் செல்வதற்கு எனக்கு நுழைவிசைவு (விசா) மறுக்கப்பட்டிருக்கலாம்" இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

'அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் அமெ

>> 25

பொலிஸாரின் தேடுதல் துன்னாலையில் நீடிப்பு

நேற்றும் மூவர் கைது

யாழ்ப்பாணம், செப்.19

வடமராட்சி, துன்னாலைப் பகுதியில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மூவர் நேற்றும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலைப் பகுதியில் உள்ள பொலிஸ் அதிகாரி ஒருவருடைய வீடு உடைத்த சம்பவம் உள்பட மேலும் இரண்டு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுகளிலேயே இவர்கள் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டனர்.

21, 26, 30 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். துன்னாலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் பருத்தித்துறை நீதிவான் மன்றில் இன்று முற்படுத்தப்படுவர் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கடந்த

>> 25

இரகசியத் தகவலை அடுத்து

மர்மப் பொருளைத் தேடியபோது தகர பரல் மட்டுமே கிடைத்தது

வவுனியா, செப். 19

வவுனியா, பாரதிபுரத்தில் உள்ள தனியார் காணிக்குள் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் உள்ளன என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்துத் தேடும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. எனினும் அங்கு எந்தவிதமான பொருள்களும் மீட்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

பாரதிபுரம் 16ஆம் வீட்டுத்திட்டப்பகுதியில் தனியார் காணி ஒன்றில் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் இருக்கின்றன என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. அந்தப் பகுதியைத் தோண்டுவதற்கு நீதிமன்றத்தின் அனுமதி எடுக்கப்பட்டது. அந்தப் பகுதி முழுவதும் சிறப்பு அதிரடிப் படையினரின் பாதுகாப்பு படுத்தப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை 10 மணியளவில் அந்த இடத்துக்குச் சென்ற வவுனியா மற்றும் நெளுக்குளம் பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர், புலனாய்வாளர்கள், கிராம சேவையாளர் முன்னிலையில் சந்தேகத்துக்கிடமான இடத்தை தோண்டும் பணிகள் நடைபெற்றன. தோண்டபட்ட கிடங்கில் தகர பரல் மட்டுமே காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

188 சுகாதார அதிகாரிகள் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு

கொழும்பு, செப். 19

எதிர்வரும் 20ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 188 பிரதேச சுகாதார அதிகாரி பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் தேசிய இணைப்பாளரும் சிறப்பு மருத்துவருமான ஹசித்த திசேரா தெரிவித்தார்.

எதிர்வரும் 20ஆம் திகதிமுதல் நாடுதழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள டெங்கு ஒழிப்பு வாரம் தொடர்பாக அரச தகவல் திணைக்களத்தில் நேற்று ஊடக சந்திப்பு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2017ஆம் ஆண்டில் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 51ஆயிரத்து 975 ஆகும். அதில் 390 பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களில் 68 சதவீதமானோர் பெண்களாவர். அதற்குரிய காரணத்தைக் கூறமுடியாதுள்ளது. பெண்களின் இறப்பின் காரணமாக அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து சமூகம் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

2017ஆண்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் அதனால் ஏற்படக்கூடிய உயிரிழப்பை குறைப்பதற்கு முடிந்துள்ளது. அரசால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை இதற்கு பெரிதும் உதவியது.

நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை அடையாளம் காண்பது மிக முக்கியமானதாகும். மேல்மாகாணத்தில் 50 சதவீதமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். நகரப் பிரதேசங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுகின்றது. நகரப் பிரதேசங்களில் சுற்றாடலை துப்புரவு செய்தலில் கூடுதல் கவனம் செலுத்தப்படவேண்டும். பாடசாலை மாணவர்களில், நகரப்பகுதிகளில் 30 சதவீதமானவர்கள் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தனர். உயிரிழப்பு 15 சதவீதமாகவே காணப்பட்டது. பெண்கள் மற்றும் ஆண்கள் மத்தியில் டெங்குத் தொற்று ஏற்படுவதில் பொதுவான நிலமை காணப்படுகின்றது. இந்தத் தொகை 35முதல் 45 சதவீதமாக காணப்பட்டது. இருப்பினும் பெண்களின் மரண எண்ணிக்கை அதிகமாகும். டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னெடுப்பதில் 3 ஆயிரம் குழுக்கள் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன. அதில் பணியில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை 9 ஆயிரம் ஆகும். முப்படை, பொலிஸார் ஆகியோரின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது. கடந்தமுறை 20 இலட்சம் சுற்றாடல் பகுதிகளை பரிசோதனைக்கு உட்படுத்தினோம் - என்றார். (ற-10)

தாவரவியல் பூங்காக்களாக மாறும் துயிலும் இல்லங்கள்

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம் செப் 19

யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை தாவரவியல் பூங்காக்களாக மாற்றப்படும். உள்ளூராட்சித் திணைக்களம் அந்தந்த பிரதேச சபைகள் ஊடாக துயிலும் இல்லக் காணிகளை கையகப்படுத்துவதற்கு காணிகளை அடையாளம் காண வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இந்த விடயத்தைக் கொண்டு வந்தார். யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லக் காணிகளை பிரதேச சபைகள் கையகப்படுத்த வேண்டும். அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று அவர் கோரினார்.

"யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப் பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லக் காணிகள் சில தனியாருக்கு சொந்தமானவையாக இருக்கின்றன. நாம் அவர்களின் ஒப்புதலையும் பெறவேண்டிய கட்டாயம் இருக்கின்றது." என்று உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

"துயிலும் இல்லக் காணிகள் யாருக்கு சொந்தமானவை. அவற்றின் காணி விவரங்களைத் திரட்டி முதலில் அறிக்கையாக சமர்ப்பியுங்கள்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். அவ்வாறு அறிக்கையை தயாரிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை நல்லூர் ஆலயத்தின் பின் வீதியில் உள்ள திலீபனின் நினைவுத் தூபியை புனரமைப்பதற்கு உரிய நடவடிக்கையை மாநகர சபை விரைந்து எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டது. 'நல்லூர் ஆலயச் சூழலில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடம் நல்லூர் ஆலயத்துக்கு சொந்தமானது. ஆலய தலைவர் அனுமதி தந்தால் மட்டுமே எம்மால் அந்தக் காணியில் எதனையும் செய்ய முடியும்." என்று யாழ்.மாநகர சபை ஆணையாளர் கூறினார்.

"நல்லூர் ஆலயச் சூழலில் நாம் புதிதாக நினைவு தூபி அமைக்கவில்லை. பல வருடங்களுக்கு முன்னர் அங்கு தூபி கட்டப்பட்டு விட்டது. பின்னர் அது உடைக்கப்பட்டுள்ளது. முன்னர் கட்டும்போது நல்லூர் ஆலயத் தலைவர் அனுமதி வழங்கியுள்ளார். எதிர்காலத்திலும் அவர் தடை போடமாட்டார். அதற்கு நான் முழுப் பொறுப்பு. நான் மாநகர சபை ஆணையாளராக இருந்த போது தூபி கட்டி திறந்தேன். நல்லூர் ஆலய தலைவர் தடையாக உள்ளார் என நொண்டிச் சாட்டு சொல்லாதீர்கள்." என்று வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சற்றுக் காட்டமாக ஆணையாளருக்குப் பதில் கொடுத்தார்.

"திலீபனின் நினைவுத் தூபியை சிவஞானம் மாநகர சபை ஆணையாளராக இருந்த போது கட்டி அமைத்து நினைவுதினத்தை கொண்டாடினார். அப்போது ஆலயத் தலைவர் எந்த மறுப்பையும் தெரிவிக்கவில்லை. திலீபனின் நினைவுத் தூபியை சீரமைப்பதற்கு மாநகர சபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயர்ப் பலகைகளில் தூய தமிழ் சொற்களை பாவிக்க வேண்டும். வரலாற்று இடங்களைப் பாதுகாக்கவேண்டும்போன்ற விடயங்களும் கூட்டத்தில் ஆராயப்பட்டன. (ற-8)

வடக்கு - கிழக்கு இணைய ஒருபோதும் சம்மதிக்கோம்

மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா திட்டவட்டம்

மட்டக்களப்பு, செப். 19

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதற்கு நாங்கள் ஒரு போதும் சம்மதிக்க மாட்டோம். இந்த விடயத்தில் நாங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றோம். கிழக்கு என்பது ஒரு இனத்துக்குச் சொந்தமானது அல்ல. இதுபோன்று வடக்கு என்பது ஒரு இனத்துக்கு சொந்தமானது அல்ல. இந்த விடயத்தில் முஸ்லிம்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

இவ்வாறு மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.சுபைரின் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை மட்டக்களப்பு ஏறாவூர் பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயத்துக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண முதலமைச்சரும் அவருடைய கட்சி சார்ந்த தலைவரும் முஸ்லிம் சமூகத்தைக் காட்டிக் கொடுத்து வடக்கையும் கிழக்கையும் இணைத்து இந்த மாகாணத்தில் வாழுகின்ற மூன்று இன மக்களையும் இரத்தக் கறைக்குள் கையளிக்க நாங்கள் இடமளிக்க கூடாது. இனிவரும் காலங்களில் மாகாண சபைத் தேர்தல் தொகுதி அடிப்படையில் நடைபெறவுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது 11 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். அவற்றையும் தொகுதி அடிப்படையில் மாற்ற வேண்டும்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்களையும் ஒவ்வொரு தொகுதியாக மாற்றுங்கள். அதனால் இனப் பிரச்சினை, தொகுதிப் பிரச்சினைகள் ஏற்படாது என சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் ஆலோசனை முன்வைத்துள்ளோம். அது சிறந்த ஆலோசனை என ஏற்றுள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்கள் உள்ளன தற்போது 11 உறுப்பினர்கள் உள்ளார்கள். மூன்று உறுப்பினர்களை அதிகரிக்க வேண்டி வரும். மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் முரண்பாட்டால் பிளவுகள் ஏற்படாமல் தங்களுடைய பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக்கொண்டு எவ்வாறு ஒற்றுமையாக செயற்படுவது என்பது பற்றி சிந்திக்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் அல்லது ஏனைய கட்சிகளுடைய பிரதிநிதிகளால் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான சில ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்ற நிலையில் எதிர்வரும் 21ஆம் திகதி இடைக்கால அறிக்கையை தலைமை அமைச்சர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

போர் மாத்திரம் முடிவடைந்துள்ளது. இன்னும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வு இந்த அரசு கொடுக்க தவறுமாகவிருந்தால் வடக்கு, கிழக்கில் போர் வெடிப்பதை யாராலும் தடுக்க முடியாது.

அதிகாரங்கள் நிறைந்த தங்களுடைய நிர்வாகத்தை தாங்களே செய்யக்கூடிய வளமான மாகாணசபைகள் உருவாக்கப்பட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு என தனியான மாகாணங்கள் உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலமே எங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் - என்றார். (ற-10,47)

விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி, செப். 19

சாலையில் சென்ற கார் எதிர்த் திசையில் வந்த ஓட்டோவை மோதிவிட்டு மறுபக்கத்தில் சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி அதில் பயணித்த வரை காயப்படுத்தியது. சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடிய கார்ச் சாரதி கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

காரைச் செலுத்திய சாரதியை பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கார் நுணாவில் பொது நூலகத்துக்கு முன்பாக முதன்மைச் சாலையில் சாவகச்சேரி நோக்கி வந்த ஓட்டோவை மோதிவிட்டு, யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளையும் மோதிவிட்டுத் தப்பியோடியுள்ளது. கார் மோதியதில் காயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த நல்லூர் இராசசாலையைச் சேர்ந்த இராமசாமி ரவீந்திரன் (வயது50) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சாலை விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தவேளை காரின் உரிமையாளர் காரையும் செலுத்தி வந்த சாவகச்சேரியைச் சேர்ந்த சாரதியையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10,9)

சாரதிக்கு மறியல்

தென்மராட்சி, செப். 19

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்ற பளையைச் சேர்ந்த டிப்பர் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் சாரதியை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-10)

ஏ.எல் வினாத்தாள் கசிவு: ஆசிரியருக்கும் சகோதரருக்கும் பிணை

கொழும்பு, செப். 19

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை இரசாயனவியல் வினாத்தாள் முன்கூட்டியே வெளிவந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆசிரியருக்கும், அவரது சகோதரருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை கம்பஹா மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணை மற்றும் 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையில் அவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டனர். இருவருக்கும் வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருவரையும் ஒவ்வொரு ஞயிற்றுக் கிழமையிலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மாணவரும் ஆசிரியரின் தந்தையும் ஏற்கனவே பிணையில் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ற-10)

தீஸாநாயக்கவின் பிடியாணை நீக்கம்

கொழும்பு, செப். 19

தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரகுமார தீஸாநாயக்கவைக் கைது செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதிவானால் நேற்றுப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

பிடியாணைப் பிறப்பித்து ஒரு சில மணித்தியாலங்களில் அவர் நீதிமன்றில் முன்னிலையாகியுள்ளார். அதையடுத்து அவரது பிடியாணை மீளப்பெறப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மேலதிக நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வீரகுமார தீஸாநாயக்க முன்னிலையாகவில்லை. இதையடுத்தே நீதிவான் பிடியாணை பிறப்பித்தார். ஜக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளரின் இலங்கை வருகைக்கு எதிராகப் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று அவர்கள் மீது பொலிஸாரால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ற-10)

காத்தான்குடியில் டெங்கு ஒழிப்பு

காத்தான்குடி, செப். 19

டெங்குநோய் தீவிரமாகப் பரவிவரும் இடமாக இனங்காணப்பட்டுள்ள காத்தான்குடி நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் டெங்கு ஒழிப்புநடவடிக்கைகள்நேற்றுமுன்னெடுக்கப்பட்டன.

சுகாதார மருத்துவ அதிகாரி யு.எல். நசிர்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நடவடிக்கைகளில் காத்தான்குடிப் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது, டெங்குக் குடம்பிகள் உள்ள இடங்களாக அடையாளம் காணப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

அபிவிருத்திக்கு அதிகாரிகள் சிலரால் தடை

அவர்கள் மீது நடவடிக்கை என யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் செப் 19

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதில் சில திணைக்கள அதிகாரிகள் தடையாக உள்ளனர். அவ்வாறான அதிகாரிகள் மீது பாரபட்சம் பாராது நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நாம் முழு வீச்சில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம். எமது மாவட்டத்தின் திட்டங்கள் காலதாமதமாவதற்கு இங்குள்ள சில திணைக்களங்களின் அதிகாரிகளும் முக்கிய காரணமாக இருக்கின்றனர்.

சில திணைக்களங்களின் அதிகாரிகள் அபிவிருத்தி திட்டங்களின் போது அவர்களுடைய வேலைத்திட்டங்களின் வவுச்சர்களை வேண்டுமென்றே காலதாமதமாக்குகின்றனர். இங்குள்ள சில தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் எமது அபிவிருத்தித் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவதில்லை.

அவர்களில் பலர் இனங் காணப்பட்டுள்ளனர். இவ்வாறு விஷமத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகாரிகள் மீது பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும். எமக்கு எமது மாவட்டத்தின் அபிவிருத்தியே முக்கியமாகும்.

எமது திட்டங்களைக் கையகப்படுத்தச் சிறந்த ஒப்பந்தகாரர்கள் இல்லாமையாலும் அவை காலதாமதமாகின்றன. எது எப்படி இருப்பினும் நாம் எமது மாவட்டத்துக்கான நடப் பாண்டுத் திட்டங்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்ற முழு முயற்சிகளை எடுத்து செயற்பட்டு வருகின்றோம் - என்றார்.

வடக்கு மாகாணத்தில் மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான 525 மில்லியன் ரூபா நிதி இன்றுவரை திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெறவில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார். (ற-8)

ஊட்டச்சத்து உணவு காட்சிப்படுத்தல்

சாவகச்சேரி, செப்.19

சீனியின்றிச் சுவைப்போம் என்னும் சுகாதார மற்றும் ஊடச்சத்து உணவுப் பொருள்களின் காட்சிப்படுத்தல் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

சாவகச்சேரிப் பிரதேச தாய்மார் சங்கத்தினர், வேள்ட் விஷன் லங்கா நிறுவனத்தினர் மற்றும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தினருடன் இணைந்து இந்தக் காட்சிப்படுத்தலை மேற்கொண்டனர். சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க. தயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொடிகாமம் மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் சு. அச்சுதன் மற்றும் வேள்ட் விஷன் லங்கா நிறுவன சாவகச்சேரிப் பிரதேச அபிவிருத்தித்திட்ட முகாமையாளர் அ.கி. றொசைறோ ஆகியோருடன் பெருமளவு தாய்மாரும், பாடச்சாலைகளின் மாணவர்களும் கலந்து கொண்டு, போசாக்கு உணவுப் பொருள்கள் காட்சிப்படுத்தலைப் பார்வையிட்டனர். (ற-10, 9)

தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் ஆகியோர் பதுளை சிவில் அமைப்பு பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். பதுளை பேருந்து நிலையத்தில் "இலங்கையர்" என்ற அடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையிலான "ஸ்ரிக்கர்"களை இ.போ.ச. பேருந்துகளில் ஒட்டும் நிகழ்வும் நடைபெற்றது. (ற-10)

இளைஞரின் சடலம் வவுனியாவில் மீட்பு

வவுனியா கூமாங்குளத்தில் இளைஞரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியா கூமாங்குளத்தில் வசித்துவரும் பாஸ்கரன் விதூசன் (வயது20) என்ற இளைஞன் சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

இவர் கடந்த ஜி.சி.ஈ. உயர்தர விஞ்ஞானப் பிரிவில் பரீட்சை எழுதியிருந்தார். தகுதி காணாமையால் இந்த ஆண்டும் உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வீட்டிலேயே இருந்துள்ளார். நேற்றுக் காலை வீட்டில் இளைஞனும் தாயாரும் இருந்துள்ளனர். தாயார் கடைக்குச் சென்று வருவதாகக் கூறிவிட்டு கடைக்குச் சென்று வீடு திரும்பிய போது வீட்டின் அறையினுள்தவறான முடிவெடுத்து கயிற்றில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-10)

மருதங்கேணி, சுண்டிக்குளத்தில்
சரணாலயம் என அறிவித்த வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறுமாறு தீர்மானம்

யாழ்ப்பாணம், செப்.19

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் சுண்டிக்குளம் சரணாலயமாக அறிவிக்கப்பட்ட 48 ஆயிரத்து 300 ஏக்கர் காணியை கையகப்படுத்தும் தாவர விலங்கியல் திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டு வர்த்தகமானி அறிவித்தலை மீளப்பெற வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் இந்த விடயம் பேசப்பட்டது.

மருதங்கேணி பிரதேசத்தில் 1937 ஆம் ஆண்டு தாவர விலங்கியல் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் சுண்டிக்குளம் மற்றும் சுண்டிக்குள கடல் நீரேரி மற்றும் அதனை அண்டிய பகுதிகள் சரணாலயமாக பிரகடனம் செய்யப் பட்டன.

அவ்வாறு பிரகடனம் செய்த போது 25 ஆயிரத்து 550 ஏக்கர் நிலப்பகுதி கையகப்படுத்தப்பட்டது.

2015 ஆம் ஆண்டு அதே சட்டத்தில் இன்னொரு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக தேசிய பூங்காவாக தரமுயர்த்தும் வகையில் அறிவிக்கப்பட்டது. 25 ஆயிரத்து 550 ஏக்கர் நிலப்பகுதியிலிருந்து 48 ஆயிரத்து 300 ஏக்கர் காணி கையகப் படுத்தப்பட்டது. இந்த அகலிப்புக் காரணமாக பொதுமக்களின் காணிகள், வயல்கள், பாடசாலைகள், கோவில்கள் என பல இடங்கள் அதனுள் உள்ளடக்கப்பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற வேண்டும் என கோரப்பட்டிருந்த நிலையில் வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற வேண்டும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது. (ற-8)

சிறுப்பிட்டி மயானத்தில் சடலங்களை எரியூட்ட இடைக்காலத் தடை

யாழ். மேல் நீதிமன்றம் நேற்றுக் கட்டளை

யாழ்ப்பாணம், செப். 19

புத்தூர் மேற்கு, சிறுப்பிட்டி கலைமதி கிந்துப்பிட்டி மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்தது.

"நீதிகோரி வீதியிலே நின்று போராடும் போது அதனைப் பார்த்துக்கொண்டு நீதி தேவதை கண்களை மூடிக்கொண்டு இருந்துவிட முடியாது. அந்த மக்களின் போராட்டத்துக்கு முடிவு முற்றுமுழுதாக உடனடியாக வழங்கப்பட முடியாவிட்டாலும், இடைக்கால முடிவேனும் வழங்கப்பட வேண்டும். அதனடிப்படையிலேயே இந்தக் கட்டளையானது பிறப்பிக்கபடுகின்றது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் சுட்டிக்காட்டினார்.

புத்தூர் கலைமதி கிராமத்தில் உள்ள மயானத்தை அகற்றுமாறு மயானத்தை சூழ வசிக்கும் மக்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அதேவேளை குறித்த மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என ஒரு பகுதியினர் மல்லாகம் நீதிமன்றை நாடி இருந்தனர். அதனை விசாரித்த மல்லாகம் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், மயானத்தை சூழ பத்தடி உயர மதிலைக் கட்டி , சடலங்களை எரியூட்டுமாறும் , ஒரு வருட காலத்துக்குள் மின்தகன மயானமாக அதனை மாற்றுமாறும் கட்டளையிட்டிருந்தார்.

மல்லாகம் நீதிவான் மன்றின் கட்டளைக்கு ஆட்சேபனை தெரிவித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மயானத்தை சூழவுள்ள மக்கள் சீராய்வு மனுத் தாக்கல் செய்தனர். அந்த மனு யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. அதன்போது மயானத்தை சூழவுள்ள மக்களும் மன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

மயானத்தை அகற்றக் கோரி வழக்குத் தாக்கல் செய்த மக்கள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்க தமக்கு ஆட்சேபனை இல்லை என அரச சட்டவாதி நாகரத்தினம் நிஷாந்த் மன்றில் அறிவித்தார்.

"இந்த மயானத்தை அகற்றக் கோரி சூழ வாழும் மக்கள் தொடர் போராட்டத்தை நடத்தி வருகின்றார்கள். அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் போராட்டத்தில் ஈடுபடும் மக்களைச் சந்தித்துள்ளார். அதன் போது , இந்த பிரச்சினை நீதிமன்றில் உள்ளதனால் அது தொடர்பில் தன்னால் தலையீடு செய்ய முடியாது என அவர் கூறி இருக்கின்றார்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சராக வடக்கு மாகாண முதலமைச்சரே உள்ள நிலையில் அவரது அமைச்சுடனும் இது தொடர்பாக தொடர்புகொண்டு அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். யாழ்.மாவட்டச் செயலாளருடைய பங்களிப்புக்கள் இதில் எவ்வாறு உள்ளன. அவரால் வழங்கப்படக்கூடிய தகவல்கள் தொடர்பாகவும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் மயானத்தைச் சுற்றியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை அது பாதிக்குமாயின் அது நிரந்தரமாக கைவிடப்பட வேண்டுமா? என்பது தொடர்பான தகவல்கள் அனைத்தும் மன்றுக்கு அரச சட்டவாதியால் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இந்த மக்கள் கடந்த 68 நாள்களாக போராடி வருகின்றார்கள். நீதி என்பது அனைவருக்கும் சமனானது. அது பாதிக்கப்பட்ட எந்த தரப்பினருக்கும் வழங்கப்பட வேண்டியது.

மல்லாகம் நீதிவான் மன்றம் வழங்கிய கட்டளைக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது முடிவுறுத்தப்படும் வரையில் இந்த இடைக்கால தடை உத்தரவு நடைமுறையிலிருக்கும்.

அதேபோன்று இந்த வழக்குத் தொடர்பாக மல்லாகம் நீதிவான் மன்றில் காணப்படும் மூல வழக்கேடானது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட வேண்டும்.

இவற்றைவிட மல்லாகம் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் குறித்த மயானத்தை சுற்றி கட்டப்படும் மதில்கள் கட்டுமானங்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டியதுடன் இந்த வழக்கு முடியும்வரை அவை அமைக்கப்படக் கூடாது எனவும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

எனவே நிர்வாக ரீதியான நடவடிக்கைள் மேற்கொள்வதற்கு நீதிமன்றில் உள்ள தடை உத்தரவு காரணமென கூறப்பட்ட நிலையில், தற்போது அதனை நிவர்த்தி செய்யும் வகையில் அந்த உத்தரவுகளுக்கு தடை உத்தரவானது வழங்கப்பட்டுள்ளது" என்று இடைக்காலத் தடைக்கான கட்டளையில் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் குறிப்பிட்டார்.

மேலும் இந்தத் தடை உத்தரவு தொடர்பான பிரதிகளை வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், யாழ்.மாவட்டச் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்க பதிவாளருக்கும், குறித்த தரப்பினர் அந்த மயானம் காணப்பட வேண்டிய அல்லது அது நீக்கப்பட வேண்டிய காரணங்கள் தொடர்பாக அரச சட்டவாதிக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் யாழ்.மேல் நீதிமன்றம் கட்டளையிட்டது. (வ-37)

யாழ்ப்பாணத்தில் பொலிஸுக்கு இனிக் காணிகள் தேவையில்லை

வட மாகாண சபை உறுப்பினர் ஜெயசேகரம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம் செப் 19

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸாருக்கு காணிகளை வழங்கக்கூடாது. மேலதிக கட்டடங்களை அமைக்க விரும்பின் யாழ்ப்பாண பொலிஸ் நிலையக் காணியிலோ அல்லது யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள விசேட அதிரடிப் படையினரின் முகாம் காணியிலோ கட்டவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"யாழ்ப்பாணத்தில் விசேட அதிரடிப் படையினருக்கு பண்ணைப் பகுதியில் 4 ஏக்கர் காணியைக் கையகப்படுத்தியுள்ளனர். நாவற்குழிப் பகுதியில் 5 ஏக்கர் காணியை விசேட அதிரடிப்படை தம் வசம் வைத்துள்ளது. இவற்றை விட யாழ்ப்பாண நகரில் விசாலமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள காணியை பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கட்டடத்துக்கு வழங்க அனுமதிக்க முடியாது. அவர்களுக்கு இந்தக் காணியை வழங்க முடியாது எனப் பதிலை அனுப்புவதுதான் சரியாக இருக்கும்-என்றார். (ற-8)

நியூயோர்க்கை அடைந்தார் மைத்திரிபால

கொழும்பு, செப். 19

ஐக்கிய நாடுகள் சபையின் 72ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக அமெரிக்க சென்ற அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இலங்கை நேரப்படி நேற்றுக் காலை நியூயோர்க் ஜோன் எப் கென்னடி பன்னாட்டு வானூர்தி நிலையத்தைச் சென்றடைந்தார் என அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

'மக்களை மையப்படுத்தி நிலையானதொரு உலகில் அனைவருக்கும் சமாதானம் மற்றும் கண்ணிய மான வாழ்க்கைக்காக உண்மையாக உழைத்தல்' என்ற கருப்பொருளின் கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் 72 ஆவது பொதுச்சபைக் கூட்டத் தொடர் நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெறுகிறது. இதன் பிரதான கூட்டத்தொடர் செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. அன்று பிற்பகல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பொதுச் சபைக் கூட்டத்தொடரில் சிறப்பு உரையாற்றவுள்ளார்.

அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக்கூட்டத்தொடரில் கலந்து கொள்ளும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவாகும். ஐக்கிய நாடுகள் சபையின் 72 ஆவது பொதுச் சபைக்கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் இன்று காலை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார, சமூக பேரவையின் அரசியல் சீர்திருத்தம் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலிலும் அரச தலைவர் பங்குபற்றவுள்ளார்.

செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள தனது அமெரிக்க பயணத்தில் அந்த நாட்டில் வாழும் இலங்கையர்களுடனான சந்திப்பு உட்பட மேலும் பல நிகழ்ச்சிகளிலும் அரச தலைவர் கலந்து கொள்ளவுள்ளார் என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற-10)

குடும்பத்தலைவர் அடித்துக்கொலை; முதலாவது சந்தேகநபருக்குப் பிணை

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாண நகரில் இரவு வேளை இளம் குடும்பத் தலைவரை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் சுமார் 2 வருடங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குடும்பத்தலைவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று நேற்றுப் பிணை வழங்கியது.

யாழ்ப்பாண நகர் மின்சார நிலைய சாலையில் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதியன்று இரவு வேளை பேருந்துத் தரிப்பிடத்துக்கு அருகே நடந்து சென்று கொண்டிருந்த தம்பதிகள் மீது அந்தப் பகுதியில் நின்றிருந்த இளைஞர்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் மாதவ மணிவண்ணனும் அவரது மனைவி தர்சினியும் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பயனளிக்காது குடும்பத்தலைவர் மாதவ மணிவண்ணன் உயிரிழந்தார்.

தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பகுதி வியாபார நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவின் பதிவை அடிப்படையாகக் கொண்டு கொலைக் குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாண நீதிவான் மன்றின் உத்தரவில் 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் 23ஆம் திகதியிலிருந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் முதலாவது சந்தேகநபரான வேலணையைச் சேர்ந்த குடும்பத் தலை வருக்கு நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டது.

"ஒரு இலட்சம் ரூபா காசுப் பிணை, 5 இலட்சம் பெறுமதியான 2 ஆள் பிணைகள் முன்வைக்கப்படவேண்டும். சந்தேகநபர் தனது கடவுச்சீட்டை யாழ்ப்பாணம் நீதிவான் மன்றின் பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும். மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிட வேண்டும். சந்தேகநபர் நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதிக்கப்படுகிறது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் பிணை மீதான கட்டளையை வழங்கினார். (வ)

தியாகத்திறன்வேள்வி - 2017 நாடகவிழா காரைநகரில் 3 நாடகங்கள் அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், செப்.19

சுவிஸ்காரை அபிவிருத்திச் சபை நடத்திய தியாகத் திறன்வேள்வி - 2017 நாடகவிழாகடந்தசனிக்கிழமை தொடக்கம் தொடர்ந்து இரண்டு தினங்கள் காரை நகர் இந்துக்கல்லூரி நடராசா மண்டபத்தில் இடம் பெற்றது.

16ஆம் திகதி சனிக்கிழமை மாலை4 மணிக்கு சோலையான் நாடக மன்றத்தின் நெறியாள்கையில்'திருந்துவார்களா' என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது.

மாலை 5 மணிக்கு காரை இந்து மாணவர்களின் நெறியாள்கையில்'வெல்க மானிடம்' என்ற நாடகம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு கிறிஸ்தவ இளைஞர்சங்கத்தின்நெறியாள்கையில் 'செல்லரித்த வாழ்வின்விளிம்பில்'என்ற நாடகமும்,சிவகௌரிநாடக மன்றத்தின்நெறியாள்கையில்'காலனை வென்றகற்புக்கரசி' என்ற நாடகமும் மேடையேற்றப்பட்டன.

இந்தநாடகங்களைமேடையேற்றிய நாடகக் குழுவினர்களுக்கு அறக்கொடை அரசு சுவிஸ் நாதனின் அனுசரணையுடன் பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்பட்டன. (ய-250)

வேலணைப் பிரதேசத்தில் இன்று முதியோர் விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.19

பன்னாட்டு முதியோர் வாரத்தையொட்டி வேலணைப் பிரதேச செயலகத்தினால் முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோருக்கானவிளையாட்டுப்போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் இன்று மு.ப. 9 மணி தொடக்கம் 11.30 மணிவரை வேலணைசரஸ்வதிமகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும். பிரதேசசெயலர் அ. சோதிநாதன் தலைமைதாங்குவார்.

முதன்மைவிருந்தினராக நிறுவனத்தலைவர்கனகலிங்கம்தர்மசேகரம்கலந்துகொள்வார்.

முதியோர்களுக்கான போட்டிகளாகபலூன்ஊதி உடைத்தல், வேகநடை, நீர் நிரப்புதல், சங்கீதக்கதிரை, ஓட்டப்போட்டி, கிடுகு பின்னுதல், தேசிக்காய் கரண்டி ஓட்டம், இனிப்பு உண்ணல், ஆகியவை நடத்தப்படவுள்ளன.

மாற்றுத்திறனாளிகளுக்கு பலூன் ஊதி உடைத்தல், வேகநடை, நீர் நிரப்புதல், 100 மீற்றர் ஓட்டம், முச்சக்கரவண்டி ஓட்டம் ஆகியவை இடம்பெறும். (ய-9)

யாழ்ப்பாணபல்கலைக்கழகத்தில் 5 வருடமாக இடைநிறுத்தப்பட்ட உடற்கல்வி கற்கைநெறியை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாண பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமாகற்கைநெறிசுமார் 5 வருடங்களாக இடம்பெறவில்லை. ஆனால் கலாநிதி தரத்திலான மூன்று விரிவுரையாளர்கள்விரிவுரைகள் இன்றி வேதனம் பெற்றுவருகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகயாழ்ப்பாண மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் கந்தசாமி கருணாகரன் தெரிவித்ததாவது:

இரண்டு வருட கற்கைக் காலத்தைக்கொண்டஉடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியானது, பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்கு முவின் அனுமதியுடன் 1998இல் ஆரம்பிக்கப்பட்டது.

இக்கற்கை நெறியில் இணைந்து 250இற்கும் மேற்பட்ட உடற்கல்வித் துறை சார்ந்த டிப்ளோமாப் பட்டதாரிகள் வெளியேறி பல்வேறு துறைகளிலும் பிரகாசித்துவருகின்றனர்.

இந்த நிலையில் கடந்த 5 வருடங்களாககற்கைநெறி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காலத்தில் குறித்த கற்கை நெறிக்கான வேதனம் பெற்ற கலாநிதிகள் மீது பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழு விசாரணை நடத்தவேண்டும். இடைநடுவில் கைவிடப்பட்ட உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியை மீள ஆரம்பிக்க வேண்டும். இதேவேளை, யாழ்ப்பாணபல்கலைக்கழகத்தில்2வருடகற்கைநெறி இடம்பெறும் போது, ஏனைய மாகாணங்களில் 9 மாத உடற்கல்வி சான்றிதழ் கற்கை நெறியே இடம் பெற்றது.

தற்போது அவை வருடப்டக் கற்கைத்துறையை ஆரம்பித்துள்ளன.

ஆனால் முதன் முதலில் கற்கை நெறியை ஆரம்பித்த யாழ்ப்பாண,பல்கலைக்கழகத்தில் கடந்த 5 வருடங்களாக அந்தத் துறை மூடப்பட்டுள்ளது. எனவே கற்கை நெறியை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்றார். (ய-50)

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் 2017 வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில், கோண்டாவில், குமரக்கோட்டம்இளைஞர்கழகத்துக்குரூ.50 ஆயிரம்பெறுமதியான பிளாஸ்ரிக் கதிரைகள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ய)



வவுனியா நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை தீவிர ஆங்கில மொழி கற்பிக்கும் திட்டத்தின் ஆங்கிலத்தில் கதைத்தல் போட்டி நடத்தப்பட்டது. வவுனியா வடக்கு, துணுக்காய் மற்றும் முல்லைத்தீவு ஆகிய வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தனர். பெற்றோர், ஆசிரியர், மற்றும் மாணவர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றதாக இது அமைந்தது. (4)

யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம், செப்.19

சமூக சேவைகள் மற்றும் நலன்புரி மரபுரிமைகள் அமைச்சின்ஏற்பாட்டில்2016 ஆம் ஆண்டு ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சிறப்புச் சித்திபெற்ற 40 மாணவர்களுக்கு10ஆயிரம் ரூபா புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில்நடைபெறும்.

நிகழ்வுக்கு மாவட்டச் செயலாளர்தலைமைதாங்குவார். இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் மூலம் 18 வயதுக்குகுறைந்தபிள்ளைகளுக்கான பாதுகாப்புத் திட்டத்தில்அங்கத்தவர்களான மாணவர்களுக்கே இக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

இந்தத் திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்திய பிரதேசசெயலகஉத்தியோகத்தர்களும்இதன்போதுகௌரவிக்கப்படவுள்ளனர். (ய)

ஹென்றியரசர்கல்லூரியின் முன்னாள் அதிபர்வணபிதாஜேசுதாஸ்அடிகளாரின் மணிவிழா

யாழ்ப்பாணம், செப்.19

இளவாலைபுனிதஹென்றியரசர்கல்லூரியின் முன்னாள் அதிபர் வணபிதா ஜேசுதாஸ் அடிகளாரின் மணிவிழா நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.

கல்லூரிஅதிபர்வண. இமானுவேல்கொற்விறி றோயல் அடிகளார் நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கினார்.

இதில், கொழும்பு மாநகரசபைமுன்னாள் உறுப்பினரும், கல்லூரியின் பழைய மாணவருமாகிய சி.பாஸ்க்கரா, பழைய மாணவர்இளவாலைதாய்ச்சங்கத்தலைவர் அருள்ராஜ், அதன் லண்டன் கிளைத் தலைவர் கொன்சன்டைன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ய)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆசிரியரும் தென் மராட்சி இலக்கிய அணியின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவருமான சடாட்சரம் மார்க்கண்டுவின் மணி விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை சங்கத்தானை தமிழ்க்கோட்ட அரங்கில் நடைபெற்றன. விழா தென் மராட்சி இலக்கிய அணியின் அ.வாசு தேவா தலைமையில் நடைபெற்றது.

வாழ்த்துரைகளை கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர்களான நாகேந்திரராஜா, க.அருந்தவபாலன், தற்போதைய அதிபர் ந.ஜெயக்குமாரன், யாழ்.பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் கலாநிதி செ.சேதுராஜா ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில், இன்றைய ஆசிரியத்தின் அவசியத் தேவை அன்பே அறமே என்னும் தலைப்பில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் சிறப்புப் பட்டிமன்றமும் நடைபெற்றது. பேராசிரியர் தி.வேல்நம்பி, கவிஞர் த.நாகேஸ்வரன், கலாநிதி சிறிபிரசாந்தன், அ.வாசுதேவா ஆகியோர் உட்படப் பலர் பங்குபற்றினர். (ய-9)

மரக்கறிகளின் நேற்றைய விலை

மரக்கறிகள்	சாவகச்சேரி	சுன்னாகம்	மருதனார்மடம்	நெல்லியடி	திருநெல்வேலி
முள்ளங்கி	50	60	80	60	50
கத்தரி	220	120	140	100	120
மரவள்ளி	80	80	80	60	70
பயிற்றை	120	160	100	120	140
பாகல்	200	240	220	300	180
க.கிழங்கு	80	120	100	120	80
பெ.வெங்காயம்	140	130	130	140	120
சி.வெங்காயம்	300	240	180	140	240
பூசணி	30	50	40	50	30
தக்காளி	200	200	160	200	180
வாழைக்காய்	80	120	100	80	80
கீரை	30	40	40	20	40
பொன்னாங்காணி	30	40	30	30	30
ப.மிளகாய்	300	240	300	320	160
புடோல்	80	90	80	100	80
கோவா	80	100	100	100	80
வெண்டி	80	60	50	80	40
போஞ்சி	140	200	200	160	160
லீக்ஸ்	120	140	120	120	130
தேங்காய்	70	80	70	70	80
உ.கிழங்கு	120	120	110	110	120
தேசிக்காய்	250	300	320	300	300
வல்லாரை	15	20	20	15	15
கறிமிளகாய்	140	160	120	140	140
கரட்	80	160	160	120	140
முருங்கைக்காய்	100	120	70	40	120

யாழ்ப்பாண நகரின்

போக்குவரத்துத் தகவல் திரட்ட அனைவரும் ஒத்துழையுங்கள்

கலாநிதி அன்புருவேல் கோரிக்கை

யாழ்ப்பாணம்.செப்.19

யாழ்ப்பாண நகரின் தந்திரரோபாய அபிவிருத்திக்கான வாகனப் போக்குவரத்து கணக்கெடுப்புக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீடமூத்தவிரிவுரையாளர் கலாநிதி அ.அன்புருவேல் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண நகரின் வினைத் திறனான போக்குவரத்துக்காக வீதியில் பயணிக்கும் வாகனங்களின் விவரம் மற்றும் பயணிகளின் போக்குவரத்து முறைகள் பற்றி தகவல் திரட்டும் பணியை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் பொறியியற் பீடம் பொறுப்பேற்றுள்ளது.

தந்திரரோபாய நகர அபிவிருத்தி திட்டத்தின் திட்ட முகாமைத்துவ பிரிவானது தகவல் சேகரிக்கும் பொறுப்பை எமக்குத் தந்துள்ளது. யாழ்ப்பாணத்தின் நகர்ப் பகுதி ,மாநகர சபையின் பகுதி மற்றும் முக்கியமான சாலைகளில் குறித்த நேரத்தில் செல்லும் வாகனங்கள் பற்றிய விவரங்களை சேகரிக்கமாணவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பயணிகளிடம் அவர்கள் போக்குவரத்து சார்பான கேள்விகளையும் கேட்கின்றனர். இதற்காக 23 நிமிடங்களே செலவாகும். அவ்வாறு திரட்டும் தகவல்களின் அடிப்படையில் யாழ்ப்பாண நகர போக்குவரத்து துறை அபிவிருத்திகளை பரிசீலித்து போக்குவரத்துத் துறையை ,வலையமைப்பை விரிவாக்க முடியும். இரண்டு மாத காலத்துக்கு 4 கட்டங்களாக இந்தச் செயற்பாடு நடைபெறவுள்ளது. தகவல் திரட்டும் செயற்பாட்டுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ற-ரி)

அச்சுவேலி ப.நோ.கூ. சங்கத்துக்கு மூவர் கொண்ட நெறியாளர் குழு

அச்சுவேலி, செப்.19

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய தலைவர் உட்பட மூன்றுபேர் நெறியாளர்களாக மாகாண கூட்டுறவு ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனங்கள் 2017.09.15ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன என மாகாண ஆணையாளர் க.சிவகரன் அறிவித்துள்ளார்.

புதிய தலைவராக கந்தையா வைத்திநாதன் (ஓய்வுநிலை கிராம அலுவலர்), சிறுப்பிட்டி கந்தசாமி கேதீஸ்வரன் (இடைக்காடு), சுவாந்தன் கமலநாதன் (புத்தூர்) ஆகியோரே நெறியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏழுபேர் கொண்ட நெறியாளர் குழுவின் பதவிக்காலம் கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. எனினும், பதவிக்காலம் முடிவடைந்த பின்னரும் நெறியாளர்குழு செயற்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டு வந்தது.

இந்த நிலையில் புதிய தலைவர் உட்பட மூன்றுபேரை நெறியாளர்களாக ஆணையாளர் நியமித்துள்ளார்.

ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் 2018.03.14ஆம் திகதிவரை செல்லுபடியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆறுமாத காலப்பகுதிக்குள்ளே கிளைக் குழுத்தேர்தல்கள் நடத்தப்பட்டு கூட்டுறவு சனநாயக நடைமுறையின் பிரகாரம் புதிய பொதுச்சபை உறுப்பினர்களின் ஒப்புதலுடன் கூடிய நெறியாளர்குழு தெரிவு செய்யப்படலாம் எனக் கூறப்படுகின்றது. (ய-11)

கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

	பன்னார்	கிளிநொச்சி	புருத்தித்துறை	சாவகச்சேரி
இறால்	600	700	1000	1000
நண்டு	400	400	600	400
கணவாய்	800	600	800	1000
பாரை	600	500	700	800
சுறா	600	700	1000	–
சீலா	400	400	500	500
விளை	600	400	500	–
முரல்	350	350	400	500
கும்பிளா	350	300	400	400
கிளாக்கன்	800	–	600	–
ஓரா	350	300	450	400
திரளி	250	200	200	100
நகரை	250	150	400	–
சூடை	150	100	200	150
ஒட்டி	200	200	300	300
திருக்கை	350	200	400	400
மதனம்	250	150	250	500
கொய்	150	70	80	100
பாலை	150	200	500	500
வாளை	150	200	400	400

அல்லாரையில் கலந்துரையாடல்

தென்மராட்சி, செப்.18

சாவகச்சேரி பிரதேசசபையால் அபிவிருத்தித் தேவைகளை அடையாளப்படுத்துதல் மற்றும் முன்னுரிமைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல்கள் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தவுள்ளது.

முதலாவது கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு அல்லாரை பொதுமண்டபத்தில் நடைபெறும் என பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் அல்லாரை கிராம மக்கள் கலந்துகொண்டு மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு முன்னுரிமைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

புத்தூரில் மூன்று குளங்கள் சீரமைப்பு

அச்சுவேலி, செப்.18

புத்தூர் பெரும்பாக கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட மூன்று குளங்கள் 19 லட்சம் செலவின் சீரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

தம்பாலை கதிரிப்பாய் உறளைக்குளம் 8 லட்சம் ரூபா செலவிலும், பத்தமேனி தீர்த்தாங்குளம் 6 லட்சம் ரூபா செலவிலும், சிறுப்பிட்டி கிழக்கில் உள்ள களந்திட்டிக் குளம் 5 லட்சம் ரூபா செலவிலும் திருத்தி அமைக்கப்படுகின்றன.

கதிரிப்பாய் உறளைக்குளத்தை கடந்த முப்பது வருடங்களாக பற்றைகள் வளர்ந்து மூடிவிட்டன. மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தது. இதனைத் திருத்தி அமைப்பதற்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு எட்டுலட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

பத்தமேனி தீர்த்தாங்குளம் திருத்த வேலைக்கான 6 லட்சம் ரூபா நிதியை தேசிய நல்லிணக்கச் செயலணி வழங்கியது. களந்திட்டி குளத்திற்கு அரை மில்லியன் ரூபா அபிவிருத்தி நிதி என்ற திட்டத்தின் கீழ், சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் திருத்தி அமைக்கப்படுகின்றது. (ய-11)

இது புதுசு
பெண்களுக்கான நவீன காலணி வகைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

மருத்துவ சிறப்புப் பிரிவுகளை சீரமைப்பதற்கு நடவடிக்கை

வடக்கு மாகாண அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.19

வடக்கு மாகாணத்தில் உள்ள மருத்துவமனைகளில் சிறப்பு மருத்துவப் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மாகாணத்தில்உள்ளமருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கு அமைச்சு பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடிவருகின்றது. சிலமருத்துவமனைகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஏனைய மருத்துவமனைகளில் புதிதாகப் பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டிய தேவை உள்ளது.

சிலமருத்துவமனைகளில்சிறப்புமருத்துவப் பிரிவுகளை அபிவிருத்தி செய்வதற்குவெளிநாட்டுக்கடன்உதவிகிடைத்துள்ளது. இதற்கு திட்டமிடல் அமைச்சினால் அனுமதி வழங்கபட்டுள்ளது.

14 ஆயிரம் மில்லியன் ரூபா நிதியில் செயற்படுத்தப்படவுள்ள இந்த அபிவிருத்தித் திட்டத்துக்கு நெதர்லாந்து 9 ஆயிரத்து 388 மில்லியன் ரூபா நிதியைக் கடனாக வழங்க முன் வந்துள்ளது. மிகுதிப் பணம்கொழும்புஅமைச்சின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.. கடனாக வழங்கப்படும் நிதியானது கொழும்பு அரசினால் மீளக்கையளிக்கப்படும்.

இந்த செயற்திட்டத்தின் கீழ் மாங்குளம் மருத்துவமனைக்கு அவசரசிகிச்சைப் பிரிவு, மருத்துவ மறுவாழ்வு நிலையம், பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, கிளிநொச்சி மருத்துவமனைக்கு பெண்களுக்கான சிறப்பு மருத்துவப்பிரிவு, வவுனியாமருத்துவமனைக்கு இருதயம் மற்றும் சிறுநீரக நோய்ப் பிரிவு, மன்னார் மருத்துவமனைக்குசத்திரசிகிச்சைமற்றும்அவசர சிகிச்சை பிரிவு என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு ரூ.20 ஆயிரம் தண்டம்

கிளிநொச்சி, செப். 19

14 போத்தல் கசிப்பு வைத்திருந்தபெண்ணுக்கு20ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிமன்று, 10நாள்கள்சமூக சேவை செய்ய வேண்டும் என்றும்பணித்தது.

இந்த வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.

கிளிநொச்சிப் பகுதியில் 14 போத்தல் கசிப்பை உடமையில் வைத்திருந்ததாகக் குறித்த பெண் மீது குற்றஞ் சாட்டப்பட்டுக்கைதுசெய்யப்பட்டார்.

அவர் கிளிநொச்சி நீதி மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

விசாரணையின்போது குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து20ஆயிரம் ரூபா தண்டம் விதிக்க ப்பட்டது. 10 நாள் சமூகசேவை செய்ய வேண்டும் என்றும் நீதிமன்றுபணித்தது. (4-6)

சுமணன் கொலை வழக்கிலுள்ள பொலிஸாரின் மறியல் நீடிப்பு

கிளிநொச்சி, செப். 19

சுன்னாகம் பொலிஸ் தடுப்பில்இளைஞர்சித்திரவதையின் பின்னர் கொல்லப்பட்டவழக்கில், விளக்கமறியலில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐந்து பேருக்கும் எதிர்வரும் 2ஆம்திகதிவரைவிளக்கமறியல்நீடிக்கப்பட்டது.

இந்த வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது.

சந்தேகநபர்கள் ஐவரும் நீதிமன்றில்முற்படுத்தப்பட்டனர். அதன்போதேவிளக்கமறியல்நீடிக்கப்பட்டது.

புன்னாலைகட்டுவனைச் சேர்ந்தசிறீஸ்கந்தராசாசுமணன்(வயது-28)2011ஆம் ஆண்டுநவம்பர்மாதம்24 ஆம் திகதி சுன்னாகம் பொலிஸாரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர், 3 நாள்களின் பின்னர் இரணைமடுக் குளத்திலிருந்து சடலமாக மீட்கப் பட்டிருந்தார். பொலிஸாரிடமிருந்து தப்பியோடி குளத்துக்குள்விழுந்துஉயிரிழந்தார் என்று முன்னர் பொலிஸாரால்கூறப்பட்டுவழக்கு முடிவுறுத்தப்பட்டது.

சுமணனுடன் கைது செய்யப்பட்டவர்கள் மீது சுமத்தப்பட்டதிருட்டுவழக்குமல்லாகம் நீதிமன்றில் இடம் பெற்றுவருகிறது. அதன் போதே சுமணன் சித்திரவதைசெய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்என்றுநீதிமன்றில்தெரிவித்தனர்.

அதனையடுத்து அப்போதையநிலையப்பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டாரா உட்பட்ட 8 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சித்திரவதை தொடர்பான விசாரணையின்போது8பொலிஸ்உத்தியோகத்தர்களில்6பொலிஸார் குற்றவாளிகளாகக் இனங்காணப்பட்டு கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. கொலைக் குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்குகிளிநொச்சிநீதிமன்றில்இடம்பெற்று அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. (4-6)

நீதிமன்றின் அறிவுறுத்தலை மீறி

வாகனம்செலுத்தியசிறுவன் சான்றுபெற்றபாடசாலையில்

கிளிநொச்சி, செப். 19

நீதிமன்றின் அறிவுறுத்தலைப் பின்பற்றாது, சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்திசென்றசிறுவனைச்சான்றுபெற்ற பாடசாலையில் சேர்க்குமாறு கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டது.

கிளிநொச்சி நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கிளிநொச்சியைச் சேர்ந்த சிறுவனே சான்று பெற்ற பாடசாலையில்சேர்க்கப்பட்டார். சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்திவிபத்தை ஏற்படுத்தினார்என்றுகுறித்தசிறுவனுக்கு எதிராகக் கிளிநொச்சிப் போக்குவரத்து பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். அவரை நீதிமன்றில்முற்படுத்தியபோது தன்மீதான குற்றத்தை ஏற்றுக் கொண்டார். தவிர, அவர் ஏற்கனவே சிறிய வகை உழவியந்திரத்தில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். குற்றத்தை ஏற்றுக் கொண்டார். சிறுவன்என்ற காரணத்தால் வாகனங்களைச் செலுத்தக் கூடாது என்றுஅறிவுறுத்தல்வழங்கப்பட்டு மன்னிப்பில் விடுவிக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் திருந்தவில்லை. நீதிமன்றின் அறிவுறுத்தலைப் பின்பற்ற வில்லை. சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி மீண்டும்வானத்தைச்செலுத்திய தோடு விபத்தையும் ஏற்படுத்தியுள்ளார். இதனால் அவரை அரசசான்றுபெற்ற பாடசாலையில் சேர்க்குமாறு கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டார். (4-6)

சுமந்திரன் மீதான கொலை முயற்சி வழக்கில்

சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிப்பு போதைப் பொருள் விசாரணை நிறைவு

கிளிநொச்சி, செப். 19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் மீதான கொலை முயற்சி வழக்கில் கைது செய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 2 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மீது சுமத்தப்பட்ட கொலை முயற்சி தொடர்பான விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டு அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் இடம் பெற்று வருகிறது.

அவர்கள் மீது சுமத்தப்பட்ட போதைப்பொருள் தொடர்பான வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் இடம்பெற்றுவருகிறது.

அது பற்றிய விசாரணை நிறைவடைந்துள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு விசாரணை அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் மன்றில் நேற்றுத் தெரிவித்தனர்.

பிணை தொடர்பிலான கோரிக்கைகளை யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் பெற்றுக்கொள்ளுமாறும் நீதிமன்று சந்தேகநபர்களுக்கு அறிவுறுத்தியது. அவர்களுக்கு எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டது. (4-6)

கோடாவுடன் கைதானவர் செலுத்தினார் ரூ.80 ஆயிரம்

கிளிநொச்சி, செப். 19

5பெரல்கோடாவுடன்கைதுசெய்யப்பட்டவருக்கு80ஆயிரம்ரூபா தண்டம் விதித்த நீதிமன்று, 40 நாள்கள் சமூகசேவை செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

கிளிநொச்சிகண்டாவளைப்பகுதியில்குடும்பத்தலைவர் ஒருவர்5 பெரல் கோடாவுடன் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டார்.

அவர் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்றுமுற்படுத்தப்பட்டார். அவர் சார்பில்மன்றில்முற்பட்டசட்டத்தரணி, சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார். அதனையடுத்து அவருக்கு 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி அவர் 40 நாள்கள் சமூகசேவை செய்ய வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது. (4-6)

யாழ். கிளிநொச்சியில் தொழிலாளர்கள் சுரண்டப்படுகின்றார்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் கவலை

யாழ்ப்பாணம், செப்.19

யாழ்ப்பாணம், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில்தொழிலாளர்கள்தமது உரிமைகள், சலுகைகள்மற்றும்சட்டங்கள் என எதையுமே அறியாதவர்களாக இருக்கின்றார்கள்.

இந்தச் செயலால் முதலாளி வர்க்கம் தொளிலாளர்களைச் சுரண்டுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

பன்னாட்டுதொழிலாளர்சங்கமும், சிறிலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கமும் இணைந்து நடத்திய விழிப்புணர்வுக் கல்விக்கருத்தரங்கு அண்யாமையில் யாழ்ப்பாணம்நாவலர்கலாசாரமண்டபத்தில்நடைபெற்றது. அங்கஜன்இராமநாதன்இதனைஏற்பாடுசெய்திருந்தார். இதில்முதன்மைவிருந்தினராகக்கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும்தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகளின் காலப்பகுதியில் நல்ல கட்டமைப்புகள் காணப்பட்டன. அவர்களது ஆட்சிக்காலத்தில் இவ்வாறானசூழ்நிலைகள்அரிதாகவேகாணப்பட்டன.

ஏனெனில், அவர்களது கட்டமைப்புகள் திடமானவையாகவும், தெளிவானவையாகவும் காணப்பட்டன. ஆனால் இப்போது எமது மாவட்டங்களில் உள்ள தொழிலாளர்கள்முதலாளிவர்க்கத்தினரால் சுரண்டப்படுகின்றனர்.

எனவே அவர்கள் தமது உரிமைகள் பற்றித் தெரிந்திருக்கவேண்டும் என்றார்.

இந்த நிகழ்வில் தொழிலாளர்கள், பிரதி ஆணையாளர் திருமதி ஜெகதீஸ்வரி வளவாளர்கள் மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்கள் உட்பட சுமார் இருநூறுக்கும்மேற்பட்டவர்கள்கலந்துகொண்டனர். (ய-35)

மணல்ஏற்றியசாரதிகளுக்கு ரூ.ஒரு லட்சத்து 60 ஆயிரம் தண்டம் விதித்தது நீதிமன்று

கிளிநொச்சி, செப். 19

கிளிநொச்சி பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் ஏற்றியமை மற்றும் அகழ்ந்து ஏற்றியமைக்காக கிளிநொச்சி நீதிமன்று நான்கு சாரதிகளுக்குஒருலட்சத்து60ஆயிரம்ரூபாதண்டம்விதித்தது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இவ்வாறுமணல்ஏற்றியகுற்றச்சாட்டில்மூன்றுஉழவியந்திர சாரதிகளும் ஒரு டிப்பர் வாகன சாரதியும் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சிநீதிமன்றில்அவர்கள்நேற்றுமுற்படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் தம்மீதான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டனர். இரண்டு உழவு இயந்திர சாரதிகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபாவும் ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. டிப்பர் வாகன சாரதிக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்று உத்தரவிட்டது. (4-6)

ஆட்டிசம் கொள்கை வரைவு வடக்கு மாகாணசபையின் அடுத்த அமர்வில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், செப்.19

ஆட்டிசம் கொள்கை தொடர்பான வரைவு வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் சமர்ப்பிக்கப்படும் என்று ஆட்டிசம் கொள்கைக் செயற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் 5 ஆண்டு செயற்பாடாக ஆட்டிசம் கொள்கை வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆட்டிசம் நோய் தொடர்புடையவர்களை இனம் கண்டு அவர்களுக்கான அனைத்து சிகிச்சை முறைகளையும், பயிற்சிகளையும் வழங்கவேண்டும். இதற்காக அனைத்து அமைச்சுகளின் ஒத்துழைப்போடும் ஆட்டிசம் கொள்கை வரையப்பட்டது. அனைவரின் கருத்துகளை பெறுவதற்கும், கருத்துகளை முன்வைப்பதற்கும், வரைவு வெளியிடப்பட்டு 5 ஆண்டுக்கு கொள்கையாக தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அனைத்து துறையினரினதும் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியைப் பெறும் பொருட்டு அந்த வரைவு வடக்கு மாகாணசபையின் அடுத்த அமர்வில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது.

புதிதாக ஒரு கொள்கையை வரைந்து அதனை நடைமுறைப்படுத்துவது என்பது கடினமான விடயம். ஆரம்பத்தில் ஆட்டிசம் கொள்கையைத் தயாரிப்பதில் இருந்த ஆர்வம் தற்போது சற்றுக் குறைந்துள்ளத . இதற்கு உத்தியோகத் நர்களின் வேலைப்பளு காரணமாக இருக்கலாம். என்றாலும் அதனைக்கைவிடமுடியாது. அத்துடன் இவ்வாறு உளவளம் சார்ந்த செயல் திட்டங்களை முன்னெடுப்பதற்கு துறைசார்ந்தவர்களும் குறைவாகவே இருக்கின்றனர். இதனை நடைமுறைப்படுத்த முன்வரும் ஆள்களின் எண்ணிக்கையும் குறைவே. எனவே, இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் ஆட்டிசம் கொள்கை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

முல்லைத்தீவுக்கு ஒதுக்கப்பட்ட கட்டுநிதி வந்துசேராததால் அபிவிருத்தியில் தாமதம்

இதுவரை 38 வீதமே கிடைத்துள்ளது மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.19

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட மொத்தக் கட்டு நிதியில் இதுவரையும் 38 வீதமான நிதி மட்டுமே கிடைத்துள்ளது என மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்டத்துக்கான மொத்த ஒதுக்கீட்டின் பெரும்பகுதி நிதி கிடைக்கவில்லை. இதன்காரணமாக பல திட்டங்கள் தாமதமடைகின்றன எனக் கூறப்படுவது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

மாவட்டத்துக்கு வீட்டுத்திட்டம், வாழ்வாதாரம், கழிப்பறை வசதி எனப் பல திட்டங்கள் வரவு செலவுத் திட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு அனுமதிக்கப்பட்ட திட்டங்களுக்கே இதுவரை நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக சில திட்டங்களுக்கு 40 வீதமாகவும், ஒரு சில திட்டங்களுக்கு 50 வீதமும் கிடைத்துள்ளன. மேலும் பல திட்டங்களுக்கு 25 வீதமான நிதிகள் கிடைத்த தன்மையும் காணப்படுகின்றது. அந்தவகையில் ஒட்டுமொத்தமாக இதுவரை 38 வீத நிதியே கிடைத்துள்ளது என்றார்.

இலங்கையிலேயே வறுமையில் முதலிடம் பிடிக்கும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அதிக நிதி வழங்கப்படவேண்டும்.

இதனை உலக ஸ்தாபனங்கள் முதல் பல அமைப்புக்களும் சுட்டிக் காட்டுகின்றன. இந்தநிலையில் அனுமதிக்கப்பட்ட நிதியின் 40 வீதமான நிதிகூட இதுவரை வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுவது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (ய-101)

மக்களின் பங்களிப்புடன் உட்கட்டுமான அபிவிருத்தி

உள்ளூராட்சி அமைச்சு தகவல்

மக்களின் ஒருங்கிணைந்த பங்கேற்பு திட்டம் மூலம் உள்ளூராட்சி சபைக்குட்பட்ட உட்கட்டுமானத் தெரிவுகள் கிராம மட்டத்தில் இடம் பெறவுள்ளன என வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வடக்கு மாகாணத்தில 32 உள்ளூராட்சி சபைகளில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மேற்படி திட்டங்கள் முன் வைக்கப்படவுள்ளன.

மாநகரசபை, நகரசபை மற்றம் பிரதேசசபை என ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கும் கிராமமட்டத்திலான பங்கேற்புத் திட்டமும், அதனோடு இணைந்ததாக பிரதேசமட்ட மக்கள் பங்கேற்பு திட்டமும் தயாரிக்கப்படவுள்ளன. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட சபை வீதிகள், கால்வாய்கள், மதகுகள், சனசமூக நிலைய மறுசீரமைப்பு, திண்மக்கழிவகற்றல், பொருத்தமான குடி தண்ணீர்க் கிணறுகள் அமைத்தல், மயான அபிவிருத்திக் கேணிகள் மறுசீரமைப்பு உட்பட பல அபிவிருத்தி முன்மொழிவுகள் மக்களால் முன்மொழியப்படவுள்ளன. இவ்வாறான கிராம மட்டத்திலான அபிவிருத்தித் திட்டங்கள் 2018 இல் இருந்து நான்கு ஆண்டுகள் வலுவில் இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. (ய-50)

உள்ளூராட்சி டிப்ளோமா பாடநெறியில் 25 அலுவலர்கள் வடக்கில் சித்தி

யாழ்ப்பாணம், செப்.19

இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனத்தினால் நடத்தப்பட்ட உள்ளூராட்சி உயர் டிப்ளோமா பாடநெறியில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 25 பேர் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த 25 அரச அலுவலர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகும் என இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனப் பணிப்பாளர் சஜீவ சமரவீர அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ரூபா2 மில்லியன் நிதியில் நன்னீர்க் குளங்களில் மீன் குஞ்சு பொரிக்கும் இடங்கள் அமைப்பு

யாழ்ப்பாணம், செப்.19

வடக்கு மாகாணத்தில் 2 மில்லியன் ரூபா செலவில் நன்னீர் மீன் குஞ்சுகள் பொரிக்க வைக்கும் இடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மூங்கில் மரங்களைப் பயன்படுத்தி மிகவும் நுட்பமான முறையில் மீன் குஞ்சு பொரிக்கும் இடங்கள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

நீர் நிரப்பப்பட்ட பெட்டிகளை நீரில் மிதக்கக் கூடியவாறு பொருத்தி, அதில் மீன் குஞ்சுகள் பொரிக்கக் கூடிய வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் இதுவரை 30 வீதமான செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் வடக்கு மாகாண நன்நீர் மீன்பிடி அமைச்சு மேலும் தெரிவித்தாவது:

வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு செயற் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனொரு கட்டமாக மீன் குஞ்சுகள் குளத்தில் விடும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குளத்தில் விடப்படும் மீன் குஞ்சுகள் 2 ரூபா வீதம் கொள்வனவு செய்யப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளின் போது மீன் குஞ்சுகள் கொள்வனவு செய்யவதற்கான கால எல்லைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

குளத்தில் மீன் குஞ்சுகளை விடுவதற்கு ஏற்ற காலநிலை வரும்போது சிலவேளைகளில் மீன்குஞ்சுகள் கிடைக்காமல் போகின்றன.

குளங்களின் நீர் மட்டம், நீர் ஓட்டம் என்பன கவனத்தில் கொள்ளப்பட்டு குளத்தில் மீன்கள் விடப்படுகின்றன. மீன் குஞ்சுகளை விடுவ தற்குரிய நிலைமை எல்லாக் காலங்களிலும் காணப்படுவதில்லை.

ஆகவே இதனைக் கருத்தில்கொண்டு குளத்தில் மீன் குஞ்சுகள் விடுவதற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மீன்குஞ்சுகளை அதிகமாக உற்பத்தி செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

தும்புசார் கைப்பணியாளர்களுக்கு விரைவில் தொழில்நுட்பப் பயிற்சி

மாகாண தொழில் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், செப்.19

வடக்கு மாகாணத்தில் தும்பு சார்ந்த உற்பத்திப் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்குத் தும்புத் தொழிற்சாலைகளில் பணியாற்றுவதற்கு ஏற்ற தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகள் வழங்கபடவுள்ளன என மாகாண தொழிற்துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்தாவது:

வடக்கு மாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆயிரத்து 42 பேருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இது கைப்பணிபொருள் உற்பத்தி சார்ந்த பயிற்சிகளாகவும், சிறிய சுய தொழிலை மேற்கொள்ளக் கூடியதான குறுகிய காலப் பயிற்சிகளாகவும் உள்ளன. இந்தப் பயிற்சிகள் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தப் பயன்படும். தும்பு சார்ந்த உற்பத்திகள் தினைக்களத்தின் கீழ் உள்ள தொழிற்சாலைகளில் சிறப்பாக மேற்கொள்ளுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எமது மாகாணத்தில் தும்பு சார்ந்த உற்பத்தியை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மிகவும் குறைவு. ஆகவே தும்புசார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளுவதற்கும், ஏற்றுமதி செய்யவதற்கு இது அதிக வாய்ப்பினைப் பெற்றுத்தரும். குறிப்பாக தும்பின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தூரிகை சார்ந்த உற்பத்திகள் மக்களின் மத்தியில் தேவையாகஉள்ளது. இதற்கு அமைவாக தும்புசார்ந்த உற்பத்திகளை மேற்கொள்ளக்கூடிய நவீன இயந்திரங்கள் பொருத்தப்படவுள்ளன. தற்போது 22 பேருக்கு தும்பு உற்பத்தி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நவீன இயந்திரங்களைக் கையாளுவதற்கு பயிற்சிகள் வழங்கப்பட வுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

புதிய அரசமைப்பின்

இடைக்கால அறிக்கையை அங்கீகரிக்கவேண்டாம்

சபைக்கு வரமுன்னரே சன்னதம் கொள்கிறது விமல் அணி

கொழும்பு, செப். 19

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவைக் கைவிடுமாறும், வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை அங்கீகரிக்க வேண்டாம் எனக் கோரியும் விமல்வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அரச தலைவர் மைத்திரிபாலவுக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளது.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து சகல ஆள்களையும் பாதுகாக்கும் பன்னாட்டுச் சமவாயச் சட்ட வரைவானது படையினரைப் பலிக்கடாவாக்கும் நோக்கிலேயே கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டவரைவுநாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்பட்சத்தில் அது சனநாயகத்துக்கு எதிரான செயலாகவே கருதப்படும். அதை நிறைவேற்றும் முயற்சியைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காணாமற்போனோர் தொடர்பிலான பன்னாட்டுச் சமவாய சட்டவரைவில் கையொப்பமிட்டு அதை நடைமுறைப்படுத்துவதிலிருந்து 54 உலக நாடுகள் பின்வாங்கியிருக்கின்றன.

மேற்படி பிரகடனத்தில் இலங்கை கையொப்பமிட்டுள்ளது. இந்தச்சட்டவரைவு இலங்கைக்கு அச்சுறுத்தலாகவே அமையும். இது படையினருக்குப் பாதகமாகவும் அமையுமென்பதால் அதை விவாதிக்கவேண்டாம் எனக் கோரிக்கைவிடுக்கின்றோம்.

அரசமைப்பு சபையின் வழிநடத்தும் குழுவின் இடைக்கால அறிக்கை நாளை மறுதினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனக் கூறப்பட்டாலும் அது உண்மையான அறிக்கை அல்ல. தலைமை அமைச்சரால் மேற்படி குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அறிக்கையே முன்வைக்கப்படவுள்ளது.

இதில் அச்சுறுத்தலான விடயங்கள் இருக்கின்றன, நாட்டைக் கூறுபோடும் யோசனைகள்முன்வைக்கப்பட்டுள்ளன என்பதில் சந்தேகம் இல்லை. கூட்டாட்சியை மையப்படுத்தியே தயாரிப்பு இடம்பெற்றுள்ளது. இதையும் நீங்கள் (ஜனாதிபதி) தடுக்கவேண்டும் - என்றுள்ளது. (5)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட முடியாது

முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

கொழும்பு, செப். 19

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன்இணைந்து போட்டியிட முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதன் மூலமே முஸ்லிம் காங்கிரஸ் கூடுதலான ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும். எனவே அந்தக் கட்சியுடன் சேர்வதுதான் பொருத்தமாகும். இவ்வாறு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட மையக் குழு உறுப்பினருமான கலீல் தெரிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்டச் செயற்குழுக் கூட்டம் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்தாவது:

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டுமாயின் மூன்று மாவட்டங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய வேண்டும். நமது எதிரிகள் முழுமையாகத் தோற்கின்ற நிலை இதன் மூலம் உருவாகும். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இந்த நாட்டு சிறுபான்மையின முஸ்லிம்களின் உரிமையை வென்றெடுக்கும் இயக்கமாகும். இந்த இயக்கத்தைப் பதவி ஆசை பிடித்தவர்களால் ஒருபோதும் அழித்துவிட முடியாது.

கொழும்பு அரசிலும், மாகாணத்திலும் ஆட்சியில் இருக்கின்றோம். மக்களுக்கான வேலைத்திட்டங்களைக் கட்சியின் பதவியில் உள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், தவிசாளர்கள் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இன்று கட்சி ஆதரவாளர்கள் பலரும் விரக்தி நிலையில் உள்ளனர். தங்களுக்குக் கிடைக்கின்ற வசதிகளையும், வரப்பிரசாதங்களையும் கட்சிப் போராளிகளின் நலனில் பயன்படுத்தாது இருக்கின்றனர்.

குறிப்பிட்ட சிலர்தான் அதிகாரப் பதவியிலும், கட்சியின் அமைப்பாளர் பதவியிலும் இருப்பதால் கட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியாது.

எல்லோருக்கும் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். எல்லாம் அவர்கள்தான் என்ற நிலையை மாற்றியமைக்கப்பட வேண்டும். நமது தலைவரின் கரங்களைப் பலப்படுத்திக் கட்சியை அழிக்க நினைக்கும் சதிகாரர்களுக்குத் தகுந்த பாடத்தைப் புகட்ட கட்சிப் போராளிகள் களத்தில் இறங்க வேண்டும் - என்றார். (5)

ஐ.தே.கவின் மையக் குழு அடுத்த வாரம் கூடுகிறது

கொழும்பு, செப். 19

ஐக்கிய தேசியக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிறிகொத்தவில் அடுத்த வாரம் கூடவுள்ளது.

கட்சியின் 71ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கான ஏற்பாடுகள் குறித்தும், சமகால அரசியல் நிலவரங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடுவதற்காகவே மையக் குழு கூடவுள்ளது.

ஐ.தே.கவின் 71ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கடந்த 11ஆம் திகதி இரத்தினபுரியில் நடத்துவதற்கு முன்னதாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும், சீரற்ற காலநிலை காரணமாக மாநாடு பிற்போடப்பட்டது. இந்த நிலையிலேயே மாநாட்டுக்கான திகதியைத் தீர்மானித்தல், நடத்துதல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக மையச் செயற்குழுக் கூட்டத்தில் இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது. தேர்தல் சம்பந்தமாகவும் இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மையச் செயற்குழு உறுப்பினர் தெரிவித்தார். (5)

அப்பாவியின் உயிரைப் பறித்தது மின் ஊழியர்களின் புறக்கணிப்பு

கொழும்பு, செப். 19

திடீரென ஏற்பட்ட மாரடைப்புக் காரணமாக ஹிங்குரான்கொட அரச மருத்துவமனைக்குக் கடந்த வியாழக்கிழமை கொண்டு வரப்பட்ட நோயாளியொருவர் அந்த மருத்துவமனை இருளில் மூழ்கியிருந்ததால் பொலநறுவை மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போது இடைவழியில் உயிரிழந்துள்ளார்.

ஹிங்குரான்கொட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் பொதுசன சுகாதார உத்தியோகத்தராகப் பணிபுரிந்த எம்.ஜி.சுனில் கருணாரத்ன (வயது - 56) என்பவருக்கே இந்தக் கதி ஏற்பட்டிருக்கிறது.

ஹிங்குரான்கொட குமாரகம பிரதேசத்தில் தனது குடும்பத்துடன் வசித்துவந்த இவருக்குக் கடந்த 14ஆம் திகதி அதிகாலை மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. ஓட்டோவொன்றின் மூலம் மூன்று கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ள ஹிங்குரான்கொட அரச மருத்துவமனைக்கு அவர் கொண்டுசெல்லப்பட்டபோது மருத்துவமனையில் மின் தடை ஏற்பட்டிருந்தது.

மருத்துவ நிர்வாகம் மின்சார சபைக் காரியாலயத்துக்குத் தகவல் கொடுத்திருந்தபோதிலும் மின்சார சபை ஊழியர்கள் முன்னெடுத்துவரும் வேலை நிறுத்தத்தால் மின் விநியோகம் சீர்செய்யப்படவில்லை. அங்கிருந்து சுமார் 18 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பொலநறுவை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது இடைவழியில் அவரது உயிர் பிரிந்துவிட்டது என்று அவரது மனைவி கதறியழுதவாறே தெரிவித்தார். (5)

பிரிட்டன் கறுப்புப் பட்டியலில் சைட்டம் ஏன் உள்ளடக்கப்பட்டது ?

விளக்குகிறார் சுகாதார அமைச்சர் ராஜித

கொழும்பு, செப். 19

மலாபே தனியார் மருத்துவக் கல்லூரியை இலங்கை அரச மருத்துவர் சங்கம் ஏற்றுக்கொள்ள மறுத்து வந்ததாலேயே பிரிட்டன் மருத்துவ சபை அந்த நிறுவனத்தை நிராகரித்தமைக்குக் காரணம் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய தனியார் மருத்துவ கல்லூரியான மலாபேயை, பிரிட்டன் மருத்துவச் சபை கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சர் ராஜித தெரிவித்ததாவது:

எந்தவொரு மருத்துவக் கல்லூரியும் உள்நாட்டில் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் வெளிநாடுகளிலும் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பது தெரிந்த விடயம். இலங்கை அரச மருத்துவர்களின் தொடர்ச்சியான போராட்டங்களும், அவர்கள் நீதிமன்றங்களில் சமர்ப்பித்திருக்கும் ஆட்சேபனைகளும் பிரிட்டன் மருத்துவ சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

சைட்டத்தை மூடிவிடுமாறு கோரி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வாகனப் பேரணியும் அண்மையில் கொழும்புக்கு வந்துள்ளது. அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது. இலங்கை அரச மருத்துவர் சங்கம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் இதுவும் ஒன்று. இவ்வாறான எதிர்ப்புகளாலும் தொடர் போராட்டங்களாலுமே பிரிட்டன் மருத்துவ சபை சைட்டத்தை நிராகரித்திருக்கிறதுஎன்பதுஉண்மை - என்றார். (5)

பிக்குகள் பிச்சைப் பாத்திரம் ஏந்தியதில் தவறு இல்லை

அஸ்கிரிய பீடம் கூறுகின்றது

நீதிமன்றத் தீர்ப்பில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டவர்களுக்குப் பிக்குமார்-பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிதிசேகரிப்பதில் தவறில்லை என்று அஸ்கிரிய பீடம் அறிவித்துள்ளது.

சில் துணிவிநியோக முறைகேடுகள் காரணமாக லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்குத் தண்டமும் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. தண்டத் தொகையைச் செலுத்தும் நோக்கில் பிக்குமார் சிலர் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பிக்குமாரின் நடவடிக்கை பௌத்த மதத்துக்கு இழுக்கானது என்றும் அதனை நிறுத்தத் தலையிடுமாறும் அரசியல்வாதிகள் சிலர் மகாநாயக்கர்களுக்குப் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர். இது தொடர்பாக ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்டுள்ள அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர், இந்த நடவடிக்கை பிக்குமாரின் சுய விருப்பில் மேற்கொள்ளப்படுவதால் அதனைத் தடுக்க முடியாது என்று தெரிவித்துள்ளார். பௌத்த மதத்தின் வளர்ச்சிக்கான செயற்பாடுகளை மேற்கொண்டவர்களுக்குச் சிறை மற்றும் தண்டம் விதிக்கப்பட்டுள்ளமை குறித்து அரசுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் அவர்கள் அவ்வாறு பிச்சைப் பாத்திரம் ஏந்தியுள்ளதாக மெதகம தம்மானந்த தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். (5)

வெகுவிரைவில் தனித் தமிழீழம் மலரவேண்டும்

ஜெனிவாவில் ஓங்கி ஒலித்தது வைகோவின் குரல்

வெகுவிரைவில் தனித் தமிழீழம் மலர வேண்டும் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோபாலசாமி வலியுறுத்தியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் 36ஆவது கூட்டத் தொடர் கடந்த 11ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்தக் கூட்டத் தொடரில் கலந்துகொண்டு அங்கு இடம்பெற்ற பக்க நிகழ்வில் உரையாற்றும்போதே வை.கோபாலசாமி மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார். வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் வெளியேற்றப்பட வேண்டும் எனவும் அவர் தனது உரையில் வலியுறுத்தியுள்ளார். (5)

பொறியியலாளர்களின் கொடுப்பனவுகளை நிறுத்தும்வரை போராட்டம் தொடரும்

மின்சார சபை ஊழியர்கள் திட்டவட்டம்

கொழும்பு, செப். 19

பாவனையாளர்களிடமிருந்து அறவிடப்படும் மின்கட்டணங்களிலிருந்து மின்சார சபைப் பொறியியலாளர்களுக்கு வழங்கும் 40 கோடி ரூபா கொடுப்பனவை நிறுத்தும்வரை தங்களது வேலைநிறுத்தப் போராட்டம் தொடரும் என்று இலங்கை மின்சார சபை ஊழியர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த அரசின் காலத்தில் மின்சார சபை பொறியியலாளர்களின் சம்பளம் கண்மூடித்தனமாக 70 சதவீதம் அதிகரிக்கப்பட்டது. பொறியியலாளரின் மாதாந்தச் சம்பளம் லட்சங்களாக உயர்ந்திருக்கிறது. இந்த அசாதாரணக் கொடுப்பனவை நிறுத்துமாறு முன்னர் கோரிக்கை விடுக்கப்பட்டபோது சாதாரண ஊழியர்களின் சம்பளம் 8 வீதம் வரை வெறும் கண்துடைப்பாக உயர்த்தப்பட்டதே தவிர, கொழுத்த சம்பளம் வாங்கும் பொறியியலாளர்கள் அதே சுகபோகத்தை இன்றுவரை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு மாதாந்தம் வழங்கும் பிரம்மாண்டமான தொகையான 40 கோடி ரூபாவை பாவனையாளர்களுக்கு நிவாரணமாக வழங்கலாம். ஆயிரத்து 200 பொறியியலாளர்களுக்கு வழங்கும் 40 கோடி ரூபாவை நிறுத்தினால் பாவனையாளர்களின் மின்கட்டணங்களை 50 வீதம் வரை குறைக்கலாம் என்று இலங்கை மின்சார சபைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் உறுப்பினர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

(5)

அரசமைப்புக்கு முன்னதான தேர்தல்கள் மகிந்த அணிக்கு சாதகமாகினால் ஆபத்து

அதனாலேயே 20ஐ ஆதரித்தோம் என்கிறார் தமிழரசுச் செயலாளர்



கொழும்பு, செப். 19

புதிய அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்புக்கு முன்னதாக ஏதாவது தேர்தல் நடைபெற்று, அதில் மகிந்த அணிவெற்றி பெற்றால், புதிய அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்பில் அது பாதிப்பை ஏற்படுத்தும். இதனை உணர்ந்தே 20ஆவது திருத்தத்துக்கு கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது.

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

20ஆவது திருத்தத்தில், மாகாணசபைகளின் கலைப்பு தொடர்பாக அறிமுகப்படுத்த இருக்கின்ற மாற்றம் அதாவது மாகாணசபைகளைக் கலைக்கின்ற அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்குக் கையளிப்பது என்பது மாகாணசபையின் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்குக் கையளிப்பதாக இருந்தது. இதற்கு நாங்கள் எவரும் உடன்படத் தயாரில்லை. இது தொடர்பான திருத்தம் செய்யப்பட வேண்டும். மாகாண சபைகளைக் கலைக்கின்ற அதிகாரம் தற்போது உள்ளபடியே இருக்கும் வகையில் அந்தத் திருத்தம் அமைய வேண்டும் என்று விரும்பினோம். ஏனைய தேர்தல் சீர்த்திருத்தம் தொடர்பான விடயங்களில் எங்களுக்கு உடன்பாடு இருந்தது.

கலையவிருக்கின்ற மாகாணசபைகளைக் கலைத்துவிட்டு தேர்தலை தள்ளிப் போட்டு மாகாண நிர்வாகத்தை ஆளுநரின் கைகளுக்கு ஒப்படைத்தல் அல்லது மாகாணசபைகளைக் கலைக்காமல் காலநீடிப்புச் செய்தல் என்ற இரு விடயங்களின் மூலமே மேற்கொள்ள முடியும். இதில் நாங்கள் எந்த விடயத்தை ஏற்றுக் கொள்வதென்ற கேள்வி எழுந்தது. இதிலே இரண்டாவது தெரிவே எமக்குப் பொருத்தமாகத் தென்பட்டது. இது ஒருவகையில் மக்கள் வழங்கிய ஆணைக்கு மேலாகச் செயற்படுகின்ற ஒருசெயற்பாடுதான். இருப்பினும் மேற்குறித்த நிலைமைகளை ஆராயும் போது பொருத்தமாக இருப்பது இந்த விடயமே.

அத்தோடு இதற்கு மேலாக அடுத்த ஆண்டிலே மிக முக்கியமான இரண்டு நிகழ்வுகள் நடைபெற வேண்டுமென நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தற்போது இடைக்கால அறிக்கை வரை முன்னேறி இருக்கின்ற அரசமைப்பு ஒரு முழுமையான உருவத்தைப் பெற்று நாடாளுமன்றத்திலே மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட வேண்டும். அரசமைப்புக்கு மக்கள் தீர்ப்புக்கு வழங்கப்பட்டு அதிலே 50 வீதத்துக்கும் மேல் வாக்குகளைச் சாதகமாகப் பெற வேண்டும்.

இந்த முக்கியமான மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்புக்கு முன்னதாக நடைபெறுகின்ற தேர்தல்களில் அரசமைப்புக்கு எதிராக முழுமூச்சுடன் செயற்படும் மகிந்த வெற்றி வாய்ப்புகளைப் பெறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டால் அது தென்பகுதியில் புதிய அரசமைப்புக்கான மக்கள் தீர்ப்பு வழங்கப்படும் போது பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தும். இந்த அரசமைப்புக்கான மக்கள் தீர்ப்புக்கு முன்னதாக ஒரு தேர்தல் நடைபெறாமல் இருப்பது நல்லது என நாங்கள் விரும்பினோம்.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவதிலே முற்றுமுழுதாக நாடாளுமன்ற ஆளுந்தரப்பே சாதகமாகச் செயற்பட வேண்டும். எம்மிடம் உள்ளது 16 வாக்குகள் மாத்திரமே. மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளில் ஆகக் குறைந்தது 150 வாக்குகளைப் பெறுவதாக இருந்தாலும் இறுதி 134 வாக்குகளை பெற்றுத் தர வேண்டியது அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருடைய பொறுப்பாக இருக்கின்றது. இதே போன்று மக்கள் தீர்ப்பின் போது மக்களை இதற்குச் சாதகமாக வாக்களிக்கச் செய்கின்ற பொறுப்பையும் அரசே மேற்கொள்ள வேண்டும். அரசு மேற்படி பொறுப்புக்களுக்காக "ரிஸ்க்" எடுக்க இருக்கின்ற வேளையில் நாங்களும் இவ்வாறான ஒரு "ரிஸ்கை" எடுக்காமல் இந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியாது என சிந்தித்தோம்.

இந்த வகையிலே தான் கால நீடிப்பை ஓராண்டுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துவதற்கும், மாகாணசபையினுடைய கலைப்புச் செயற்பாடு தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு கையளித்திருந்த ஏற்பாட்டைத் திருத்துவதற்குமான தீர்மானத்தை சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இந்த ஆவணம் உத்தியோகபூர்வமற்றதாக இருந்த போதிலும் 20ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தில் விவாதிக்கப்படும் போது சட்டமா அதிபர் முன்மொழிந்த திருத்தம் அதிலே உள்ளடக்கப்படும் என்ற உத்தரவாதம் இருந்தது. இவற்றின் அடிப்படையிலேயே 20ஆவது திருத்தத்தை நாம் ஆதரித்தோம் - என்றார்.

(5)

கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டச் செயலகத்தில் கணக்குக் கிளையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராக கடமை புரியும் **திருமதி ஞா.சிவஜெயந்தி**
அவர்களின் அன்புத் தந்தை
சின்னப்பு நடராசபெருமாள்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.மாவட்டச் செயலக நலன்புரி கழகம்.

மரண அறிவித்தல்

கிருஸ்ணபிள்ளை பொய்யாமொழி (அருள்)

கல்வளை வீதி, சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை பொய்யாமொழி 14.09.2017 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற லலிஸ் லாலினி மற்றும் கவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புக் கணவரும் அருஷாந்தின் (பிரான்ஸ்) பாசமிகு தந்தையும் வாசுகிதேவி, தயாபரதேவி, ஜெயகுமார் (பிரான்ஸ்), தமயந்தி, மலர்விழி, வளர்மதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சற்குணம், தயாளகுமார், சகாயதேவி(பிரான்ஸ்) தர்மராஜா, குகனேசராசா, புஸ்பராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருஸ்ஷா (பிரான்ஸ்), ஜெயநிஷா (பிரான்ஸ்), சகாயினி (பிரான்ஸ்), ரஸ்மியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் முகுந்தன், அகல்யா, சஜீபன் (பிரான்ஸ்), டொறின், ஏஞ்சலின், அனுபிகா, அபினுஜா, தனுக்ஷன், தனோஜன், துஷானன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.09.2017 வியாழக்கிழமை இலங்கை நேரப்படி பி.ப ஒரு மணியளவில் Funerarium, 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்வளை வீதி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 491 0461

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சிவக்கொழுந்து சன்முகலிங்கம்

தோற்றம் 02.10.1940 — மறைவு 19.09.2013

ஆண்டுகள் நாலு ஆன போதும்
ஆறுமோ எம் துயரம்
அப்பா !
உங்கள் நினைவுகளுடன்
வாழும்

குடும்பத்தினர்.
இராஜ வீதி, கோப்பாய் தெற்கு.

விண்ணக வாழ்வின் 17 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

மண்ணில்
08.12.1948

விண்ணில்
19.09.2000

அன்புக்கு இலக்கணமாய் எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாய்
இப்பாரினில் வாழ்ந்து காட்டி எம்மைச் சிறப்புற வாழவைத்து
இறைவன் அருகிலிருந்து எமக்காக பரிந்து பேசும் எம் அன்பு அப்பாவே!
எமது வாழ்வை எம்மில் வாழ்வாக்கி காலங்கள் எவ்வளவு கடந்தாலும்
உம் அன்பு பாசத்துக்காக ஏங்கித் தவிக்கும்.....

2,இராசாவின் தோட்ட ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மியன்மாரில் இருந்துவந்த

7 பிக்குகளுக்கு கட்டுநாயக்கவில் கதவடைப்பு

மியன்மாரில் இருந்து இலங்கை வந்த பௌத்த பிக்குகளின் குழுவுக்குக் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் குடிவரவு அதிகாரிகளால் நுழை விசைவு மறுக்கப்பட்டுள்ளது.
மியன்மாரின் 7 பௌத்த பிக்குகளைக் கொண்ட குழுவே, இலங்கைக்கு நுழைய அனுமதி மறுக்கப்பட்டு கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.
ரோஹிங்ய முஸ்லிம்கள் அகதிகளாக இலங்கைக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில், மியன்மாரில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவிசைவு வழங்குவதை இடைநிறுத்த இலங்கை அரசு முன்னதாக முடிவு எடுத்திருந்தது. எனினும், அவ்வாறு முடிவு எடுக்கப்படவில்லை என்று இலங்கை அரசு கூறியிருந்தது.
அதேவேளை, கடுமையான கண்காணிப்பு நடைமுறையின் பின்னரே, மியன்மாரில் இருந்து வருவோருக்கு நுழைவிசைவு விழங்கப்படும் என்று கூறப்படுகின்றது.
இந்த நிலையிலேயே, கட்டுநாயக்க வானூர்தி நிலையத்துக்கு வந்த மியன்மார் பௌத்த பிக்குகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (5)

காணாமற்போனோர் அலுவலகத்தால் சிங்களவர்களுக்கும் நன்மையுண்டு

கலவரமடையத் தேவையில்லை என்கிறார் முன்னாள் அமைச்சர் சாந்த பண்டார

காணாமற் போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டால் சிங்கள மக்களும் அதிக நன்மையடைவர் என்றும் இந்த அலுவலகம் தமிழர்களுக்காக மாத்திரம் அமைக்கப்படாது. இந்த அலுவலகம் ஊடாகப் படையினரை பன்னாட்டுப் போர்க்குற்ற நீதிமன்றுக்கு அனுப்பும் எந்தவோர் ஏற்பாடும் இல்லை என்றும் முன்னாள் அமைச்சர் சாந்தபண்டார தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டில் 30 வருட காலமாக இடம்பெற்ற போரால் நாம் அதிக அழிவுகளை எதிர்கொண்டோம். இன, மத பேதமின்றி அனைவரும் பாதிக்கப்பட்டனர். உயிர்களை,உடைமைகளை இழந்தோம். பலர் காணாமல் போயுள்ளனர். அவர்கள் உயிருடன் இருக்கின்றனரா இல்லையா என்று எமக்குத் தெரியவில்லை. இவர்களைத் தேடுவதற்கு சரியான ஒரு முறைமை இருக்க வேண்டும். அந்தச் சரியான முறைமைதான் காணாமற்போனோர் அலுவலகம்.
இது காணாமற்போன தமிழர்களை மாத்திரம் கண்டு பிடிக்கும் பொறிமுறை அல்ல. காணாமற்போன சிங்களவர்களையும் இந்தப் பொறிமுறையே கண்டு பிடிக்கும்.
போர்க் காலத்தில் படையினரும் பொது மக்களும் காணாமல் போயினர். குருநாகலில் எனது ஊரில் எனது வயதையுடைய ஒருவர் பல வருடங்களுக்கு முன் காணாமற் போனார். அவரது தாய் என்னைக் காணும்போதெல்லாம் அதுபற்றிக் கேட்பார். அவருக்கு என்னால் என்ன பதில் கூற முடியும்.?
இவ்வாறு சிங்களவர்கள் மத்தியில் பல கதைகள் இருக்கின்றன. இவர்களும் கண்டுபிடிக்கப்பட வேண்டும். அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்று அறிய வேண்டும். அவர்கள் உயிரிழந்திருந்தால் அது அறியப்பட வேண்டும். இல்லாவிட்டால் காலம்பூராவும் உறவினர்கள் தேடிக் கொண்டே இருப்பார்கள். அது பெரும் வேதனை. அவர்களுக்கு நடந்தது என்ன என்று அறிந்தால் அத்தோடு இந்த விவகாரம் முடிந்துவிடும்
அதற்காகத்தான் நாம் காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கவுள்ளோம். காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டால் சிங்கள மக்களும் அதிக நன்மையடைவர். அதேபோல், எதிர்காலத்திலும் காணாமற் போவதைத் தடுக்க வேண்டும். அந்த நோக்கில் தான் பலவந்தமாகக் காணாமற் போவதைத் தடுக்கும் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது.
இந்த இரண்டு ஏற்பாடுகளிலும் சிக்கலான விடயம் எண்ண இருக்கின்றது? ஒன்றுமில்லை. ஆனால், மகிந்த அணியினர் அவர்களின் அரசியல் நலன்களுக்காக இவற்றை எதிர்க்கின்றனர். இந்தச் சட்டங்கள் ஊடாகப் படையினர் [illegible] போர்க்குற்ற நீதிமன்றுக்கு அனுப்பப்படுவர் என்று அவர்கள் கூறுகின்றனர். அது ஒருபோதும் நடக்காது. அதற்கான ஏற்பாடு இந்த சட்டத்துக்குள் இல்லை - என்றார். (5,3)

ரணிலைத் திருட்டுத்தனமாகச் சந்திக்கின்றது மகிந்த அணி

இப்படிக் குற்றம் சுமத்துகிறார் மகிந்த அமரவீர

கொழும்பு, செப். 19
மகிந்த அணியில் உள்ள பலர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரைத் திருட்டுத்தனமாகச் சந்திக்கின்றனர். அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்கின்றனர். அதற்கு நன்றி செலுத்தும் விதமாக ஐக்கிய தேசிய கட்சிக்கு அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சி செய்கின்றனர். அந்த அடிப்படையில் தான் சுதந்திரக் கட்சியை இரண்டாக உடைத்து புதுக் கட்சியை உருவாக்குவதற்கு ஓடித்திரிகின்றனர் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த அணியினர் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வரும் வேலைகளையே செய்கின்றனர். ரணிலையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் வெளியில் விமர்சித்துவிட்டு இரவில் அவரைச் சந்திக்கின்றனர். அவர்களின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்கின்றனர்.
அதற்கு நன்றி செலுத்தும் விதமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சி செய்கின்றனர். அந்த அடிப்படையில் தான் சுதந்திரக் கட்சியை இரண்டாக உடைத்து புதுக் கட்சியை உருவாக்குவதற்கு ஓடித்திரிகின்றனர்

இவர்களை கட்சியில் இணைத்துக் கொண்டு போக வேண்டும் என்பதற்காகவே நாம் பொறுமையாக இருக்கின்றோம். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து வருகின்றோம். இருந்தும், பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை அவர்கள் உணர வேண்டும்.
வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலானோர் சுதந்திரக் கட்சியை விட்டுப் பிரிந்த வரலாறு உண்டு. அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. அரசியலில் சாதிக்க முடியவில்லை. மீண்டும் வந்துவிட்டார்கள். அந்த நிலைதான் இப்போதும் ஏற்படும்.
கட்சியை விட்டுச் சென்றால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இலாபத்தை மாத்திரம்தான் பெற்றுக் கொடுக்க முடியும். பிரிந்து செல்பவர்களின் அரசியல் எதிர்காலம் அழிந்துவிடும். அப்படிச் செல்ல வேண்டுமென்றால் புதுக் கட்சியை உருவாக்க வேண்டுமென்றால் அவர்கள் சுதந்திரக் கட்சியில் இருந்து நிரந்தரமாக விலகிச் செல்வதே சிறந்தது.
தனி நபருக்காக கட்சி இல்லை. கட்சிக்காகத்தான் அனைவரும் உள்ளோம். எவர் கட்சியை விட்டுப் போனாலும் கட்சி அழிந்து விடாது. செல்கின்றவர்களின் அரசியல் எதிர்காலமே அழியும். இதை மகிந்தவே அப்போது அடிக்கடி கூறுவார். மகிந்த அணியினர் இதை உணர்ந்து செயற்பட வேண்டும் - என்றார். (5,3)

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக மதுவரித் திணைக்களத் தலைவராகப் பெண்

கொழும்பு, செப். 19
இலங்கைவரலாற்றில்முதன்முறையாக மதுவரித் திணைக்களத்தின் தலைவியாக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
நுவரெலியா மாவட்டச் செயலாளராகப் பணி புரிந்த திருமதி ஹெலேனா மீகஸ்முல்லவே நியமிக்கப்பட்டி ருக்கிறார்.
அரச நிர்வாக சேவை அதிகாரியான திருமதி ஹெலேனா மீகஸ்முல்ல திறன்கள் அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் செயலாளர் டீ.டீ.மீகஸ்முல்லவின் மனைவியாவார்.
மதுவரித்திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமான எல்.கே.ஜி.குணவர்தன ஓய்வுபெற்றபின் ஏ.பெதராகம பதில் ஆணையாளர் நாயகமாக சிறிது காலம் பணியாற்றினார்.
புதிய ஆணையாளர் நாயகமாக திருமதி ஹெலேனா மீகஸ்முல்ல பதவியேற்ற பின் மதுவரித் திணைக்களத்தின் நீண்டகாலமாக நிலவிவரும் உட்பூசல்களும் பிரச்சினைகளும் தீர்த்துவைக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாகவும், இந்த நியமனம் தொடர்பில் நிதியமைச்சருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பதாகவும் அந்தத் திணைக்கள அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது. (5)

கசுன் பளிசேனவுக்கு 10 கோடி 'போனஸ்'

கொழும்பு, செப். 19
பேர்ப்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி கசுன் பளிசேனவுக்கு 2016 ஆம் ஆண்டு 10 கோடி ரூபா போனஸ் வழங்கப்பட்டுள்ளதாக பிணைமுறி மோசடி விசாரணை அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. அதனை அவர் ஒப்புக்கொண்டும் உள்ளார்.

தேவை
திருநெல்வேலி பிரதேசத்தில் அமைந்துள்ள ரெஸ்றோரன்ற் ஒன்றிற்கு
Waiters தேவை.
தொடர்பு :- 077 653 4411

வேலையாள்கள் தேவை
சாவகச்சேரியில் இயங்கும் கட்டடப் பொருள் உற்பத்தி நிலையத்துக்கு தொழிலாளிகள் தேவை.
- கல் அரிதல்
- பூக்கல் அரிதல்
- தூண் அரிதல்

(தங்கி நின்று வேலை செய்பவர்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு :- 077 0222 644
077 267 7372

குப்பைகள் நிறைந்த கடற்கரை கொண்ட நாடுகளில்

இலங்கை ஐந்தாவது இடத்தில்

கொழும்பு, செப். 19
உலகளாவிய ரீதியில் மிகவும் மாசுபட்ட கடற்கரையில் 5ஆவது இடத்தில் இலங்கை இருக்கின்றது என்று கடல் வளச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் முகாமையாளர் பேராசிரியர் பிரதீப் குமார தெரிவித்துள்ளார்.
தேசியக் கடல் வளச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு வாரம் மற்றும் கடற்கரைத் தூய்மை தினத்தின் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்த தாவது:
ஆசியக் கடல் வலயத்தில் மைய நிலையமாக இருப் பது இலங்கைக்கு முக்கிய மானதாகும். புள்ளிவிவரத் தகவலின் பிரகாரம் எங்கள் நாட்டுக்குக் கிடைத்திருக் கின்ற இந்த நிலை, அவ்வ ளவு நல்லதல்ல.
ஆறுகள் மற்றும் நீரோடை களில் நாங்கள் வருடாந்தம் 1.59 மெற்றிக்தொன் பிளாஸ் டிக் மற்றும் பொலித்தீனை வீசுகின்றோம். அதுதான் கடற்கரை மாசடைவதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது. 1975ஆம் ஆண்டை விடவும், இலங் கையில் பிளாஸ்டிக் பயன் பாடு, தற்போது, நூற்றுக்கு 625 சதவீதம் அதிகரித் துள்ளது.
கடற்கரையில் இருக்கின்ற கழிவுகளில் 10 சதவீதமான வை பிரதேசத்தில் இருந்தே அகற்றப்படு கின்றது.
ஏனைய 90 சதவீதமானவை, நாட்டின் உள்பாகங் களில் இருந்து, கங்கைகள், நீரோடைகள் மற்றும் ஆறுகளிலிருந்தும் கடலுக்குள் அடித்து வரப்படுகின்றன. தாய்லாந்து, இந்தியா மற்றும் இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளின் கடல்களில் ஏற்படுகின்ற நீரோட்டங்கள் மூலமாக இவ்வாறான கழிவுகள் தொலைதூரத்திலிருந்து, இலங்கைக் கடற்கரைகளுக்கு இழுத்து வரப்படுகின்றன.
பல்வேறான நிறுவனங்கள், கழிவுகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளாது, அவற்றைக் கடலுக்குள் கலக்கச் செய்துவிடுகின்றன. சுற்றாடல் பாதுகாப்பதற்கான அறிவு, மனப்பான்மை மற்றும் திறமை ஆகியன மேம்படுத்தப்படவேண்டும். அப்போதுதான், கடல்வள சுற்றுச்சூழல் மற்றும் கரையோரங்களைப் பாதுகாக்க முடியும் - என்றார். (5)

நாடு பிளவடைவதை நாம்தான் தடுத்தோம்

மக்கள் விடுதலை முன்னணி மார்தட்டுகின்றது

கொழும்பு, செப். 19
சுனாமி நிவாரணக் கட்டமைப்பை மக்கள் விடுதலை முன்னணி நீதிமன்றம் சென்று தடுத்தமையால் தான் இன்று வடக்கு -கிழக்கு இலங்கையில் இருந்து பிரிவதைத் தடுக்க முடிந்தது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த நாட்டு மக்கள் அவர்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாகத்தான் அரசை உருவாக்குகின்றனர். ஆனால், அந்த அரசு எம்மால் இதைச் செய்யமுடியவில்லை அதைச் செய்ய முடியவில்லை என்று கூற முடியாது.
இந்த நாட்டில் எல்லா வேலைகளையும் செய்வதற்கு என்றுதான் அரச நிறுவனக் கட்டமைப்பு இருக்கின்றது. அதை நிர்வகிப்பதற்காக அமைச்சுக்கள் உண்டு. இவற்றின் ஊடாக எல்லா வேலைகளையும் செய்ய முடியும். முடியாது என்று சொல்லவே முடியாது.
போர் இருந்ததால் அதிகமானவற்றை எம்மால் செய்ய முடியவில்லை என்று அப்போதைய அரசு கூறியது. தற்போதைய அரசு என்ன காரணத்தைக் காட்டப்போகிறது? எதையும் காரணமாகக் காட்ட முடியாது. இருந்தும், உப்புச் சப்பற்ற காரணத்தைக் கூறி இந்த அரசும் அதன் பொறுப்பில் இருந்து நழுவுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.
கடந்த அரசிலும் சரி இந்த அரசிலும் திருட்டுக்கள் திருட்டுக்களாகவே உள்ளன. மகிந்த அரசுக்கு கொஞ்சமும் சளைத்தவர்கள் இல்லை என்பதை இந்த அரசு காட்டிக்கொண்டு வருகின்றது. ஊழலில் சிக்கி அமைச்சர்கள் அமைச்சுப் பதவிகளை இழக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகப் போய்க்கொண்டிருக்கின்றது.
திருட்டுக்கள் இல்லாத அரசை உருவாக்கவே முடியாது என்று மக்கள் இப்போது கேள்வி எழுப்புகின்றனர். முடியும். அது ஆட்சி செய்பவர்களைப் பொறுத்தது. நாம் சந்திரிகாவின் அரசில் 14 மாதங்கள் 4 அமைச்சுக்களைப் பொறுப்பேற்று நடத்தினோம்.
எவ்வாறு சிக்கனமாக இருப்பது, எவ்வாறு வீண் விரயத்தைத் தடுப்பது, எவ்வாறு திருட்டைத் தடுப்பது என்று முழு நாட்டுக்கும் காட்டினோம். நாம் எட்டு வருடங்கள் திஸ்ஸமஹாராம பிரதேச சபையை ஆட்சி செய்தோம். அது முழு நாட்டுக்குமே முன்மாதிரி ஆட்சியாக அமைந்தது.
நாடு பிளவுபடுவதையும் நாம் தூரநோக்கோடு தடுத்தோம். சுனாமி நிவாரணக் கட்டமைப்பைப் புலிகளிடம் வழங்குவதற்குச் சந்திரிகா அரசு தீர்மானித்தபோது நீதிமன்றம் சென்று அதைத் தடுத்தோம். அந்தக் கட்டமைப்பு வழங்கப்பட்டிருந்தால் வடக்கு - கிழக்கு நாட்டில் இருந்து எப்போதோ பிரிந்திருக்கும். வடக்கு-கிழக்குப் பிரிவதை நாமே தடுத்தோம் - என்றார். (5,3)

மூச்சுத் திணறலாலேயே பிரிட்டன் ஊடகர் சாவு

உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறிவு

அறுகம்பே பகுதியில் முதலை தாக்கியதில் உயிரிழந்ததாகக் கூறப்பட்ட ஊடகவியலாளர் நீரில் மூழ்கிய நிலையில் மூச்சுத் திணறியே உயிரிழந்துள்ளதாக உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.
கடந்த 14ஆம் திகதி அறுகம்பே பகுதியில் விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கைக்கு வந்திருந்த பிரிட்டன் ஊடகவியலாளர் நண்பர்களுடன் வெளியில் சென்றிருந்தபோது முதலை தாக்கியதில் உயிரிழந்ததாகச் செய்திகள் வெளியாகி இருந்தன.
சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அவர் நீரில் மூழ்கியதில் மூச்சுத் திணறியே உயிரிழந்துள்ளதாக அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையின் சட்ட மருத்துவ நிபுணர் ஏ.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.
அவரின் உடலில் முதலை கடித்ததால் ஏற்பட்ட காயங்கள் எவையும் இருக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். (5)

தமிழ் பேசுவோர்கூட இப்படித் திட்டியதில்லை

உசுப்பேத்துகிறார் மகிந்த அணி உறுப்பினர் வெல்கம

கொழும்பு, செப். 19
அமைச்சர்களான சரத் பொன்சேகா மற்றும் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோர் பௌத்த மகா சங்கத்தினருக்கு எதிராகப் பேசியது போன்று இந்த நாட்டிலுள்ள தமிழ்ச் சமூகத்திலுள்ளவர்களோ, முஸ்லிம் சமூகத்திலுள்ளவர்களோ வரலாற்றில் எப்போதும் பேசியதில்லையென மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.
அமைச்சர் சரத் பொன்சேகா மற்றும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க இருவரும் பிக்குகள் தொடர்பில் மிகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். சில் துணி வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டவர்களின் தண்டப் பணத்தைச் செலுத்துவதற்குப் பிக்குகள் பிச்சை ஏந்தியமை தொடர்பிலேயே அவர்கள் காரசாரமான விமர்சனங்களைத் தெரிவித்திருந்தனர்.
இது தொடர்பில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்ததாவது:
அவர்கள் கூறிய வசனங்களை எனது வாயால் கூறுவதற்கு நான் விரும்பவில்லை. என்னுடைய பெயருக்கும் அபகீர்த்தி ஏற்பட்டு விடும். இவர்கள் இருவரும் பிக்குகளை நிந்தித்ததைப் போன்று தமிழ் பேசும் மக்களே பிக்குகளை நிந்தித்தது இல்லை - என்றார். (5)

கடமையில் அசட்டை

370 பொலிஸாரின் வேலை அம்போ

கொழும்பு, செப். 19
தமது கடமையைச் சரியாகச் செய்யாமல் உதாசீனம் செய்த 370 பொலிஸாரின் வேலைகள் கடந்த வருடம் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாகச் சட்டம் ஒழுங்குகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவர்களுள் 25 பொலிஸ் உயரதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர் எனவும், இவர்களுக்கு எதிராக மேற்கொண்ட ஒழுக்காற்று விசாரணைகளின் பின்னரே அவர்களது பணிகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. அதேவேளை பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த ஆயிரத்து 137 பேர் கடந்த வருடம் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

புலிகளை அழித்தொழித்ததால் என்னைப் பழிவாங்குகின்றனர்

இப்படிக் கதை விடுகிறார் மகிந்த

கொழும்பு, செப். 19
நான் நினைத்திருந்தால் புலிகளுடன் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டு சத்தமில்லாமல் இருந்திருக்க முடியும். நாட்டுக்காக நான் புலிகளிடம் போர் செய்து அவர்களை அழித்ததால் இன்று இந்த ஆட்சியாளர்கள் எங்களை அரசியல் ரீதியாகப் பழிவாங்குகின்றனர். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாங்கள் மிகவும் சிரமப்பட்டு இந்த நாட்டைப் புலிகளிடம் இருந்து மீட்டெடுத்தோம். தாய் நாட்டின்மீது நாம் வைத்த அன்பு காரணமாக இந்த நாட்டைப் புலிகளிடம் இருந்து பாதுகாப்பதற்குப் பல தியாகங்களைச் செய்தோம். எமது படையினரே உயிரையும் உடல்களையும் இழந்து நாட்டைக் காப்பாற்றினர்.
ஆனால், இந்த அர்ப்பணிப்புக்கு அரசில் மதிப்புக் கிடையாது. மனதில் குரோதங்களை வைத்துக்கொண்டு எம்மை அரசியல்ரீதியாகப் பழிவாங்குகின்றனர். நான் நினைத்திருந்தால் புலிகளுடன் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு சத்தமில்லாமல் இருந்திருக்க முடியும். நாட்டுக்காக நான் புலிகளிடம் போர் செய்து அவர்களை அழித்ததால் இன்று இந்த ஆட்சியாளர்கள் எங்களைக் கஷ்டப்படுத்துகின்றனர். எமக்கு எதிராகப் போலி வழக்குகளைத் தொடுக்கின்றனர். சிறையில் அடைகின்றனர் - என்றார். (5)

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில்

வெளிநாடுகளில் பதுக்கிய பணம் குறித்து 40 கோப்புகளின் விசாரணைகள் நிறைவு

கொழும்பு, செப். 19
வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் ஆட்சியாளர்களின் கறுப்புப் பணம் தொடர்பில் 36 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் 86 கோப்புகள் மீதான விசாரணைகளில் 40 கோப்புகள் மீதான விசாரணைகள் முடிவுற்று அதன் பெறுபேறுகள் இலங்கை அரசுக்கு வரத் தொடங்கியுள்ளன என்று ஜக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மகிந்த அரசு அதிகளவில் ஊழல் புரிந்து வருகின்றது என்பதுதான் அந்த அரசுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களாகும். அந்த ஊழல்வாதிகளைத் தண்டிக்கவில்லை என்பதுதான் இந்த அரசுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டாகும்.
நாம் அடிக்கடி கூறி வருகின்ற விடயம் என்னவென்றால், நாம் ஒருபோதும் ஊழல்வாதிகளைத் தப்பிக்கவிடமாட்டோம் என்பதுதான். ஊழல் புரிந்தார்கள் என்பதற்காக நாம் நினைத்தவாறு எவரையும் தண்டிக்க முடியாது. இந்த நாட்டில் சட்டம் ஒன்று இருக்கின்றது. அதை நடைமுறைப்படுத்தும் நீதிமன்றங்கள் இருக்கின்றன.
எல்லாமே சட்டப்படிதான் நடக்கும். திருடர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லை என்றால் விசாரணை இன்னும் முடியவில்லை என்றே அர்த்தம். விசாரணை முடிவடைந்து லலித் வீரதுங்கவும் அனுஷ பெல்பிட்டவும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இவ்வாறுதான் ஒவ்வொரு ஊழல்வாதிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
கடந்த ஆட்சியின் ஊழல் தொடர்பில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கறுப்புப்பணத்தைத் தேடிவேட்டை ஆரம்பமாகியுள்ளது.
இந்தக் கறுப்புப் பணம் தொடர்பில் 36 நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் 86 கோப்புகள் மீதான விசாரணைகளில் 40 கோப்புகள் மீதான விசாரணைகள் முடிவுற்று அதன் பெறுபேறுகள் இலங்கை அரசுக்கு வரத் தொடங்கியுள்ளன. மிக [illegible] வரைவில் இது பற்றிய தகவல் வெளிவரும். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் - என்றார். (5,3)

அமெரிக்க அழுத்தத்துக்கு தலைசாய்கிறது கொழும்பு

ஐ.நா. அணு ஆயுதத் தடை உடன்பாட்டில் கையெழுத்திடாது

கொழும்பு, செப். 19

ஐ.நாவின் அணு ஆயுதத் தடை உடன் பாட்டில், இலங்கை கையெழுத்திடுவ தற்கு வாய்ப்பில்லை என்று அரச தரப்பு வட்டாரங்கள் உறுதி செய் துள்ளன.

அணு ஆயுதங்களைத் தடை செய்யும் ஐ.நா. பிரகடனம் தொடர்பான உடன் பாடு, ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொ டரின் போது நாளை கையெழுத்திடப் படவுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தற்போது அமெரிக்காவுக்கு மேற் கொண்டுள்ள பயணத்தின் போது கலந்துரையாடப்படவுள்ள விடயங்க ளில், இந்த விவகாரமும் உள்ளடக்கப் பட்டுள்ளது. அமெரிக்காவின் கடைசி நேர அழுத்தங்களால், உடன்பாட்டில் கையெழுத்திடுவதில்லை என்று இலங்கை முடிவெடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. .

இந்த அணு ஆயுதத் தடைப் பிரகட னத்தை அமெரிக்கா விரும்பவில்லை. இந்த உடன்பாட்டைச் சட்டபூர்வமாக்கு வதற்குக் குறைந்தபட்சம் 50 நாடுகள் கையெழுத்திட வேண்டும்.

கடந்த வெள்ளிக்கிழமை வரை, இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு 38 நாடுகள் மாத்திரம் இணங்கியுள் ளன. இதில் கையெழுத்திடும் நாடுக ளின் எண்ணிக்கை வேறுபடலாம்.

இந்த உடன்பாட்டில் கையெழுத்திடுவ தில் இருந்து நழுவும் இலங்கையின் முடிவு திகைப்பை ஏற்படுத்துவதாக முன்னாள் இராஜதந்திரி ஜயந்த தன பால தெரிவித்துள்ளார்.

இது அணிசேராக் கொள்கையை இலங்கை கைவிட்டு வருவதைப் பிரதி பலிக்கிறது என்றும் கொழும்பின் முடிவுக்கு அமெரிக்காவே கார ணம் என்றும் அவர் குற்றம்சாட்டியுள் ளார்.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுக ளும் இந்த உடன்பாட்டில் கையெழுத் திடவில்லை. எனினும் ஏனைய தெற் காசிய நாடுகள் இந்தப் பிரகடனத்தில் கையெழுத்திடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (5)

மைத்திரிக்குத் தலையிடிகொடுக்கும் நாடு கடந்த தமிழீழ அரசு

கொழும்பு, செப். 19

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் 72ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடரில் அரச தலைவர் மைத்திரிபால சிறி சேன இன்று உரையாற்றவுள்ள நிலையில், அவருக்கு எதிரான போராட்டத்தை நடத்த நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாக, நாடு கடந்த தமி ழீழ அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது.

இலங்கை அரசு ஒரு குற்றவாளி என்ற தொனிப்பொருளில் மைத்தி ரியின் ஐ.நா. உரைக்கு எதிரான மக்கள் போராட்டமொன்று நியூ யோர்க்கில் இடம்பெற இருக் கின்றது.

ஐ.நா. பொதுச்சபையின் வருடாந் தக் பொதுக்கூட்டத்தில் பங்கெடுக் கும் அரசுத் தலைவர், இன்று உரை நிகழ்த்த இருக்கின்றார்.

மைத்திரியின் உரை இடம்பெற் றுக் கொண்டிருக்கும் சமவேளை, இலங்கை அரசைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றும் வகையில் மக் கள் போராட்டமொன்றினை நாடு கடந்த தமிழீழ அரசு ஏற்பாடு செய் துள்ளது.

இந்தப் போராட்டத்தில் நாடு கடந்த தமிழீழ அரசின் தலைமை அமைச்சர் வி.உருத்திரகுமாரன் பங்கெடுத்துப் பன்னாட்டு அரங் கில் இலங்கை அரசு ஒரு குற்ற வாளி என்ற தொனிப்பொருளில் அதன் குற்றங்களைப் பட்டியலிட இருக்கின்றார் - என்றுள்ளது. (5)

ஐ.நாவுக்கு தனித்துப் பயணமானார் மைத்திரி

கொழும்பு, செப். 19

அமெரிக்கா சென்றுள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் உள்ளடக்கப்படவில்லை என்று அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தல்களை ஒரே நாளில் நடத்தும் வகையில், முன்வைக்கப்பட்டுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள் ளது. இதனைக் கருத்தில் கொண்டே, அரச தலைவர் மைத்திரிபாலவின் ஐ.நா. பயணக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் உள்ளடக்கப்படவில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள், தாம் 20ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களிக்கமாட்டோம் என்று முரண்டுபிடித்து வருவதாகவும் கூறப்படுகிறது. (5)

மியன்மார் சுற்றுலாப் பயணிகளுக்குத் தடையா? அரசு மறுப்பு

கொழும்பு, செப். 19

மியன்மாரில் இருந்து வரும் சுற்று லாப் பயணிகளுக்கான நுழைவு விசைவு (விசா) வழங்குவதை நிறுத்த அரசு முடிவு செய்திருப்பதாக வெளியான செய்தியைக் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் மறுத் துள்ளது. சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் ரோஹிங்கிய அகதி கள் இலங்கைக்குள் வரலாம் என்ற எச்சரிக்கையின் அடிப்படையில் இந் தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக, உள் நாட்டு அலுவல்கள் அமைச்சர் எஸ். பி.நாவின்னவை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டி ருந்தது. இந்தச் செய்தியையே குடிவ ரவு-குடியகல்வுத் திணைக்களம் மறுத்துள்ளது. அவ்வாறான எந்த வொரு தீர்மானமும் அரசு எடுக்க வில்லை என்று குறிப்பிட்டுள்ளது. (5)

ஜேர்மனியில் மது விழா ஆரம்பம்

பெர்லின், செப். 19

ஜேர்மனியின் முனிச் நகரில் உலகின் மிகப்பெரிய மதுத் திருவிழா நேற்றுமுன்தினம் தொடங்கியது. முனிச் நகரில் ஆண்டுதோறும் 'அக்டோபர்பெஸ்ட்' என்ற பெயரில் மதுத் திருவிழா நடைபெறுகிறது. இந்த ஆண்டுக்கான திருவிழா நேற்றுமுன்தினம் தொடங்கியது. ஒக்டோபர் 3ஆம் திகதி வரை நடைபெறும் விழாவில் உலகம் முழுவதிலுமிருந்து 60 லட்சம் மதுப் பிரியர்கள் பங்கேற்க உள்ளனர். (ம)

சூகிக்கு கடைசி வாய்ப்பு எச்சரிக்கிறார் குத்தேரஸ்

"ரொஹிங்ய முஸ்லிம்கள் விவகாரத்தில் தீர்வு காண்பதற்கு ஆங் சாங் சூகிக்கு இதுவே கடைசி வாய்ப்பு" என்று எச்சரித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸ்.

பௌத்த நாடான மியன்மாரில் சிறுபான்மை இனமான ரொஹிங்ய முஸ்லிம்கள் தொடர்ந்து பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அவர்கள் இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்று குற்றம் சுமத்தப்படுகிறது. மியன்மார் இராணுவத்தின் தாக்குதல்களில் இருந்து தப்பித்து இதுவரை சுமார் 5 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்றுள்ளனர். இந்த விடயத்தில் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் சூகிக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார் குத்தேரஸ்.

"பல லட்சம் ரொஹிங்ய முஸ்

வடகொரியாவுக்கு இராணுவ நடவடிக்

ட்ரம்ப் மீண்டும் எச்சரிக்கை

வொஷிங்டன், செப். 19

"அமெரிக்காவைச் சீண்டினால் வடகொரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்போம் " என்று அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி வடகொரியா தொடர்ந்தும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது. இதற்கு உலக நாடுகள் பலவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. வடகொரியாவைக் கட்டுப்படுத்துவதில் அமெரிக்கா கூடுதல் முனைப்புடன் செயற்படுகிறது.

வடகொரியாவின் அயல் நாடுகளான ஜப்பான் மற்றும் தென் கொரியா என்பன அமெரிக்காவுடன் கைகோர்த்துள்ளன.

வடகொரியா இந்த மாதத்தில் மட்டும் மூன்று முக்கிய சோதனைகளை நடத்தியுள்ளது. இரண்டு ஏவுகணைகள் ஜப்பான் கடல் பரப்புக்கு மேலாகப் பறந்தன.

ஒரு சோதனை ஐதரசன் குண்டுச் சோதனையாக அமைந்தது. ஐதரசன் குண்டுச் சோதனை அணுகுண்டுச் சோதனையை விடவும் சக்தி வாய்ந்தது.

இந்தச் சோதனையின் போது 6.3 ரிச்டர் அளவில் நில அதிர்வு இருந்தது என்றும் சொல்லப்படுகிறது.

இந்தச் சோதனைகளால் வடகொரியா மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் மேலும் இறுக்கப்பட்டுள்ளன.

வடகொரியா அணுவாயுதச் சோதனையைக் கைவிட வேண்டும் என்று உலக நாடுகள் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

எனினும் "அமெரிக்காவுக்கு நிகராக அணுவாயு தச் சமநிலை ஏற்

TVS

சிறியதானாலும்
SUPER சிங்கன்

TVS XL SUPER HEAVY DUTY
அதிக பாரம், அதிக இலாபம்.

இப்போது ரூபா 129,900/-

இந்திக - 0774 636 345 - கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டம்
ரங்கநாத - 0777 283 095 - காலி | மாத்தறை | ஹம்பாந்தோட்டை மற்றும் இரத்தினபுரி மாவட்டம்
ஹர்ஷ - 0773 497 641 - கம்பஹா | கேகாலை | கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டம்
ஜனக - 0771 507 552 - குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டம்
ரவீந்திர - 0777 215 746 - அநுராதபுரம் | பொலன்னறுவை மற்றும் மாத்தளை மாவட்டம்
ஜீவன் - 0772 057 660 - பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டம்
நீல்காந்த் - 0773 748 155 - அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டம்
றொஹான் - 0777 782 739 - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம்
கனேஷ் - 0777 419 411 - திருகோணமலை மாவட்டம்
றினோஷான் - 0773 358 305 - மன்னார் மற்றும் வவுனியா மாவட்டம்

துரித அழைப்பு
0114 600 500

TOMAS SRI LANKA

லிம்கள் மியான்மரை விட்டு வெளியேறுவதற்கு வழிவகுத்துள்ள இராணுவத் தாக்குதல்களை தடுத்து நிறுத்துவதற்கு மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகிக்கு இதுவே கடைசி வாய்ப்பு" என குத்தேரஸ் மேலும் எச்சரித்துள்ளார். (ம)

...த எதிராக ...க்கைகள்

...படும் வரையில், தமது சோதனைகள் தொடரும்" என்று வடகொரியா அறிவித்துள்ளது. இந்த நிலையில் வடகொரியாவை மீண்டும் எச்சரித்துள்ளார் ட்ரம்ப்.

"அமெரிக்கப் போர் விமானங்கள் வானில் பறந்தால் எதிரி நாடுகள் அஞ்சி நடுநடுங்கும். நட்பு நாடுகள் உற்சாகம் கொள்ளும்.

அமெரிக்காவைச் சீண்டினால் வடகொரியா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டோம் என்பதை மீண்டும் தெளிவுபடுத்துகிறேன்.

வடகொரியாவின் நடவடிக்கைகள் உலக அமைதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளன. எங்களது பொறுமைக்கும் ஓர் எல்லைஉண்டு எனட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (ம)

அமெரிக்காவின் நிவேடா பாலைவனத்தில் அண்மையில் 'நெருப்பு விழா' கொண்டாடப்பட்டுள்ளது. நெருப்பை முதன்மை மூலப்பொருளாகக் கொண்டு இந்தத் திருவிழா கொண்டாடப்படுவது வழமை. இந்த வருடத்துக்கான திருவிழாவில் நூற்றுக் கணக்கானவர்கள் பங்கேற்றனர் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)

தினகரன் ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்கள் தகுதி நீக்கம்

சென்னை, செப். 19

அ.தி.மு. கழகத்தில் தினகரனுக்கு ஆதரவாகவும், முதல்வர் எடப்பாடிக்கு எதிராகவும் செயற்பட்ட 18 சட்டமன்ற உறுப்பினர்களை கட்சித் தாவல் சட்டத்தின் கீழ் பதவி நீக்கி உத்தரவிட்டுள்ளார் சபாநாயகர் தனபால்.

தமிழக சட்டசபை மொத்தம் 234 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டது. 117 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்தால் ஆட்சியைப் பிடிக்க முடியும். தி.மு.கவுக்கு தற்போது 89 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தினகரனின் பக்கமாக 18 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். காங்கிரஸ் கட்சிக்கு 8 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். தி.மு.க. ஆதரவு பெற்ற இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சிக்கு ஒரு சட்டமன்ற உறுப்பினர் உள்ளார். மொத்தத்தில் 116 சட்டமன்ற உறுப்பினர்கள் எடப்பாடி அரசுக்கு எதிராக உள்ளனர். சபாநாயகரைத் தவிர்த்தால் 117 சட்டமன்ற உறுப்பினர்கள் எடப்பாடி அரசுக்கு ஆதரவாக உள்ளனர். ஒரேயொரு சட்டமன்ற உறுப்பினர் தினகரனின் பக்கம் சாய்ந்தால் ஆட்சி கவிழும் நிலை. இதனால்தான் எடப்பாடி பழனிச்சாமி தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்று ஸ்டாலினும், தினகரனும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

தமிழக பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவ் மும்பையில் இருந்து நேற்றுக் காலை சென்னைக்குத் திரும்பினார். அவர் பெரும்பான்மையை நிரூபிக்க உத்தரவிடுவார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் ஆளுநர் சென்னைக்குத் திரும்பிய சில மணிநேரங்களில் தினகரன் ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களை கட்சித் தாவல் சட்டத்தின் மூலம் தகுதி நீக்கம் செய்தார் தமிழக சட்டசபையின் சபாநாயகர் தனபால். (ம)

தமிழக விவசாயிகள் தொடர் போராட்டம்

சென்னை, செப். 19

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் போராடிவரும் தமிழக விவசாயிகள், 65ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பருவ மழை பொய்த்ததால், தமிழகத்தில் விளைச்சல் பெரியளவில் இல்லை. இதனால் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும், வரட்சி நிவாரணம் வழங்க வேண்டும், கடன் சுமையால் உயிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், காவிரி நதிநீர் பங்கீட்டை முழுமையாக மேற்கொள்ள வேண்டும். அதைக் கண்காணிக்க தனி வாரியம் அமைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியத் தலைநகர் டெல்லியில் தமிழக விவசாயிகள் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தொடர்ந்து 65ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக தமது போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

64ஆவது நாளான நேற்று முன்தினம் தோப்புக் கரணம் போட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)



நீண்டு செல்கிறது நெடுவாசல் போராட்டம்

சென்னை, செப். 19

சென்னை - நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு எடுப்பதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியதை அடுத்து இந்தத் திட்டத்துக்கு எதிராக நெடுவாசல் கிராம மக்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

160ஆவது நாளாக நேற்றும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் உள்ளிட்ட 31 இடங்களில் இயற்கை எரிவாயு பெறுவதற்கு டெல்லி அரசு அனுமதி வழங்கியுள்ளது.

நெடுவாசலில் இயற்றை எரிவாயு பெறும் திட்டத்தை எதிர்த்து நெடுவாசல் கிராம மக்கள் மட்டுமல்லாமல் ஏனைய பலரும் நெடுவாசல் கிராமத்திலும் எனைய இடங்களிலும் போராட்டங்களை நடத்தினர்.

எனினும் இந்திய மத்திய அரசு இந்தப் போராட்டங்கள் எதையும் கண்டுகொள்வதாக இல்லை.

போராட்டம் நேற்றுடன் 160ஆவது நாளை எட்டியுள்ளது. (ம)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்
59 ஆவது பிறந்தநாள் நினைவும்

மலர்வு
17
.
09
.
1958

உதிர்வு
29
.
09
.
2017

அமரர்
பொன்னுச்சாமி பாஸ்கரன்
(உரிமையாளர் V.S.P பரிமளா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம் - சமாதான நீதிவான்)

திதி : சனுர்த்தசி 19.09.2017

தோற்றச் சுடரொளியாய்
சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில்
வந்துதித்த அப்பாவே
நேற்றுப் போல் இருக்கிறது
நீங்கள் எம்மோடு இருந்த நாள்கள்
ஆண்டு ஒன்று ஆனதப்பா ஆறாத எம்துயரால்
தேம்பி அழுகின்றோம் தேற்றுவார் யாருமில்லை
தேறுதற்கும் வழியில்லை மாற்றமிலாததொன்று மரணம் தான்
என உணர்ந்து ஆறுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொன் அகம்
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்மார், மைத்துனிமார், மாமி, மாமன்மார், பெறாமக்கள், பெறாமகன்மார், உறவினர்கள், நண்பர்கள், ஊர்மக்கள்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

கேள்விக்குறியாகும் அரசமைப்பு முயற்சி

புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவருவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுவிடலாம் என்று தலைகீழாய் நின்று பார்க்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதனாலேயே எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு முன்னர் அரசமைப்புத் தொடர்பானகருத்துக் கணிப்பையே நடத்தவேண்டும் என்று அது அரசிடம் வலியுறுத்துகிறது.

தேர்தல் ஒன்றை நடத்தி, அதில் தற்போதைய அரசுக்குப் பின்னடைவுகள்ஏற்பட்டால் அது புதிய அரசமைப்புமுயற்சிகளையும் அதற்கூடான தீர்வையும் பெரிதும் பாதிக்கும், கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகப்பட்டபாடுகள் எல்லாம் வீணாகிவிடும் என்கிற பயம்; கவலைதான் அதற்குக் காரணம்.

அரசுக்கு, குறிப்பாக அரசின்முதன்மைப்பங்காளியானசுதந்திரக் கட்சிக்குப் பயம் காட்டும் பூதமாக முன்னாள் அரச தலைவர்மகிந்தராஜபக்சநிற்கிறார். சிங்களக்கிராமப்புறங்களில் அவருக்குக் கணிசமான ஆதரவு இருக்கின்றது. அவர்களின் கதாநாயகனாக அவர் இன்னமும் வலம் வருகின்றார். அதனால்தேர்தல்களைநடத்தினால்அவர்கணிசமானஅளவு வெற்றிபெற்றுவிடுவார் என்கிற அச்சம் இருக்கிறது.

அப்படிராஜபக்சவெற்றிபெற்றால், தற்போதுஅரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனவின்பக்கம்நின்றாலும், மதில்மேல் பூனையாகக்காத்திருக்கும்சுதந்திரக்கட்சியினர்பலர்மகிந்த பக்கம் தாவிவிடுவார்கள் என்ற அச்சம் அரசியல் பரப்பில் இருக்கின்றது. அப்படி நடந்தால் தற்போதைய அரசின் ஆட்சிஆட்டம்கண்டுவிடும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அச்சம் காரணமாகவே உள்ளூராட்சி சபைத் தேர்தல் களைநீண்டகாலமாகநடத்தாமல்அரசுபின்னடித்துவந்தது என்கிற குற்றச்சாட்டும் இருக்கிறது.

இந்த அச்சத்துக்கு நடுவில் மகிந்த ராஜபக்ச இனவாதத்தை மீண்டும் தூக்கிப் பிடிப்பதும், தமிழர்களினதும் ஏனைய சிறுபான்மைமக்களினதும்வாக்குகள்மூலம்பதவிக்குவந்த அரசதலைவர்மற்றும்அரசுக்கு பெரும்நெருக்கடியாகஇருக்கின்றது. முன்னர் மாதிரி பதிலுக்குப் பதில் என்ற வகையில் தாமும் இனவாதம் பேச முடியாத திரிசங்கு சொர்க்கத்தில் சிக்கிக்கொண்டுள்ளன சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும். இதுவும் தேர்தலில் தமது வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் காரணி என்று அவை கருதுவதால் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு அவை பின்னடித்து வந்தன.

இந்தக்களச்சூழல்தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குஉதவிகரமாக இருந்தது. தேர்தல் நடத்தப்படாத சூழலில் அரசின் கவனத்தை புதிய அரசமைப்பு உருவாக்கம் மீது செலுத்த வைத்து முடிந்த விரைவில் அதனை நிறைவேற்றிவிட தன்னாலான முயற்சிகளை எடுத்தது கூட்டமைப்பு. ஆனால் அது கைகூடவில்லை.

இப்போது, முதலுக்கே மோசம் வந்தது போல அடுத்தடுத்துத் தேர்தல்கள் வந்தால் புதிய அரசமைப்பு முயற்சிகள் முடக்கம் அடைந்துவிடுவதற்கான சாத்தியங்களே அதிகம் உள்ளன.அதிலும்அரசமைப்புக்கான20ஆவதுதிருத்தத்தைக் கைவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று தகவல்கள் வெளிவரும் நிலையில், மாகாண சபைக்கான தேர்தல் நிச்சயமாகிவிட்ட நிலையில் புதிய அரசமைப்பு முயற்சி முடங்கிப்போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இதனால்தான் மக்கள் கருத்துக் கணிப்பை முதலில் நடத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கேட்கிறது.துரதிஷ்டவசமாகஅந்தக்கோரிக்கைநிறைவேறக்கூடிய சாத்தியங்கள்மிகமிகக்குறைவே.களயதார்த்தத்தின்படிதேர்தலைக்காரணம்காட்டிபுதிய அரசமைப்புஉருவாக்கமுயற்சிகள் ஒத்திவைக்கப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம்.

மாகாணசபைத்தேர்தல்கள், உள்ளூராட்சிசபைத்தேர்தல்கள் அதன் பின்னர் அந்தத் தேர்தல்களால் விளையப்போகும் அரசியல் மாற்றங்கள் என்று அடுத்தடுத்து வரப்போகும் தடைகளால் புதிய அரசமைப்பு முயற்சிகள் இந்த வருட **இறுதிக்குள் நிச்சயமாக முடிவடையப் போவதில்லை.**

ஈழம் கொண்ட ஈகம் திலீபன்

செ.தீட்சண்யன்

தான் நேசித்த மக்களுக்காக தான் நேசித்த மண்ணுக்காக ஒருவர் எத்தகைய உயர்ந்த உன்னதமான தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த பெறுமதிமிக்க அர்ப்பணிப்பைத் திலீபன் செய்திருக்கிறார். தியாகி லெப்டினன் கேணல் திலீபன் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தவர்.பாரதப் படைகளுக்கெதிராக நீராகாரம் கூட அருந்தாது பன்னிரண்டு நாள்கள் உணவு ஒறுபுப் போராட்டம் மேற்கொண்டு வீரச்சாவடைந்த வர்.

1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உணவு ஒறுப்பை ஆரம்பித்தார். 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு லெப்டினன் கேணலாக, யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக, உரிமை விழிப்பின் சாகரமாக திலீபன் தியாகச் சாவை எய்தினார்.

ஐந்து அம்சக் கோரிக்கை

- மீளக்குடியமர்தல் என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் புதிதாக திட்டமிடும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.
- சிறைக்கூடங்களிலும், இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் சகலரும் விடுதலை செய்யப்படவேண்டும்.
- அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும்.
- ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.
- தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும்.

தமிழர் போராட்டத்தின் குறியீடு

திலீபனின் தியாக வரலாறு, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஒரு குறியீடாக விளங்குவதோடு, தமிழீழத் தேசியத் தலைவரின் இயல்புக்கும் ஒரு குறியீடாகவும் திகழ்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகப் பெரிய எழுச்சி கொண்டதும், வளர்ச்சி கண்டதும் தேசியத் தலை வர் பிரபாகரன் வழிநடத்தலின் வழியேதான். இங்கே தமிழீழத் தேசியத் தலைவருக்கு இருக்கின்ற இயல்பு என்னவென்றால், அடக்குமுறைகளுக்கு, அவை எவ்வளவுதான் பெரிதாக இருந்தாலும் விட்டுக் கொடுப்பதில்லை. எவ்வளவுதான் பெரிய இழப்புக்களைச் சந்தித்தாலும், தன்னுடைய உயிரே போனாலும் அடக்குமுறைகளுக்கு அடிபணிவதில்லை என்பது தேசியத் தலைவரின் அடிப்படை இயல்பாகக் காணப்பட்டது.

இந்த இயல்புத் தன்மைதான் தமிழீழத் தேசியத் தலைவரையும் சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொள்ள முன்னர் தூண்டியது. 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியாவில் தமிழ்நாட்டிலிருந்த தலைவர் பிரபாகரனின் தொலைத் தொடர்புச் சாதனங்கள் முதலானவற்றை இந்திய அரசு பறிமுதல் செய்தது. இந்த அடக்குமுறைக்கு எதிராகத் தலைவர் கடும் சினம் கொண்டார்.

இந்தியாவில் இருக்கக்கூடிய ஒரு போராட்ட வடிவமாக சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை தேசியத் தலைவர் பிரபாகரன் உடனே ஆரம்பித்தார். இந்தச் சாகும் வரையிலான உணவு ஒறுப்பு ஒரு போராட்ட வடிவமாகத் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் எமது தேசியத் தலைவரால்தான் முதன்முதலில் மேற்கொள்ளப்பட்டது.

தேசியத் தலைவர் கொண்ட தாகம்

தண்ணீர்கூட அருந்தாத, சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தலைவர் **பிரபாகரன் எந்தவிதமான முன்னறிவித்தலும்** இன்றி உடனேயே ஆரம்பித்து விட்டார். இந்தப் போராட்டத்தை ஒருநாள் கழித்து ஆரம்பிக்கும்படி இயக்கப் போராளிகளும், பிரமுகர்களும் கேட்டுக்கொண்டனர். 'அந்த ஒரு நாள் அவகாசத்தில் தமிழக அரசுக்கும், தமிழக அரசியல்வாதிகளுக்கும், வெகுசன ஊடகங்களுக்கும், தமிழக மக்களுக்கும் உங்களது சாகும் வரையிலான உணவு ஒறுப்பு குறித்து அறிவித்து விடலாம். அதன் பின்னர் நீங்கள் உங்களுடைய உணவு ஒறுப்பை ஆரம்பிக்கலாமே" என்று கூறினர். ஆனாலும் அவர் மறுத்துவிட்டார்.

அர்த்தம் கற்பித்தல்

"இல்லை, நீங்கள் சொல்வது ஓர் அரசியல் நாடகம்..! எனக்கு அது தேவையில்லை. நான் இந்த நிமிடம், இந்த விநாடியிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் சாகும் வரையிலான என்னுடைய உணவு ஒறுப்பை ஆரம்பித்துவிட்டேன். இந்திய அரசு பறித்தெடுத்த தொலைத்தொடர்புச் சாதனங்கள் முதலானவற்றை மீண்டும் திருப்பித் தந்தாலன்றி என்னுடைய உயிர் போகும் வரைக்கும் எனது போராட்டம் தொடர்ந்து நடைபெறும்" என்று கூறினார். இந்தப் போராட்டத்தின் சக்தியை உணர்ந்த இந்திய அரசு 48 மணித்தியாலங்களுக்குள் அடி பணிந்தது. தான் பறித்தெடுத்த தொலைத் தொடர்புச் சாதனங்கள் முதலானவற்றைத் தலைவர் தங்கியிருந்த வீட்டிலேயே கொண்டு வந்து கொடுத்தது. தலைவர் தன்னுடைய உண்ணா நோன்பை முடித்துக் கொண்டார். தன்னுடைய உயிரே போனாலும் அடக்குமுறைக்குப் பணிவதில்லை என்கின்ற தேசியத் தலைவரின் இயல்பின் வெளிப்பாடுதான் திலீபனிடமும் உள்ளூரப் படிந்திருந்தது. தேசியத் தலைவர், தானே முன்னின்று வழிகாட்டிய பாதையில் திலீபன் பின் தொடர்ந்து போராடினார். திலீபனின் இந்த உண்ணா நோன்புப் போராட்டம் தமிழீழத் தேசியத் தலைவரின் இயல்பையும் குறியிட்டுத்தான் நிற்கின்றது.



திலீபன் கண்ட தாகத்தின் தியாகம்

இந்த இலட்சிய உறுதிதான், தியாகி திலீபனிடமும் படிமம் கொண்டிருந்தது. தனது தலைவன் முன்னோடியாக நின்று வழிகாட்டிப் போராடியதை, 1987 ஆம் ஆண்டு தான் நடத்தினான். 'ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல் நான் எனது உண்ணா நோன்பை ஆரம்பிக்கப் போகின்றேன்" என்று திலீபன் அறிவித்தபோது தலைவர் பிரபாகரன் திலீபனிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தார். "தண்ணீரையாவது குடித்துப் போராட்டத்தைத் தொர்டரலாம்" என்று திலீபனைக் கேட்டுக்கொண்டார்.

ஆனால் திலீபனோ தலைவரிடமே பதில் கேள்வி ஒன்றைக் கேட்டான். 'அண்ணா...! நீங்கள் அப்படிச் செய்யவில்லையே..? நீங்களும் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தாமல்தானே சாகும்வரை உணவு ஒறுப்பை மேற்கொண்டிருந்தீர்கள். என்னை மட்டும் ஏன் தண்ணீர் அருந்தச் சொல்கின்றீர்கள்...?" ஆம்.அத்தகையதொரு தலைமை..!இத்தகையதொருதியாகி...! தாயக தேசம் கண்டுகொண்ட மகத்துவம். உயர்ந்தவர்களிடம் மட்டுமே காணக்கூடிய இலட்சிய உறுதி அது.இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவரின் இயல்புக்குமான ஒரு குறியீடாகத்தான் தியாகி திலீபன் விளங்கினார்.

கூட்டாட்சிக்கு ஏன் எதிர்ப்பு?

சேரலாதன்

வடக்கு மாகாணத்துக்குச் சிறப்பு அதிகாரங்களை வழங்கினால், மலையகம் போர்க்களமாக மாறிவிடுமென அஸ்கிரிய பீடத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை அவர்கள் தேவையற்ற விதத்தில் அஞ்சுவதைக் காட்டுகின்றது. இதைவிட சமஷ்டி நாட்டைப் பிளவுபடுத்தாதென்பதில் தமக்கு நம்பிக்கையில்லையெனத் தெரிவித்து தாம் இன்னமும் மாறவில்லையென்பதையும் அவர்கள் எடுத்துக் காட்டிவிட்டனர்.

அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்து உரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் மக்கள் பேரவையினால் வெளியிடப்பட்ட தீர்வுத் திட்டத்தின் பிரதியொன்றையும் அவர்களிடம் வழங்கியிருந்தார். அவர் பீடாதிபதிகளைச் சந்தித்ததின் முதன்மை நோக்கம் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக வடக்கு முதலமைச்சர் மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்திக்காதது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின்போது பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவியை ஏற்று நான்கு ஆண்டுகள் ஆகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் விக்னேஸ்வரனின் கருத்துக்களை மகாநாயக்கர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள் என்னதான் போராட்டங்களில் ஈடுபட்டாலும், இந்த நாட்டில் ஒற்றையாட்சி நடைமுறைக்கு மேலாக எதுவுமே நடந்துவிடாது என்பது திட்டவட்டமாகத் தெரிகின்றது. கூட்டாட்சிக் கொள்கை தந்தை செல்வாவின் காலத்தில் இருந்தே தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு வருகின்றது. தனிநாடு கேட்டுப் போராடித் தோற்றுப்போன தமிழர்கள் தற்போது கூட்டாட்சியைக் கேட்டு நிற்கின்றனர்.

ஆனால் ஒற்றையாட்சியைத் தவிர வேறொரு அரசியல்தீர்வும் கிடைக்காதென்பது உறுதியாகிவிட்டது. இந்த நிலையில்தான் அமைதியாக இருக்கின்ற மலையகம் தேவையற்ற விதத்தில் பிரச்சினைக்குள் இழுத்துவரப்பட்டுள்ளது.

கூட்டாட்சி நடைமுறை புதியதொன்றல்ல

வடக்குக்கு அதிக அதிகாரங்களை வழங்கினால் மலையகம் போர்க்களமாகிவிடுமென அஸ்கிரிய பீடத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதொன்றல்ல. வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகப் பகுதிகளென எப்போதோ அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களாகும். ஆரம்பத்தில் இங்கு தமிழர்கள் மட்டுமே வாழ்ந்ததற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன. இடையில் வேறு இன மக்களின் குடியேற்றம் காரணமாக தமிழர்கள் தமது தனித்துவத்தை இழந்து நிற்கின்றனர். ஆனாலும் இணைந்த வடக்குக் கிழக்கில் தமிழர்களே பெரும்பான்மையிராக வாழ்கின்றனர். மலையக மக்களின் நிலை இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது.

இந்த மக்கள் தமிழ்நாட்டிலிருந்து ஆங்கிலேயரால் கொண்டு வரப்பட்டுக் குடியேற்றப்பட்டவர்கள். பெரும்பான்மையின மக்களுடன் கலந்து வாழ்ந்தவர்கள். இவர்கள் தனிநாடும் கேட்கவில்லை, கூட்டாட்சிக்காகப் போராடவுமில்லை. அவர்களின் பிரச்சினையே வேறு. இந்த நிலையில் வடக்குக்குச் சிறப்பு அதிகாரங்களை வழங்கினால் மலையகம் போர்க்களமாகுமெனத் தெரிவிக்கப்பட்டமை இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டது. மக்களிடையே தேவையற்ற பதற்றத்தை ஏற்படுத்தக் கூடியது.

கூட்டாட்சி என்பது புதியதொன்றல்ல. பல நாடுகளில் கூட்டாட்சிமுறை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. மிகப் பெரிய கனடா தேசத்தில் பிரெஞ்ச் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற மாநிலங்களுக்கு கூட்டாட்சி முறையே நடைமுறையில் உள்ளது. இதனால் பிரெஞ்ச் மொழி பேசுகின்ற மக்களும், ஆங்கில மொழி பேசுபவர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

சிங்களத்தை அரச கருமமொழி ஆக்குவதாக அறைகூவல் விடுத்தார் பண்டாரநாயக்க

எமது நாட்டில் கூட்டாட்சி என்ற வார்த்தையைக் கேட்டால் பேயைக் கண்டது போன்று சிலர் பயந்து நடுங்குகின்றனர். கூட்டாட்சி என்பது நாட்டைப் பிளவுபடுத்துகின்றதொரு பொறிமுறையெனச் சிலர் வீணான புரளியைக் கிளப்பிவிடுகின்றனர்.

கூட்டாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வை வலியுறுத்திய பண்டா- செல்வா ஒப்பந்தம்

பண்டாரநாயக்கவின் இனவாதக் கருத்துக்கள் அவர் சார்ந்த மக்களிடம் எடுபட்டதால் அவரால் இலகுவாக ஆட்சிபீடத்தில் அமர முடிந்தது. ஆனாலும் அவர் தந்தை செல்வாவுடன் இணைந்து ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டார். அதில் கூட்டாட்சி முறையிலான அதிகாரப் பகிர்வுக்கு வழிவகுக்கப்பட்டிருந்தது. ஆனால் ஜே.ஆர் போன்ற கடைந்தெடுத்த இனவாதிகள் இதைக் கடுமையாக எதிர்த்தனர். பாதயாத்திரைகளை மேற்கொண்டனர். இதன் விளைவாக அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. அன்று அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் நாட்டின் இனப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு கிடைத்திருக்கும். இன்றும் கூட நாட்டில் கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிராக அதே நிலை நீடிப்பது வருந்தத்தக்கது. வேதனைக்குரியது. கொடிய போர் இடம்பெற்ற பின்னரும் மனம் திருந்தாத இந்த நாட்டின் இனவாதிகள் இனிமேல் ஒருபோதுமே திருந்தமாட்டார்கள் என்பதை உறுதியாக நம்பலாம்.

கூட்டாட்சி என்பது புதியதொன்றல்ல. பல நாடுகளில் கூட்டாட்சி முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. மிகப் பெரிய கனடா தேசத் தில் பிரெஞ்ச் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற மாநிலங்களுக்கு கூட்டாட்சி முறையே நடைமுறையில் உள்ளது. இதனால் பிரெஞ்ச் மொழி பேசுகின்ற மக்களும் ஆங்கில மொழி பேசுபவர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர். எமது நாட்டில் கூட்டாட்சி என்ற வார்த்தையைக் கேட்டால் பேயைக் கண்டது போன்று சிலர் பயந்து நடுங்குகின்றனர். கூட்டாட்சி என்பது நாட்டைப் பிளவுபடுத்துகின்றதொரு பொறிமுறையெனச் சிலர் வீணான புரளியைக் கிளப்பி விடுகின்றனர்.

ஆசிரியருக்கான கடிதம்

நாங்கள் திருந்தவே போவதில்லையா?

வழக்கம் போன்று, புத்தாண்டு பிறக்கும் சரியான நேரம் குறித்து தெரிந்துகொள்ள விரும்பும் தீவிர இந்துமத அபிமானிகளை வருடாவருடம் தலையைப் பிய்த்துக் கொண்டு குழம்ப வைக்கும் வாக்கிய பஞ்சாங்கம் மற்றும் திருக்கணித பஞ்சாங்கம் என்பவற்றின் கணிப்பீட்டு விற்பன்னர்கள், இந்த முறை நவராத்திரி விரதாரம்பம் குறித்தும் ஒருவருக் கொருவர் முரண்பாடான தகவல்களை தத்தமது பஞ்சாங்கங்களூடாக வெளியிட்டு எம்மைக் குழப்பத்துக்கு உள்ளாக்கியுள்ளார்கள்.

இந்த வருடம் நவராத்திரி விரதாரம்பம் இம்மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமையே ஆரம்பமாவதாக திருக்கணித பஞ்சாங்கமும்; இல்லையில்லை நவராத்திரி விரதம் இம்மாதம் 20ஆம் திகதி புதன்கிழமையே ஆரம்பிக்கின்றது என வாக்கிய பஞ்சாங்கமும் நிர்ணயித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த பல ஆண்டுகளாக இவ்விரு பஞ்சாங்கங்களும் தமிழ்ப் புத்தாண்டு தினம் பிறக்கும் நேரம் குறித்து வெவ்வேறான நேரங்களை நிர்ணயித்து, நானா நீயா என்றும், விட்டேனா பார் என்றும் தமக்கிடையே குடுமிபிடிச் சண்டையை, கருத்து மோதல்களை மேற்கொள்வது மட்டுமன்றி இந்து மத அபிமானிகளையும் குழப்பிவரும் நிலையில் இந்த முறை நவராத்திரி விரதாரம்ப தினம் குறித்து சர்ச்சை, ஊடகத் துறையினருக்கு சும்மா மெல்லும் வாய்க்கு அவல் கிடைத்தமை போன்று வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது.

சைவ சமயத்தவர்களுக்கும் பௌத்த மதத்தவர்களுக்கும் பொதுவான தமிழ் சிங்களப் புத்தாண்டு தினப் பிறப்புக் குறித்து பௌத்த மதத்தவர் மத்தியில் எதுவித குழப்பங்களும் ஏற்பட்டதாக நான் கேள்விப்பட்டதில்லை.

ஆனால் வருடாவருடம் இதைப் பேசுபொருளாக்கி விமர்சனங்களும் விளக்கங்களுமென தேவையற்ற சர்ச்சைகளால் எம்மை நாமே குழப்பிக் கொள்ள வேண்டியது அவசியம்தானா? இன்று ஈழத் தமிழினம் எதிர்நோக்கியிருக்கும் கடும் கையறு நிலையில் இவற்றைத் தவிர்க்க இயலாதா? என்ற பெரும் கேள்வி எழுந்து உயர்ந்து மனதைச் சோர்வடைய வைக்கிறது. சம்பந்தப்பட்ட தரப்புக்கள் இது விடயம் குறித்துக் கவனம் செலுத்துவார்களா?

ப.பிரதீபன், கைதடி.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறை வளர்ச்சி

5.2 வீதமாகப் பதிவானது

நடப்பாண்டின் இரண்டாவது காலாண்டு காலப்பகுதியில் கைத்தொழில் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தி சார்ந்து 25.9 வீத பங்களிப்பை வழங்கியுள்ளதுடன் 5.2 வீத வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும் போது நடப்பு வருடத்தில் கைத்தொழில் துறை சார்ந்த பிரிவுகளுக்கிடையில் 'கட்டடவாக்கம்' 9.3 சதவீத வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. 'சுரங்கம் அகழ்தல்' மற்றும் 'கல்லுடைத்தல்' துறைகள் 18.4 வீத வளர்ச்சியை பதிவிட்டுள்ளன.

மேலும் நடப்பு வருடத்தின் இரண்டாவது காலாண்டு காலப்பகுதியில் கைத்தொழில் துறை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் 0.9 சதவீத வளர்ச்சியைத் தந்துள்ளன.

(ஒ)

தேசிய கணக்காய்வு சட்டமூலத்தை அமைச்சரவையில் சமர்ப்பிக்கத் தீர்மானம்

அமைச்சரவை உப குழு தெரிவிப்பு

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி உருவாக்கப்பட்ட கூட்டு அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் தேசிய கணக்காய்வுச் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இருந்த போதிலும் அந்த அறிவிப்புகள் எவையும் இதுவரை காலமும் நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தங்களுடனான தேசிய கணக்காய்வு சட்டமூலத்தை இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள தகவலை சட்ட மூலம் தொடர்பில் மீளாய்வில் ஈடுபட்டுள்ள அமைச்சரவை உப குழு வெளிப்படுத்தியுள்ளது.

இது குறித்துக் கருத்துரைத்துள்ள அமைச்சரவை உப குழுவின் தலைவர் கலாநிதி சரத் அமுனுகம,

"அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு, அது தொடர்பான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட புதிய சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. மீளாய்வுக் குழுவில் அமைச்சர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, மங்கள சமரவீர மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். அநுரபிரியதர்ஷன யாப்பா வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டுள்ளதால் அவர் நாடு திரும்பியதன் பின்பு சட்டமூலம் தொடர்பான திருத்தத்துக்கு அவரின் அனுமதி பெறப்படும். அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். 1983 ஆம் ஆண்டு தேசிய கணக்காய்வு சட்டமூலம் அப்போதைய கணக்காய்வாளர் நாயகம் காமினி யாப்பாவினால் தயாரிக்கப்பட்டது. எனினும் அந்த சட்டமூலத்திற்கு அனுமதி கிடைக்கவில்லை. பின்பு கடந்த 2003 ஆம் ஆண்டு தேசிய கணக்காய்வு தொடர்பான புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டது. ஆனாலும் அந்தச் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்படவில்லை" - என்றார்.

மேலும், கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி உருவாக்கப்பட்ட நல்லாட்சி அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் தேசிய கணக்காய்வுச் சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இருந்த போதிலும் அந்த அறிவிப்புகள் எவையும் இதுவரை காலமும் நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ)

வாடிக்கையாளர் தேவையை அபான்ஸ் பூர்த்தி செய்துள்ளது

எல்.ஜி அதிதிறன் இன்வெர்டர் வீட்டுப் பாவனை பொருள்கள் சந்தைக்கு அறிமுகம்

இலங்கையில் எல்.ஜி உற்பத்திகளுக்கு முதன்மை அங்கீகாரம் கொண்ட ஒரேயொரு விற்பனை முகவர் நிறுவனமாகத் திகழும் அபான்ஸ், வாடிக்கையாளர் பன்முகத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக எல்.ஜி அதிதிறன் இன்வெர்டர் வீட்டுப் பாவனை பொருள்களைச் சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளது.

எல்.ஜி அதிதிறன் உற்பத்திகளான சலவை இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி, இன்வெர்டர் வளிச்சீராக்கிகள், எல்.ஜி நியோ செவ்ரிஎம் மைக்ரோவேவ் அவண் போன்றவற்றை இலங்கை வாடிக்கையாளர்கள் அபான்ஸ் வலையமைப்பின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடிகிறது.

தவிர எல்.ஜி அதிதிறன் இன்வெர்டர் தொழில்நுட்பம் இருப்பதால் எல்.ஜி வீட்டுத் தளபாட உற்பத்திகளைக் கொள்வனவு செய்த நாள் முதல் மிகச்சிறந்த முறையில் மின்சாரத்தை சேமிக்கிறது. மிகச்சிறந்த செயற்றிறனை தருகின்றன.

அந்தவகையிலே, எல்.ஜி சலவை இயந்திரங்களில் உள்ள இன்வெர்டர் டிரெக்ட் ரைவ் மோட்டர்களைக் கொண்டுள்ளதால் இது அதிக மின்சாரத்தை சேமிக்கிறது. ஒன்றுடன் ஒன்று மாறுபட்ட கோணங்களில் சூழலும் பல்செட்டர் மூலம் அடர்த்தியான கறைகளை இலகுவாக நீக்குகிறது. வீட்டிலேயே பளபளப்பான சலவையைப் பெற்றுக் கொள்ள முடியும். இன்வெர்டர் டிரெக்ட் ட்ரைவ் தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது.

இலங்கையில் வீட்டு மின் உபகரணங்களுக்கான தீர்வுகளை நிறைவாக வழங்குவதில் முன்னணி நிறுவனம் என்ற அங்கீகாரத்துடன் அபான்ஸ் நிறுவனம் திகழ்கிறது. மின்சாரத்தை சேமித்து சூழலை பாதுகாக்கும் மிகச்சிறந்த உற்பத்திகளை பெற்றுக்கொள்ள அருகாமையில் அபான்ஸ் அல்லது அபான்ஸ் எலைட் காட்சியறைகளை தொடர்பு கொள்ள முடியும்.

எல்.ஜி குளிர்சாதனப் பெட்டியைப் பொறுத்தவரை அவற்றில் இணைப்புப் பெற்றுள்ள இன்வெர்டர் லீனியர் கொம்பிறேசர் குளிர்சாதனப் பெட்டியில் குறித்த வெப்ப நிலையை கடைப்பிடிப்பதற்கான வேகத்தைச் சீராகக் கூட்டி குறைக்கின்றது. இதன்மூலம் மின்சாரம் சேமிக்கப்படுகிறது. குளிர்சாதனப் பெட்டியில் களஞ்சியப்படுத்தப்படுகின்ற உணவுப் பொருள்களின் அளவு அடிப்படையில் வெப்பநிலையின் அலகை தேவையான அளவுகளில் பேணிக்கொள்வதற்கும் இது உதவுகிறது. லீனியர் கொம்பிறேசர் வெப்பநிலையை கூட்டி குறைக்கிறது. அதிக வினைத்திற னுடன் செயற்படுகிறது.

எல்.ஜி இன்வெர்டர் வளிச்சீராக்கிகள் 60 வீதம் வரை வேகமாக மின்சாரத்தை சேமிக்கும் விசேட உற்பத்தியாக உறுதி செய்யப்பட்டுள்ளன. புதிய டுவல் கூல் வளிச்சீராக்கி, கொள்வனவு செய்த நாள் முதல் உயர் மின்சார சக்தியின் சேமிப்புடன் வேகமான குளிர்சியை பெற்றுத்தருகிறது. வளிச் சீராக்கி முழுமையான பில்டர் அமைப்பைக் கொண்டுள்ளதுடன் தூசு மற்றும் கிருமிகள் அற்ற சுத்தமான காற்றைப் பெற்றுத்தருகிறது. குடும்ப அங்கத்தவர்களின் ஆரோக்கியத்தை பேணுவதோடு கொம்பிறேசருக்கு 10 வருட உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

எல்.ஜி நியோ செவ்ரிஎம் மைக்ரோவேவ் அவண் பல்வேறு வகையான உணவுகளை தயாரிக்கும் பணிகளை விரைவுபடுத்துகிறது. மின்சாரத்தை அதிகம் சேமிக்கிறது. மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பான சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது. பக்டீரியாவை அழிக்கும் 'ஈசி கிளீன் ரி.எம்' கிருமிகள் தொற்றி உணவுகள் பழுதடைந்து போவதை தடுக்கிறது. பக்டீரியா உருவாகுவதை 99.9 வீதம் வரை கட்டுப்படுத்துகிறது.

உயர்த்தர நவீன வீட்டுப் பாவனை உபகரணங்களை வழங்குவதில் முன்னணி நிறுவனமான எல்.ஜி எலக்ட்ரோனிக்ஸ் அறிமுகம் செய்யும் உற்பத்திகளின் தரம் மற்றும் தர நிலைகள் மிகச் சிறப்பாக உள்ளன என்றும் சொல்லப்படுகிறது. (ஒ)

CSE COLOMBO STOCK EXCHANGE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455
18/9/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

ASPI	7.62	6,409.65	6,402.03
S&P SL20	1.35	3,683.69	3,682.34
வியாபாரப்புரள்வு		459,225,408	11,447,194,600
உள்நாடு- கொள்வனவு		183,866,464	11,157,211,100
விற்பனை		281,543,616	322,909,024
வெளிநாடு- கொள்வனவு		275,358,944	289,983,040
விற்பனை		177,681,776	11,124,285,400



கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம்	குறியீடு	இறுதிவிலை	பங்குகள்	புரள்வு (Rs)
ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ்	JKH.N	165	775,460	126,801,226
கோமாஸ் ஹோல்டிங்ஸ்	HHL.N	122	557,089	67,413,795
கொமர்சியல் வங்கி	COMB.N	137	177,334	24,282,184
லங்கா மில்க்பூட்ஸ்	LMF.N	140	162,041	23,333,900
நேஷனல் டெவலப்மென்ட் வங்கி	NDB.N	131	144,289	18,899,885
கொமர்சியல் வங்கி	COMB.X	105.10	158,915	16,686,553
லங்கெம் டெவெலப்மென்ட்ஸ்	LDEV.N	7.9	2,094,628	16,133,592
காளமேஸ்வ்	KZOO.N	5.4	2,062,685	11,004,481
சிலோன் டுபாக்கோ	CTC.N	1001	9,296	9,296,827
மாதுளசிமா ப்ளண்டஷன்ஸ்	MADU.N	15.2	469,075	7,217,635

அறிவித்தல்கள்
பங்குலாபம்
கார்கில்ஸ் (CARG) - Rs. 1.90
சி டி கோல்டிங்ஸ் (CTHR) - Rs. 1.80
ஹன்டர்ஸ் அண்ட் கம்பெனி (HUNT) - Rs. 3.75

சந்தைக் குறிகாட்டிகள்.

கம்பனிகள்	295
பரிமாற்றத்தில்	248
விலை உழைப்பு	10.7
புத்தகப்பெறுமதி	1.4
பங்குலாப விளைவு	3

யாழ்ப்பாண பன்னாட்டுத் திரைப்பட விழா

ஈழத்துத் தமிழ் சினிமாவின் எழுச்சிக்கு உதவவேண்டும்

■ தேவநாயகம் தேவானந்த்
(யாழ் மாவட்ட அரசார்பற்ற நிறுவனங்களின் இணையம்.)

போர் முடிவுற்றதன் பின்னர் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கத்துக்காக கலைகளைப் பயன்படுத்தும் பணித்திட்டங்கள் பெரியளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த பணித்திட்டங்கள் எல்லாம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை வலுவூட்டுதல் என்ற உயரிய நோக்கத்தில் தீட்டப்பட்ட திட்டங்களாகவும், அதற்காக வகுத்தமைக்கப்பட்ட செயற்திட்டங்களாகவும் காணப்படுகின்றன. ஆனால் இந்த இலக்கு அடையப்பட்டதா? என்ற கேள்வியைக் கேட்டால் இல்லை என்ற பதிலே கிடைக்கிறது. இந்தத் தோல்விக்கான காரணம் என்ன என்பது பற்றிய கட்டமைக்கப்பட்ட மதிப்பீடுகளோ, ஆய்வுகளோ சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை எனலாம்.

போர் நிறைவடைந்த பின்னர் வடபகுதியில் குறிப்பாக கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்தில் கலை, விளையாட்டு, வர்த்தகம், கல்வி போன்ற பல்வேறு துறைகளில் தேசிய மற்றும் பன்னாட்டு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இவை ஒவ்வொன்றும் பல நூறு மில்லியன் செலவில் நடைபெறும் செயற்திட்டங்களாகும். போரினால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தின் மீள்கட்டுமானம் என்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு சமூகத்தின் இயலாற்றலும், கொள்திறனும் அதிகரிக்கப்பட்டாலே மேற்சொன்ன பெரிய நிகழ்வுகளுக்குச் சொந்தக்காரர்களாகவும், பங்காளிகளாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் இருக்க முடியும்.

இந்தச் சுழலில் பாதிக்கப்பட்டவர்களின் மீள்நிர்மாணத்துக்கும், மீள் எழுச்சிக்கும் முதலில் பாடுபடவேண்டும். போரினால் அழிந்து போன நடவடிக்கைகளை மீளக்கண்டு பிடித்தல், பாதுகாத்தல் மற்றும் வளர்த்தெடுத்தல் போன்ற செயற்பாடுகள் நடைபெற வேண்டியவையாகின்றன. இதற்கு நீண்டகாலமும், அர்ப்பணிப்பும் நிதிச்செலவுகளும் ஏற்படும். இவை கருத்தில் கொள்ளப்படுகின்றபோதுதான் பாதிக்கப்பட்ட சமூகம் புத்துயிர்பெற்ற வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புக்களைப் பெறமுடியும்.

வழங்கப்பட்ட நிதி பாதிக்கப்பட்டோருக்கு கிடைக்கவில்லை

இந்தச் சுழலில் வடபகுதியில் நடைபெற்ற கலைசார்ந்த தேசிய விழாக்களை அவதானித்த அடிப்படையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண பன்னாட்டுத் திரைப்பட விழா சார்ந்த கருத்துக்களை முன்வைக்கின்றோம். இதில் கடந்தகாலத்தில்நடைபெற்ற இரண்டு பெரிய செயற்திட்டங்கள் பற்றி நாம் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

01. யாழ்ப்பாண இசைவிழா (Jaffna Muisc Fesitval)

02. Wigns Art For Recnociliation Programme (WIN) நல்லிணக்க நிகழ்ச்சி இலங்கை உள்நாட்டு போரில் பாதிக்கப்பட்ட மக்களின் வலுப்படுத்தலுக்கான கலை சார்ந்த பணிக்காகப் பல நிதிக்கொடை நிறுவனங்கள், பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாடுகளின் தூதுவராலயங்கள் போன்றவையும் பெரியளவில் நிதியை வழங்கியிருந்தன. இந்த நிதிகளை எந்தவொரு பாதிக்கப்பட்ட சமூகம் சார்ந்த அமைப்பும் பெற்றுக்கொள்ளவில்லை என்பது வெளிப்படையானதாகும். மாறாக கொழும்பை மையப்படுத்திய அமைப்புக்களே அவற்றைப் பெற்றுக் கொள்கின்றன.

இவ்வாறு கடந்த ஐந்தாண்டுகளில் பலநூறுமில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

தென் பகுதிக்குள் குவிகிறது பொருளாதாரத் திட்டங்கள்

இவ்வாறான செயல்திட்டங்களின் மூலம் உள்ளூர் சமூகம் பயன்பெற்றிருக்க வேண்டும். ஒரு பிரதேசத்தில் இவ்வாறான பெரிய செலவிலான நிகழ்வுகள் நடைபெறும் போது ஆகக் குறைந்தது உள்ளூர் பொருளாதாரம் அதனால் பயனடைய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக மேலிருந்து கீழ் வடிந்து வரும் (Tirckled donw theory) பொருளாதார செயல்முறை மூலம் அந்த நன்மை அடையப்பட முடியும் என்று பொருளாதார வல்லுனர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் யாழ்ப்பாணம் மற்றும் வடபகுதியைப் பொறுத்தவரையில் இந்தப் பொருளாதாரப் பயன் கூட எந்தவொரு தேசிய நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற போதும் கிடைக்கவில்லை என்னலாம். எல்லாப் பொருளாதார நன்மைகளும் கொழும்பை மையப்படுத்தியதாகவே திட்டமிடப்படுகின்றன. அனைத்துப் பொருளாதாரப் பயன்களும் தென்பகுதிக்குச் சென்றடைவதை நோக்காகக் கொண்டே செயற்படுத்தப்பட்டன; தற்போதும் செயல்படுத்தப்படுகின்றன. இந்தப் பெரிய செயற்திட்டங்கள் தொடர்பான வெளிப்படைத்தன்மையும் வகைகூறலும்காணப்படுவதில்லை. அதே போன்று பாதிக்கப்பட்டவர்களான வடபுலத்தவர்கள் பங்காளிகளாக இணைக்கப்படுவதற்கோ மற்றும் அவர்கள் அந்தத் திட்டத்தைச் சொந்தம் கொண்டாடுவதற்கோ வாய்ப்பளிக்கப்படுவதில்லை. மாறாக பெரியதிட்டங்களில் பாதிக்கப்பட்ட சமூகத்தவர்களில் ஒரு சிலர் வெறும் கூலிகளாகவே நியமிக்கப்படுகின்றார்கள். அவர்களைப் பங்காளிகளென்று காட்ட முற்படுகிறார்கள். இதனால் எமது பகுதியின் இயலாற்றலும் கொள்திறனும் வளர்த்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லாது போகின்றன. அதே நேரம் பௌதீக வளங்களும் கூட விருத்தியாக்கப்படுவதில்லை என்பதையும் அவதானிக்க முடிகின்றது.

மேலே சொல்லப்பட்ட மிகப்பிரமாண்டமான கலைசார்ந்த செயற்திட்டங்கள் பல நூறு மில்லியன் ரூபா செலவில் நடைபெற்றவையாகும். இதில் அண்மையில் நடைபெற்ற கலையூடான இனங்களுக்கிடையிலான மீள்நல்லிணக்கம் என்ற கோஷத்துடன் நடைபெற்ற விங்ஸ் நிகழ்ச்சித்திட்டம் ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியுடன் நடைபெற்றதாகும். இதற்கு 270 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக ஊடகங்கள் ஊடாக பகிரங்கப்படுத்தப்பட்டது. இதில் ஐந்து தொடக்கம் பத்து வீதமான நிதி மட்டுமே வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் செலவிடப்பட்டிருக்கிறது. மீதமான 90 வீதமான பணமும் கொழும்பை மையப்படுத்தியே செலவிடப்பட்டிருக்கின்றது. இந்தச் செயற்திட்டம் நாம் மேலே சொன்ன விடயங்களைத் தெளிவாக்குவதற்கான சிறந்ததொரு உதாரணமாகும்.

பாதிக்கப்பட்ட தரப்பை தூக்கிவிடுதல் அவசியம்

மீள்நல்லிணக்கம் என்பது, பாதிக்கப்பட்டு கீழ்நிலையில் உள்ளவரை கைகொடுத்து மேலே தூக்கி எடுத்து அவரை இயல்பு நிலைக்குக் கொண்டுவந்ததன் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடாகும். இலங்கையில் வேடிக்கையான செயலாக இந்தச் செயல்முறை தலைகீழாக நடக்கிறது. பாதிக்கப்பட்டவர் அதே நிலையில் இருக்க அவர் இயல்பு நிலையில் இருப்பதான கற்பனைத் தோற்றத்தை ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட வரைச் சமநிலையில் வைத்துப் போட்டி அடிப்படையில் செயற்திட்டங்களை அணுகுமாறு கட்டாயப்படுத்துகிறார்கள். இந்தச் சமநிலையில் உள்ள இருவருக்கிடையில் நடைபெறுவதான தோற்றப்பாட்டுடன் நடைபெறும் போட்டியில் ஏலவே இயல்பு நிலையில் காணப்பட்ட வலுவான நிலையில் காணப்பட்ட தென்பகுதிச் சமூகம் பயனடையுமாறு செயற்திட்டம் சார்பு நிலை பெறும் துயரம் நடக்கிறது. குறிப்பாக கொழும்பில் மையம் கொள்வதான பிராந்தியச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறார்கள்.

நல்லிணக்கச் செயற்பாடு என்பது இரண்டு சமநிலையில் உள்ள தரப்பினர் சமதளத்தில் நின்று கைகொடுத்துக்கொள்வது என்று வரையறுக்க முடியும். ஒருவர் மேல்நிலையிலும், இன்னொருவர் கீழ்நிலையிலும் இருந்துகொண்டு சமவாய்ப்புப் பற்றியும் நல்லிணக்கம் பற்றியும் பேச முடியாது. இந்த சமனற்ற சுழலில் போரினால் பாதிக்கப்படாத, இயல்பு நிலையில் உள்ள தென்பகுதிச் சமூகம் தனது மேல் நிலையான நன்கு தேர்ச்சி பெற்ற தனது கொள்திறனாலும், இயலாற்றலாலும் (Capacity and Skill) இலகுவாக ஆங்காங்கே கிடைக்கின்ற வளங்களைத் தமதாக்கிக் கொள்கிறார்கள். தமது செயற்திட்டங்களை, பாதிக்கப்பட்டவர்கள் சார்பானதான தோற்றத்தை உருவாக்குவதற்காக முகவர்களைக் கூலிக்கமர்த்தி தமது செயற்திட்டம் வெற்றி பெற்றதாகக் காட்டுகிறார்கள் அல்லது காட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால் உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டவர்களாகவே தொடர்ந்து நீடிக்கிறார்கள் இந்தச் சுழ்நிலையை 28 அமைப்புக்களை அங்கத்தவ நிறுவனமாகக் கொண்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் எப்போதும் கண்டித்து வந்திருக்கிறது. தொடர்ந்து தனது எதிர்ப்பை பதிவு செய்து வந்திருக்கிறது.

இதனால் பாதிக்கப்பட்டவரின் பெயரால் போரினால் பாதிக்கப்படாத சமூகம் நன்மையடைவதான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை நாம் எப்போதும் விமர்சனத்துக்குட்படுத்துவதும், சந்தேகத்தோடு நோக்குவதும், எதிர்ப்பை பதிவு செய்வதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். இவ்வாறான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற நிதிக்கொடை நிறுவனங்கள், பன்னாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா சபை அமைப்புக்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்கள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று வினயமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறான செயற்திட்டங்களை ஊக்குவிப்பதைத் தவிர்த்துப் பாதிக்கப்பட்ட சமூகம் நன்மையடைவதான செயற்திட்டங்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். பாதிக்கப்பட்ட சமூகம் தான் சார்ந்த ஒரு செயற்திட்டத்தில் தான் உண்மையான பங்காளியாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதும், தான் அந்தச் செயற்திட்டத்தைச் சொந்தம் கொண்டாட நினைப்பதும் தவறான எண்ணமென்று கருத முடியாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

யாழ்.பன்னாட்டுத் திரைப்பட விழா தொடர்பில் எழும் சந்தேகங்கள்

இந்தப் பின்னணியிலேயே பல நிதிக்கொடை நிறுவனங்கள், ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் உயர்தானிகராலயங்கள், பன்னாட்டு நிறுவனங்களின் ஆதரவுடன் நடைபெறுகின்ற யாழ்ப்பாண பன்னாட்டுதிரைப்பட விழாவையும் நோக்க வேண்டியுள்ளது.

யாழ்ப்பாண பன்னாட்டுத்திரைப்பட விழாவை யாழ்ப்பாணத்தின் அமைப்புக்களும், தனிநபர்களும் திட்டமிட்டு உரிமை கொண்டாடி நடத்துவதே பொருத்தமானதாகும். கொழும்பிலிருந்து திட்டமிடுவதை வெறுமனே நடைமுறைப்படுத்தும் கூலிகளாக அல்லாமல் பிராந்தியத்தில் தாமே தட்டமிட்டு நடத்தும் ஒன்றாக இது மாற்றம் பெற வேண்டும். அதன் மூலம் தான் இலங்கைத் தமிழ் சினிமாவின் வளர்ச்சியைச் சாதிக்க முடியும்.

எண்பது ஆண்டுகளுக்கு மேலான தமிழ் நாட்டின் நீண்ட சினிமா வரலாற்றோடு எமது சினிமாப்பாரம்பரியத்தையும் சமகாலத்தில் இனங்காண முடியும். குறிப்பாக நுகர்வு அடிப்படையில் அது ஆரம்பமாகி பின்னர் சுயமாகத் திரைப்படங்களைத் தயாரிப்பதாக பரிணாமம் பெற்றிருக்கிறது. அறுபது மற்றும் எழுபதுகளில் ஈழத்து தமிழ் சினிமாவில் தனித்துவமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுப் பல திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. ஆனால் போரினால் இந்தத் தொடர்ச்சி தடைப்பட்டு இலங்கைச் சினிமா என்பது தனியவே சிங்களச் சினிமா என்ற அடையாளப்படுத்தலுக்குட்பட்டது. இந்த அடையாளத்தின் நீட்சியாக ஈழத்தமிழ் சினிமாவின் வளர்ச்சிக்கான வீரியமான **வித்துக்களின் உருவாக்கத்துக்கு** தடையாக, சினிமா சார்ந்த முயற்சிகளை கொழும்பை மையப்படுத்தியதாக திட்டமிடுவது எமக்கு பயன்தராத ஒன்றாகவே கருதவேண்டியுள்ளது.

அதேவேளை போர்க்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சினிமா சார்ந்த செயற்பாடுகள் குறிப்பாக 'எமக்கான படங்களை நாங்களே தயாரித்தல்' என்ற எண்ணத்தில் தயாரிக்கப்பட்ட பல திரைப்படங்கள், குறுந் திரைப்பட முயற்சிகள் என்பன அடியோடு தடைப்பட்டுள்ளன என்பதையும் மனங்கொள்ள வேண்டும். எழுபதுகளின் முயற்சிகள் மற்றும் போர்க்கால முயற்சிகளின் தொடர்ச்சியாக அவற்றிலிருந்து மேலும் வளர்ந்து செல்வதற்கான வாய்ப்பாகவே பெருமளவில் வளத்திரட்டலோடு நடைபெறும் யாழ்ப்பாண பன்னாட்டுத் திரைப்பட விழா அமைய வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். மாறாக முற்றுமுழுதாக கொழும்பு சார்ந்த திட்டமிடலும் அவர்களே வளங்களை திரட்டிக் கொள்வதுமான செயல்முறை நடக்கின்றபோது இது சாத்தியமாகாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கைச் சினிமா என்பது சிங்களச் சினிமா அல்ல

இலங்கைச் சினிமா என்பது சிங்களச் சினிமா என்ற அடையாள்த்தை வலுப்படுத்துவதாகவே யாழ்ப்பாண பன்னாட்டுத் திரைப்பட விழா அமைந்திருக்கிறதோ? என்ற நியாயமான சந்தேகம் எமக்குள்ளது. இதனால் யாழ்ப்பாண திரைப்பட விழா ஈழத்து தமிழ் சினிமாவுக்கு ஊட்டம் சேர்ப்பதாக திட்டமிடப்பட வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். இதற்கேற்ப உள்ளூர் தன்மையோடு இது அமைதல் வேண்டும். தற்போது குறுகிய வட்டத்துக்குள் காணப்படும் இந்த திரைப்பட விழா பெரியவட்டமாக மாற்றம் பெற வேண்டும். அவ்வாறானதொரு நிலைமை காணப்பட்டால் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் காலத்தில் திரைப்பட விழா நடத்துவதான ஒவ்வாத நிலைமைகள் ஏற்படும் வாய்ப்பு இல்லாது போகுமென்று நம்புகின்றோம்.

இந்த விழாவுக்கு ஆதரவு நல்குகின்ற நிதிக்கொடையாளர்கள், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு உயர்ஸ்தானிகராலயங்கள் யாழ்ப்பாணத் திரைப்பட விழா வடபகுதி மக்களின் திரைப்பட விழாவாக நடைபெற ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். உள்ளூர் அமைப்புக்களின் உண்மையான பங்குபற்றதலுடன் அவர்களின் சொந்தம் கொண்டாடுதலுடனும் நடைபெறுவதற்குரியதான ஏதுநிலையை உருவாக்க நாமெல்லோரும் பாடுபடுவோம். இதற்காக வெளிப்படைத்தன்மையுடனும் வகைகூறல் தன்மையுடனும் கூடிய செயல்திட்டங்கள் வகுத்தமைக்கப்பட வேண்டும். தற்போதுள்ளது போன்று தனிநபர்களோ தனி அமைப்புக்களோ பயன்பெறும் வகையிலல்லாமல், தற்போது நடைபெறுவது போன்று மக்களுடன் தொடர்பற்றதாக இந்த விழா நடைபெறாமல் ஈழத்து தமிழ் சினிமாவின் மீள்எழுச்சிக்கு ஏற்ற இயலாற்றலையும், கொள்திறனையும் வளர்த்தெடுப்பதற்குரியதாக இதனை மக்களின் விழாவாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

பத்தி எழுத்து

துணிவுடன் செயற்பட வேண்டும் கூட்டரசு

அரசின் நடவடிக்கைகளை அவதானித்துப் பார்க்கும்போது தமிழர்களின் கோரிக்கைகள் எதுவுமே நிறைவேற்றப்படாது என்பது தெளிவாகத் தெரிகின்றது. வடக்கு, கிழக்குமாகாணங்களின் இணைப்பு, கூட்டாட்சி முறை, காணாமற் போனவர்களின் விடயம், இடம்பெயர்ந்து இன்னமும் சொந்த இடங்களுக்குச் செல்லாதவர்களின் அவலநிலை, இறுதிப் போரின்போது இடம் பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை இவ்வாறு ஏராளமான பிரச்சினைகளைத் தாங்கியவர்களாகத் தமிழர்கள் காணப்படுகின்றனர். ஆனால் இவற்றுக்கான தீர்வு கிடைப்பதற்கான அறிகுறி எதுவும் இது வரை தெரியவில்லை. அரசின் உயர் தலைவர்களும் அவர்களுக்குக் கீழே உள்ளவர்களும் காலத்துக்குக் காலம் சாக்குப் போக்கு கூறி வருகின்றனரே தவிர உருப்படியாக எதையும் செய்வதாகக் காணோம். தமிழர்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். அவர்கள் நாதியற்று ஏமாந்த இனம் என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

இந்த விடயத்தில் தமிழர் தலைமையைக் குறைகூறிக் கொண்டு இருப்பதில் எதுவித அர்த்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழர் தலைமை எனும்போது கூட்டமைப்பின் தலைமையையே அது குறிக்கின்றது. சம்பந்தன் தம்மால் இயன்றளவு அரசுடன் பேசி தீர்வைக் காண்பதற்கு முயற்சி செய்திருக்கிறார். புலிகள் அரசுக்குச் சமனான பலத்துடன் இருந்ததால் அவர்களின் வார்த்தைக்கு அப்போது மதிப்புக் காணப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் அரசு விட்டுக் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. ஆனால் இன்றோ தமிழர்களின் நிலை முற்றிலுமாக மாறிவிட்டது. அவர்கள் நிராயுத பாணிகளாக நின்றுகொண்டு நியாயம் கேட்கின்றனர். இதற்கு மதிப்புக் கிடைக்குமென எதிர்பார்க்கவும் முடியாது.

ஆனால் கூட்டரசு தனது பெயருக்கு ஏற்றாற்போன்று நடந்துகொள்ள வேண்டும். தமிழர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்தான் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அரசுக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருக்கலாம். அதற்காகத் தமிழர்களைப் புறமொதுக்கிவிட்டு நடந்துகொள்ள முடியாது. இனவாதிகள் இப்போது மட்டும் இனவாதத்தைக் கக்கவில்லை. நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்தே இனவாதம் இந்த நாட்டின் வேதமாக மாறிவிட்டது. இனவாதம் பேசினால்தான் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து கொள்ள முடியுமென்ற நிலை உருவாகிவிட்டது. இதைத் தொடரவிடுவது நாட்டின் ஐக்கியத்துக்கு வேட்டு வைத்துவிடும்.

அரசு துணிவுடன் செயற்பட்டால் பகைவர்கள் மறைந்து போவார்கள். பயந்து நடுங்கினால் பகைவர்களுக்கு அடங்கிப் போக வேண்டி நேரிட்டுவிடும்.

புரட்டாதி மாத ராசிபலன்

(17.09.2017 - 17.10.2017) உங்களுக்கு எப்படி?

மிதுனம்

பிரச்சினைகள் தீரும்

மதியாதார் முற்றம் மிதிக்காத நீங்கள், யாருக்காகவும், தன் கொள்கை, கோட்பாடுகளை மாற்றிக் கொள்ள மாட்டீர்கள். உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் ராகு அமர்ந்திருப்பதால் எவ்வளவு பிரச்சினைகள் வந்தாலும் சமாளித்து வெற்றி பெறுவீர்கள். வழக்கு சாதகமாக முடியும். குடும்ப வருமானம் உயரும். பழைய பெரிய பிரச்சினைகள் தீரும். ஆனால், சின்னச் சின்ன பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். உங்கள் ராசிக்கு பூர்வ புண்யாதிபதியான புதன் 8ஆம் திகதி வரை வலுவாக இருப்பதால் நிம்மதி, பணவரவு, எதிர்ப்புகள் நீங்கும். குழந்தைப்பாக்கியம் கிட்டும். உறவினர், நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். பூர்வீக சொத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள்.

ஆனால் 9ஆம் திகதி முதல் புதன் 6ஆம் வீட்டில் மறைவதால் மன உளைச்சல், நரம்புச் சுளுக்கு, சளித்தொந்தரவு, பணம்கொடுக்கல், வாங்கலில் பிரச்சினை வந்துபோகும். 13ஆம் திகதி வரை செவ்வாய் சாதகமாக இருப்பதால் பூமி சம்பந்தப்பட்ட சிக்கல்கள், சொத்துப் பிரச்சனைகள், பாகப் பிரிவினைகள் சாதகமாக முடியும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். சகோதர, சகோதரிகள் பக்கபலமாக இருப்பார்கள். 5ம் வீட்டில் நிற்கும் சூரியனுடன் 14ஆம் திகதி முதல் செவ்வாயும் சேர்வதால் பிள்ளைகளால் அலைச்சல், செலவுகள் வந்துபோகும். அரச விடயங்கள் தள்ளிப்போய் முடியும். உங்கள் ராசிநாதன் சுக்கிரன் சாதகமான நட்சத்திரங்களில் சென்று கொண்டிருப்பதால் வாகனப்பழுதுநீங்கும். பாதியிலேயே நின்று போன வீடு கட்டும் பணி முழுமையடையும். உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். குரு 6ஆம் இடத்தில் மறைந்திருப்பதால் அவ்வப்போது தூக்கம்குறையும். மற்றவர்கள் உங்களைப்பற்றி குறைவாகவும், தாழ்வாகவும் நினைப்பதாக எண்ணுவீர்கள். அந்த தாழ்வு மனப்பான்மை வேண்டாம். அரசியல்வாதிகளே! வீண் பேச்சில் காலம் கழிக்காமல் செயலில் ஆர்வம் காட்டுவதுநல்லது. கன்னிப்பெண்களே! யார் எது பேசினாலும் நம்பிவிடாதீர்கள். உண்மையானவர்களை இனங்கண்டறியப் பாருங்கள். பெற்றோர் ஆதரிப்பார்கள். மாணவ மாணவிகளே! விளையாட்டைக் குறைத்துக்கொள்ளுங்கள். ஆசிரியர்களிடம் தயங்காமல் சந்தேகத்தை கேளுங்கள். வியாபாரம் சுமாராக இருக்கும். சந்தை நுணுக்கங்களை தெரிந்துகொண்டு முதலீடு செய்யுங்கள். பங்குதாரர்களுடன் கருத்து மோதல்கள் வரக்கூடும். ஏற்றுமதி, இறக்குமதி, உத்தியோகத்தில் கொஞ்சம் உஷாராக இருங்கள். மூத்த அதிகாரிகள் உங்களின் கடின உழைப்பைப் புரிந்து கொள்ள மாட்டார்கள். சக ஊழியர்களில் சிலர் உங்களை உதாசீனப்படுத்துவார்கள்.

கலைத்துறையினரே! உங்களுக்கு எதிராக விமர்சனங்கள் வந்தாலும் அஞ்சவேண்டாம். விவசாயிகளே! நவீன ரக உரங்களை கையாளுவதால் விளைச்சலில் இருந்து வந்த மந்த நிலை மாறும். ஆழமறிந்து காலை விட வேண்டிய மாதமிது.

வரலாற்றில் இன்றைய தினம் 19.09.2017

335 - முதலாம் கொன்ஸ்ரன்ரைனால் அவரது மருமகன் பிளேவியஸ் டல்மேசியஸ், 'சீசர்' தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டார்.

1356 - இளவரசர் எட்வட்பிளாக் தலைமையிலான ஆங்கிலப் படைகளால் பிரெஞ்ச் படைகள் தோற்கடிக்கப்பட்டு பிரெஞ்ச் அரசர் இரண்டாம் ஜோன் சிறைபிடிக்கப்பட்டார்.

1796 - ஜோர்ஜ் வொஷிங்டனின் பிரியாவிடை உரை அச்சிடப்பட்டு அமெரிக்கா முழுவதும் பொதுமக்களுக்கு திறந்த மடலாக வழங்கப்பட்டது.

1881 - ஜூலை 2ஆம் திகதி யுப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த நிலையில் அமெரிக்க அதிபர் ஜேம்ஸ் ஏ. கார்பீல்ட் உயிரிழந்தார். உதவி அரச தலைவர் செஸ்ரர் ஏ. ஆதர் அரச தலைவரானார்.

1893 - நியூசிலாந்தில் புதிய சட்டதிருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டு அனைத்துப் பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.

1952 - பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொண்ட நிலையில் அமெரிக்காவுக்குள் மீண்டும் நுழைய சார்ளி சாப்ளினுக்கு அமெரிக்காவால் தடை விதிக்கப்பட்டது.

1978 - சொலமன் தீவுகள், ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தன.

2007 - தாய்லாந்து இராணுவத்தினால் பாங்கொக்கில் இராணுவச் சதித் திட்டம் தீட்டப்பட்டது. இதையடுத்து அரசமைப்பு மீளப் பெறப்பட்டு மார்ஷல் சட்டம் கொண்டுவரப்பட்டது.

2016 - அதிகாரப் பகிர்வின் மூலமே தீர்வு என்று அமைச்சர் மனோ தெரிவிப்பு.

1974 - துருக்கி வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி 452 துருக்கி ஒஸ்மேனியா ரரூஸ் மலைப் பகுதியில் மோதியதில் அதிலிருந்த பயணிகள் விமானிகள் என 154 பேர் உயிரிழந்தனர்.

நாளை
20.09.2017
புதன்கிழமை
புரட்டாதி 4
திதி: அமாவாசை மு.ப. 11.23 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.இ. 12.16 வரை
சுபநேரம்: 04.33–06.03 வரை
ராகுகாலம்: 12.03–01.33 வரை



சினிமா

'விழித்திரு'
ஒக்ரோபரில் திரைக்கு

இயக்குநர் மீரா கதிரவன் இயக்கத்தில் கிருஷ்ணா, வித்தார்த், வெங்கட் பிரபு நடிப்பில் உருவாகியிருக்கும் 'விழித்திரு' படம் அடுத்த மாதம் 6ஆம் திகதி திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'அவள் பெயர் தமிழரசி' திரைப்படத்திற்கு பிறகு இயக்குநர் மீரா கதிரவன் இயக்கித்தயாரித்திருக்கும் படம் 'விழித்திரு'. கிருஷ்ணா வித்தார்த், வெங்கட் பிரபு முன்னணி கதாபாத்திரங்களில் நடித்திருக்கின்றனர். தம்பி ராமையா, எஸ்.பி.சரண், தன்சிகா, அபிநயா, ராகுல் பாஸ்கரன், எரிக்கா பொன்னாண்டஸ், பேபி சாரா, சுதா சந்திரன் மற்றும் சிரஞ்சீவியின் சகோதரர் நாக பாபு உள்ளிட்ட பலரும் துணைக் கதாபாத்திரங்களில் நடத்துள்ளனர். கடந்த பெப்ரவரி மாதம் இந்தப் படம் திரைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது. எனினும் சில சிக்கல்களால் படம் வெளியிடப்படவில்லை. இந்த நிலையில் ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி படம் வெளியிடப்படும் என்று படக்குழு அறிவித்துள்ளது. (ம)

சுடோக்கு
எண் விளையாட்டு

			2		7			
	7	4		3		9	2	
3								6
		5	9		3	8		
			8		2			
		9	1		6	3		
9								4
	1	2		6		5	8	
			7		1			

நேற்றைய விடை

9	4	7	5	8	6	3	1	2
3	8	2	1	7	4	9	6	5
1	6	5	2	9	3	8	7	4
7	5	6	4	3	9	2	8	1
2	3	1	6	5	8	4	9	7
4	9	8	7	2	1	5	3	6
8	1	4	9	6	2	7	5	3
6	7	3	8	4	5	1	2	9
5	2	9	3	1	7	6	4	8

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

இன்றைய நாள்
உங்களுக்கு எப்படி?

மேடம்: உங்களின் நற்செயலை சிலர் குறை சொல்வர். தொழில் வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்தித்தாலும் ஆதாயம் கிடைக்கும்.

இடபம்: உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமா ராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களிடம் கருத்து வேறுபாடு கொள்வர்.

மிதுனம்: நேர்மை எண்ணத்துடன் செயற்படு வீர்கள். புதிய சாதனை நிகழ்த்த வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமா னம் அதிகரிக்கும்.

கடகம்: நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் அபரி மித மான முன்னேற்றம் உண்டாகும். சேமிக் கும் விதத்தில் இலாபம் கிடைக்கும்.

சிங்கம்: பொறுப்பு அதிகரிப்பால் சிரமத்திற்கு ஆளாவீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வா கத்தின் எதிர்ப்பைச் சந்திப்பர்.

கன்னி: முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இடையூறு குறுக்கிடலாம். இலாபம் சுமாராக இருக்கும்.

துலாம்: மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான முன்னேற்றம் ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

விருச்சிகம்: பேச்சில் நிதானம் பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி குறுகிடும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.

தனுசு: நேர்மை மிக்கவராக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும்.

மகரம்: உறவினரிடம் கருத்துவேறுபாடு உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் ஆதா யம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர்.

கும்பம்: சுயநலம் கருதாமல் செயற்படுவீர்கள். கடந்த கால உழைப்புக்கு நற்பலன் தேடி வரும். தொழில் வியாபாரத்தில் இலாபம் திருப்திய ளிக்கும். சேமிப்பு உயரும்.

மீனம்: இனிய பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். உறவினர், நண்பர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும்.

மூன்று காரணங்களால்
மனைவியும் ஒரு திருக்குறள்தான்

- நிறைய அதிகாரம் இருப்பதால்...
- நிறைய இடங்களில் புரிந்தும் புரியாமலும் இருப்பதால்....
- இரண்டே அடியில் எல்லாவற்றையும் உணர வைப்பதால்.....

யோவ் டிரைவர் வண்டியை சாய்க்காமல் ஓட்டக் கூடாதா... சட்னி சிந்துது....!

பிறக்கும்போது சிங்கக் குட்டி வளர்ந்த பிறகு எருமை மாடு

தந்தையதிகாரம்

நீ இல்லாத ஒரு வாழ்க்கையை நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது. நீ இல்லைன்னா என்னால உயிர் வாழ முடியாது...

ஐ லவ் யூ
சாப்பாடு

வாழ்வது என்னவோ ஈசியான விடயம்தான்

அதை நாம் கஷ்டமாக்கிக் கொள்வது ஆசைகளாலும் பேராசைகளாலும்

எந்த றேசர் கொண்டும் அழிக்க முடிவதில்லை வறுமைக்கோடுகளை

மிருகத்துக்குள் ஒரு மனிதம்

ஒருவர் தனது ஆடு மாடுகளுடன் ஆசையாக ஒரு புலிக்குட்டியையும் வளர்த்து வந்தார். புலிக்குட்டி சாதாரணமாக அந்த ஆடு மாடுகளுடனும், அதன் குட்டி களுடனும் விளையாடி நேரத்தை கழிக்கும். அந்த மனிதர் அந்தப் புலிக் குட்டிக்கு அந்த ஆடு மற்றும் குட்டிகளின் மேல் மாமிச ஆசை வராமல் இருக்க அவற்றை ஒன்றாகவே வளர்த்து வந்தார். புலிக்குட்டியும் அவ்வாறே ஆடு மாடுகள் மீதான மாமிச ஆசை இல்லாமல் பழகி வந்தது. ஒரு நாள் அந்தப் புலிக் குட்டிக்கு மாமிச ஆசை வரவே, அது தனது முதலாளியிடம் சென்று தனக்கு மாமிச உணவு வேண்டுமென்று கேட்டது. அன்று முதல் தன்னிடமிருந்த இரண்டு ஆட்டுக் குட்டிகளில் ஒன்றை மட்டும் ஒரு தனிக் குடிலில் வைத்து வளர்க்க ஆரம்பித்தார் அந்த மனிதர். பின்னர் புலிக்குட்டியிடம் "என்றாவது ஒரு நாள் உனக்கு மாமிச ஆசை தலைக்கேறும் போது இந்தக் குடிலின் கதவைச் சேதப்படுத்தி விட்டு அந்த ஆட்டுக் குட்டியைத் தின்று விடு" எனக் கூறினார். புலிக்குட்டியும் அதனை ஒப்புக் கொண்டது.

நாள்கள் நகர்ந்தன. ஒரு நாள் அந்த மனிதர் வெளியூர் சென்றிருக்கையில் அந்தப் புலிக்குட்டிக்கு மாமிச ஆசை தலைக்கேற முதலாளி கூறியவை நினைக்கு வந்தன. அதன்படி குடிலைச் சேதப்படுத்தி உள்ளே இருந்த ஆட்டுக் குட்டியை இருட்டில் வைத்து உண்ண மனமில்லாமல் அறைக்கு வெளியே இழுத்து வந்தது. அப்போது இத்தனை நாள்களும் புலியுடன் கூடி விளையாடிய ஆட்டுக்குட்டிக்கும் வெளியே இழுத்து வந்த ஆட்டுக்குட்டிக்கும் வேறுபாடு தெரியாமல் தடுமாறியது புலிக்குட்டி.

சற்றுயோசித்த புலிக்குட்டி, தான் நாளிலும் பொழுதிலும் விளையாடிய ஆட்டுக்குட்டியின் உடல் வாசத்தை இரண்டு குட்டிகளிலும் இனம் கண்டால் எது தான் உண்ணத் தக்கது? என அறியலாம்" என எண்ணி இரண்டு குட்டிகளையும் முகர்ந்து முகர்ந்து பார்த்து ஏமாந்தது. காரணம் இரண்டு குட்டிகளிலும் தனக்குப் பழக்கபட்ட வாசமே வீசியது. இதனால் இரண்டையும் அது உண்ண மனமின்றி விட்டு விட்டது. முதலாளி வந்ததும் தனது சந்தேகத்தை அவரிடம் வெளியிட்டது புலிக்குட்டி முதலாளியோ "ஒரே ஆட்டின் இரண்டு குட்டிகளை வித்தியாசம் தெரியாமல் வர்ணம் தீட்டி, வாரம் ஒரு ஆட்டுக்குட்டியை குடிலுக்குள்ளேயும் மற்ற ஆட்டுக் குட்டியை வெளியேயும் என இடமாற்றி மாற்றி வைத்து உன்னுடன் (புலிக்குட்டியிடம்) பழக விட்டேன். அதனாலேயே இரண்டு குட்டிகளும் ஒரே நிறமாகவும் வாசமாகவும் உனக்குத் தோன்றன புலிக்குட்டியாகிய உனது மிருகத் தனமான மாமிச ஆசையைப் பழகிய பாசம்வென்று விட்டது" என்றார்.

எவராகிலும் நீண்ட நாள்கள் ஒருவருடன் பழகிய பாசம் அவருக்கு தீங்கிழைக்க எண்ணாது.

இளமைப் பெயர்கள்

வர்ணம் தீட்டுவோம்



தன்னம்பிக்கை என்றால்...

- எம்மிடமுள்ள திறமைகளை ஆராய்ந்து அவற் றின் மீது நம்பிக்கை கொள்வது.
- திறமைகள் ஆளுக்காள் மாறுபடலாம். ஆனால் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு திறமை கண் டிப்பாக உள்ளது என்பதை அறிவது.
- எம்மிடம் மாற்ற இயலாத இயற்கையிலேயே அமைந்திருக்கும் குறைகளை ஏற்றுக் கொள் வது. (நிறம், தோற்றம்) போன்றவை. இவற்றால் தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதைத் தடுக்க லாம்.
- தனது குறை நிறைகளைக் கணித்து, குறை களை நம்பிக்கையுடன் தவிர்க்க தகுந்த முயற்சிகளை மேற்கொள்வது இதற்கு நாம் எமது குறை களை முதலில் ஒப்புக் கொள்ள வேண்டும்.
- மற்றவர்களுடைய கணிப்பில் நாம் எப்படி இருந்தாலும் எம்மைப் பற்றிய எமது கணிப்பில் நாம் நிலையாக உறுதியாக இருப்பது அதாவது மற்றவர்களது இகழ்ச்சியோ, புகழ்ச்சியோ எம்மைப் பாதித்து விடக் கூடாது.
- அனைவரையும் மட்டம் தட்டிப் பேசாமல் மதித்து நடப்பது.
- நியாயமான முறையில் சுய வளர்ச்சியில் கவனம் செலுத்துவது.
- நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையே எமது வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களாக, தடைகளையே படிக் கற்களாக மாற்றியமைப்பது.
- எடுப்பார் கைப்பிள்ளை போல் எல்லோரின் கருத்துக்களுக்கும் தலையாட்டி பொம்மையாக இருக் காது சுய சிந்தனையுடாக சுய முடிவுகளை எடுப்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

பேய்ப் படங்களும் பிள்ளைகளும்



ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் கமலி படிப்பில் சுட்டி. ஆனால் சிறிது நாள்களாக படிப்பில் கவனம் குறைந்து வந்தது. அதனால் பாடங்களுக்கு வழமையில் எடுக் கும் புள்ளிகளும் குறைந்து வந்தன. இரவில் தனியே தன் படுக்கையில் படுக்கும் அவள், இப்போது தன் பெற்றோருடன் சென்று தூங்க விரும்புகிறாள். அடிக்கடி "பயமாக இருக்கிறது" என்கிறாள். அந்த சமயத்தில் அதிக படபடப்பு, வியர்வை அழுகை ஆத்திரம் என்ப வையும் ஏற்படுகின்றன.

முதலில் ஏதோ பயமாய் இருக்கிறது என்கிறவள் பின் னர் பிணத்தை அடிக்கடி காண்பிக்கும் திரைப்படத்தையும் சிறுமி ஒருத்திக்கு (கதாநாயகிக்கு) இரவு வேளையில் பேய் பிடித்து அவள் நடனம் ஆடும் படத்தையும் கார ணமாகச் சொன்னாள். தான் தனியாக இருக்கையில் அந்த திரைப்பட எண்ணங்கள் தன்னைப் பயமுறுத் துவதாகவும் குறிப்பிட்டாள். எது நிஜம், எது மாயத் தோற்றம் என்ற வேறுபாடும் புரியவில்லை என்றும் ஒரு பயம் வந்தால் எல்லா பழைய நிகழ்வுகளும் ஞாபகம் வந்து அதிகம் கொந்தளிப்பு ஏற்படுவதாகவும் சொன்னாள். அவளைப் பெற்றோர் சமாதானப்படுத்தி ஆறுதல் கூறி இரவு வேளைகளில் மனதுக்கு இதமான இசையைக் கேட்டுத் தூங்கும் பழக்கத்தை ஏற்படுத்திய பின்னரே அவள் சிறிது சிறிதாக அந்த அச்ச உணர்வுகளில் இருந்து மீண்டாள்.

பெற்றோர்களே! பேய்ப் படங்களை அது குட்டிச் சுட்டி அலைவரிசையாகட்டும், அல்லது தொடர்நாடகங்களா கட்டும் , திரைப்படங்கள் குறும் திரைப்படங்கள் ஆகட்டும் அவற்றைப் பிள்ளைகள் பார்க்கும் சந் தர்ப்பங்களைத் தவிர்க்க முயற்சி எடுங்கள். பேய்கள் என்ற மாயையிலிருந்து பிள்ளைகளை மீட்டெடுங்கள்.

உதடுகள் அழகு பெற இயற்கை வழிகள்!

- பீட்ரூட்டை துண்டாக நறுக்கி அதை குளிர்சாதனப் பெட்டியில் வைத்து, பின் குளிர்ச்சியானதும், அந்த பீட்ரூட் துண்டுகளை எடுத்து உதடுகள் மீது 2 நிமிடம் மசாஜ் செய்து, பின் 20 நிமிடம் கழித்துக் கழுவ வேண்டும். இதே போல் தினமும் செய்தால், உதடுகளில் உள்ள கருமை விரைவில் மறைந்து விடும்.
- மாதுளம் பழத்தின் சாற்றை உதடுகளின் மீது பூசி வந்தால் உதடுகள் அழகாகும்.
- உதடு காய்ந்திருக்கிறதா என்று அடிக்கடி உதட்டை எச்சிலால் ஈரப்படுத்தக்கூடாது. உதட்டில் இருக்கும் கொஞ்சம் ஈரப்பதமும் போய்விடும். எச்சிலில் இருக்கும் பாக்டீரியாவால் உதட்டில் புண்கள் ஏற்படலாம்.
- கொத்தமல்லி இலைகளின் சாற்றை எடுத்து தினமும் படுக்கைக்குச் செல்லும் முன் உதடுகளில் தடவி வந்தால் உதடு சிவப்பாகும்.



- கொழுப்புச் சத்துக் குறைய குறைய உதடுகள் சுருங்கி வயதானத் தன்மையை அடைகின்றன. அதற்கு வெளிப்புறத்தில் இருந்து ஊட்டம் தரலாம். உதடுகளுக்கு வேசிலின் தடவுவது நல்லது.
- தினமும் இரவில் படுப்பதற்கும் முன்பு எலுமிச்சை சாற்றில், சிறிதளவு சர்க்கரையை சேர்த்து, சர்க்கரை கரைவதற்குள் அதனை உதடுகளில் தடவி மென்மையாக ஸ்கரப் செய்து, பின் 10 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.
- ஊட்டச்சத்துள்ள உணவை சாப்பிட வேண்டும். நிறைய குடி தண்ணீர் குடிக்க வேண்டும்.
- தேங்காய் எண்ணெயில் அரை தேக்கரண்டி சாதிக்காய் பொடியைச் சேர்த்து குழைத்து உதடுகளின் மேல் தடவி வந்தால் உதடுகள் சிவந்து பளபளப்பாகக் காட்சியளிக்கும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

தவறிவிட்டது

துஷியங்கா சிவகுமார் என்பவருடைய தே.அ. அட்டை (906922983V), சாரதி அனுமதிப் பத்திரம் ஸ்ரான்லி வீதி சந்திக்கும் பஸ்நிலையத்திற்கும் இடையில் கடந்த 15.09.2017 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். - 077 724 2381, சன்மானம் வழங்கப்படும்.

கண்ணீர் அஞ்சலி

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையின்
ஓய்வுநிலை பிரதி அதிபர்
திருமதி
ரட்ணவதி கனகரத்தினம்
அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி
ஜெயமணி
சிமியாம்பிள்ளை

அவர்களின் மறைவு குறித்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் காணிக்கை ஆக்குகின்றோம்.

கல்விப்புலத்தின் வடபால் முழுமையும் பணியிடைநின்ற பண்புடையாளன் நல்மனதுடையோன் சிமியாம் பிள்ளை நலமுறு இல்லறத் துணையாய் நின்று வெல்லவே அதிபராய்ப் பணியிடை ஓய்வில் வெற்றியின் சரித்திரம் படைத்தோய் இல்லற மேன்மையில் கல்விப் பணிக்கென கவினுறு **ரட்ணா ரீச்சரை** எமக்காய் பல்லுலகிலுயரும் யாழிந்துப் பள்ளியில் பற்றுடையுற்றாய்ப் பயிர்வளர்த்திட்டே வல்லமையாலே நிர்வகித்திட்ட வாய்மையை பெற்றீர் பெருமையில் திளைத்தீர் சொல்லவேயில்லை கர்த்தருள் அமிழ்ந்தீர் தூயநின் நினைவினால் துவழ்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஓய்வுநிலை அதிபர்கள், உடன் சேவையில் நின்ற ஆசிரியர்கள்
யா/யாழ்இந்து ஆரம்ப பாடசாலை

தேவை

இணுவிலில் உள்ள இலத்திரனியல் கடை ஒன்றிற்கு பெண் ஊழியர் ஒருவர் தேவை. - 077 3411803

புலமைப்பரிசில் அனுமதி (தரம் - 9) - 2017

தேசிய விளையாட்டுப் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு 2004 ஆம் ஆண்டு பிறந்த தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவர்களிடமிருந்து அனுமதி கோரப்பட்டுள்ளது.

உடற்தகுதி பரீட்சைமூலம் தெரிவுசெய்யப்படும் 25 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டு சகல வசதிகளுடனும் விடுதியில் தங்கி கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்படும்.

குறிப்பு :- விண்ணப்பப்படிவங்களை இன்று அலுவலகத்தில் பெற்று 25.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

மத்தியகல்லூரி,
யாழ்ப்பாணம். **– அதிபர் –**

யா/ புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் மகா வித்தியாலயம் பழைய மாணவர்சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம் - 2017

காலம் - 22.09.2017 பி.ப. 1.30 மணி
இடம் - பாடசாலையின் பிரதான மண்டபம்

மேற்படி எமது பாடசாலையின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் நடைபெற இருப்பதால் பாடசாலையின் அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் கலந்துரையாட இருப்பதாலும் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்.

யாழ்ப்பாணம் மாநகரசபை

திண்மக்கழிவுகளை முறையாக அகற்றுவதற்கான கேள்வி அறிவித்தல்

யாழ் மாநகர ஆளுகைக்குட்பட்ட குறிப்பிடப்படும் இடங்களிலிருந்தான தரம் பிரிக்கப்படாத திண்மக் கழிவுகளை மாநகரசபையால் தரப்படும் கொம்பக்ர் வாகனத்தில் ஏற்றி கல்லுண்டாயில் வைத்து தரம்பிரித்துக் கொடுக்கும் சேவைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ் மாநகர சபை, பிரதம பொறியியலாளர் பகுதியில் பெற்றுக் கொள்ளுமாறுகேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர்,மாநகர சபை,யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் கடமை நாட்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை 28.09.2017 வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

கேள்விப்படிவம் வழங்கப்படும் இறுதித்திகதி 28.09.2017 பி.ப 3.00 மணியாகும்.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை பூரணப்படுத்தி **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 19.09.2017ம் திகதியில் இருந்து 29.09.2017 வரை காலை 9.00 மணிக்கும் மாலை2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாகரூபா.1,000.00 + வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர் மாநகர சபை,யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 29.09.2017ம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதமபொறியியலாளர் பகுதியில் உள்ள கேள்விப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

தொ.எண்	வேலை விபரம்	விலை விகிதம் (தலா ஒருவருக்கு)	மொத்த தொகை
1	நாளொன்றுக்குக் கட்டாயமாக இரு தடவைகள் சேவை வழங்க வேண்டும்(தேவையானஆளணி 05 விபரம் வருமாறு) ஆளணி வகை எண்ணிக்கை சாரதி 01 கழிவு ஏற்றுபவர்கள் 02 கழிவுகளை தரம்பிரிப்போர் 02 சாரதிக்கான கூலி கழிவு ஏற்றுபவர்கள் கூலி கழிவுகளை தரம்பிரிப்போர் கூலி	....	....
11	மேலதிகமாக குறித்த நாளில் மூன்றாவது தடவை ஏற்றும்போது ஒக்குவப்பாக வழங்கப்படும் கொடுப்பனவு மேலுள்ள (1) இனை அடிப்படையாகக்கொண்டு தீர்மானிக்க வேண்டியது	...	....
	மொத்தத் தொகை		

பொ.வாகீசன்,
ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம். 19.09.2017

தேவை
உழவு இயந்திரம் மற்றும் பெட்டி என்பன விலைக்கு தேவை.
பி.ப.6.00மணிக்குபின்தொடர்புகொள்ளவும்.
- 075 656 3907

கொழுப்பை கரைக்கும் குடைமிளகாய்

என்ன இருக்கிறது குடை மிளகாயில்?

பல்வேறு நன்மைகளைக் கொண்ட குடைமிளகாய் காரம், மணத்தைக் கொண்டது. வயது முதிர்வை தடுக்கும் தன்மை உடையது. புறவூதா கதிர்களால் தோலில் ஏற்படும் கருமை, சுருக்கம், வறட்சியை போக்கி தோலுக்கு ஆரோக்கியம் தருகிறது. மூட்டு வலிக்கு மருந்தாகிறது. பொட்டாசியம், மக்னீசியம், இரும்பு உள்ளிட்ட சத்துக்கள் இதில் இருக்கின்றன. குடை மிளகாயைப் பயன்படுத்தி வயிறு உப்புசம், வாயு தொல்லை பிரச்சினையை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

உடல் எடை குறைய தேவையான பொருள்கள் : குடைமிளகாய், தக்காளி, உப்பு, மிளகுப்பொடி.

ஒரு பாத்திரத்தில் சிறிது நல்லெண்ணெய் விடவும். இதனுடன் குடைமிளகாய் துண்டுகள், தக்காளி சேர்த்து வதக்கவும். இதனுடன் உப்பு, மிளகுப் பொடி சேர்க்கவும். இதை சாப்பிட்டுவர விற்றமின் ஏ, பி, டி, சி, கே மற்றும் இரும்பு சத்துக்கள் எமக்குக் கிடைக்கும். நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கிறது. மலச்சிக்கலை போக்கி சமிபாட்டைச் சீர்செய்கிறது. நச்சுக்களை வெளியேற்றும். உடல் எடை குறையும். 3 வண்ணங்களில் கிடைக்கும் குடை மிளகாய் புற்றுநோய் வராமல் தடுக்கும் சத்தூட்டமான உணவாகிறது.

மருந்து தயாரிக்கும் முறை

தேவையான பொருள்கள் : குடைமிளகாய், பூண்டு, சோம்பு, உப்பு, மிளகுப்பொடி.

ஒரு பாத்திரத்தில் ஒரு டம்ளர் நீர்விடவும். இதில், 2 பல் பூண்டு தட்டிபோடவும். 2 கரண்டி குடை மிளகாய் துண்டுகள் மற்றும் சோம்பு, உப்பு, மிளகுப்பொடி சேர்த்து கொதிக்க வைத்து இறக்கி விடவும். இதைக் குடித்துவந்தாலே போதும்:

வாயுத்தொல்லை, வயிறு உப்புசம் சரியாகும். குடைமிளகாய் சம்பாட்டை சீர்செய்ய கூடியதாக விளங்குகிறது. உடலில் உள்ள தேவையற்ற கொழுப்பை கரைக்கும் உணவாகிறது. குருதி நாளங்களில் உள்ள கொழுப்பை கரைத்து இதய ஓட்டத்தை சீராக்கும். குடை மிளகாய் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

உள்ளங்கால் வலியா?

குடைமிளகாயைப் பயன்படுத்தி உள்ளங்காலில் ஏற்படும் வலி, மரத்துப்போதல் பிரச்சினை க்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: குடைமிளகாய், கடுகு எண்ணெய், பூண்டு.

ஒரு பாத்திரத்தில் கடுகு எண்ணெய் எடுக்கவும். இதனுடன் நசுக்கிய பூண்டு, குடைமிளகாய் சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். இதை வடிகட்டி பூசிவர பாதத்தில் ஏற்படும் வலி, மரத்துப்போதல், எரிச்சல் பிரச்சினைகள் சரியாகிறது. குடைமிளகாய் குருதி அழுத்தம், சர்க்கரை நோய் உள்ளிட்டவற்றுக்கு மருந்தாகிறது. வலியை போக்கும் இதை உணவில் சேர்த்துகொள்வதால் பல நோய்கள் எம்மை நெருங்காது.

மரண அறிவித்தல்கள்

திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை

(ஓய்வுநிலை ஆசிரியை - வவு/ நொச்சிமோட்டை அ.த.க. பாடசாலை)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல.56, ஓட்டுமடம் வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமணி சிமியாம்பிள்ளை நேற்று (18.09.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை சிமியாம்பிள்ளை (முன்னாள் வடமாகாண கல்விப் பணிப்பாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான மத்தியூஸ் - றோசம்மா தம்பதிகளின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - விக்டோரியா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான எலிசபெத் டேவிட், ஜேக்கப் மத்தியூஸ், மேரி லாசறஸ், புளொசம் சூசைப்பிள்ளை, மரியதாஸன், குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பேனாட் மற்றும் தோமஸ் (பிரான்ஸ்), ரேவதி, ரட்ணவதி (இளைப்பாறிய பிரதி அதிபர் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், எமில் சிவசங்கரின் (ஜேர்மனி) வளர்ப்புத் தாயாரும், பிலசிடா (பிரான்ஸ்), அமலநாதன் (வைத்தியர் - மன்னார்), காலஞ்சென்ற கனகரட்னம் (முன்னாள் முகாமையாளர் - மக்கள் வங்கி) மற்றும் சார்மதி ஆகியோரின் மாமியாரும், மத்தியூஸ் - நிவேதிகா (ஆஸ்திரேலியா), ரோய் (பல்வைத்தியர் மாவட்ட வைத்தியசாலை - வவுனியா)- டிலானி, ரட்ணதீபன் (முகாமையாளர் - கொமர்ஷல் வங்கி - கிளிநொச்சி)- தனஜா, கிரிஷன், கொன்சியா ஆகியோரின் பேர்த்தியும், ரித்யா, ரிஹானா, ரொஹான், டிரோஷித், கிரேஷித், சாகித்தியா, மதுஷிகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.09.2017) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.மரியன்னை தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

56, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 5266/ 071 897 5575



சிவகுரு யோகநாதன்

யாழ்.புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.65, புங்கன்குளம் வீதி கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு யோகநாதன் அவர்கள் (18.09.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சபாபதிப் பிள்ளை - கண்மணி தம்பதியரின் அன்புமருமகனும் விஜயலட்சுமியின் அன்புக்கணவரும் கேதீசன் (கனடா), தனுசா, பிரியதர்சினி ஆகியோரின் அன்புத்தந்தையும் சண்முகநாதன் (கனடா), சிவலிங்கநாதன் (நாதன் சூ பலஸ்), மங்கையற்கரசி (கனடா), திருலிங்கநாதன் (அபிராமி சூ சென்ரர்), சிவநாதன் (கனடா), இலங்கநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் லீலாவதி (கனடா), செல்வராணி (கனடா) காலஞ்சென்ற பரமசாமி மற்றும் சசிகலா (இலங்கை), ஜீவரஞ்சினி (கனடா), சுகந்தினி (கனடா) காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் நீலாதேவி, கமலாதேவி, புஸ்பராணி காலஞ்சென்ற செல்வராணி மற்றும் உதயராணி ஆகியோரின் மைத்துனரும் கலாதேவி, தனேந்திரன் காலஞ்சென்ற அம்பிகைராஜா மற்றும் ராஜேஸ்வரன், பிரேமகுமார் காலஞ்சென்ற சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 65, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

பாஸ்கரன் விதுஷன்



சதோசா கடையடி, பூமாங்குளம் வவுனியாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாஸ்கரன் விதுஷன் (18.09.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பாஸ்கரன் - சாந்தினி தம்பதியரின் அன்புப் புதல்வரும் விதுசிகா, யதுசன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூமாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
வராகி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
077 2926 316 (த. தீசன்)

சதோசா கடையடி,
பூமாங்குளம் வவுனியா.

சிவகாமசௌந்தரி இராமச்சந்திரன்

அல்வாய் தெற்கு குமிழடியைப் பிறப்பிடமாகவும், ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகாமசௌந்தரி இராமச்சந்திரன் நேற்று (18.09.2017) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்புப்புதல்வியும் இராமச்சந்திரனின் அன்பு மனைவியும் வாணி, வெண்ணிலா, ஹரன், தீலீபன் ஆகியோரின் அன்புதாயும் நந்தகுமார், ஆதவன், ஜனனி, லோகபரணி ஆகியோரின் அன்பு மாமியும் சிவதர்சன், தரணி, நிலவன், இளவஞ்சி, பார்கவி, ராகவி, தீரன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரெழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் குறுக்குத்தெரு,
ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 6141762, 077 446 4556

உதடுகள் அழகு பெற இயற்கை வழிகள்!

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

- கற்றாழையின் ஜெல்லை இரவில் படுக்கும் முன் உதடுகளில் தடவி, இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலையில் சூடான நீரில் கழுவ வேண்டும். இதே போல் தினமும் செய்து வந்தால், கருமை நீங்கி, உதடுகளுக்கு அழகான சிவப்பு நிறம் கிடைக்கும்.
- கருமையான உதடு சிவப்பாக பாலோடு ஒரு கரண்டி எடுத்துக் கொள்ளவும். நெல்லிக்காய் சாறு 5 சொட்டுகள் கலந்து, தினமும் உதடுகளில் பூசி வந்தால், உதட்டின் கருமை மறையும்.
- தினசரி உதடுகளின்மேல் நெய் அல்லது வெண்ணெய் தடவி வந்தால் வறண்ட உதடுகள் மாறி வழவழப்பாகும்.
- அரை கரண்டி தோடம்பழச்சாறு கலந்து உதட்டில் தடவவும். இப்படிச் செய்தால் உதடு சிவப்பாகும்.

மகிந்த தேசப்பிரிய மீது டிலானுக்கு வந்த ஐயம்

விகிதாசார முறைமையை அவர் விரும்புகிறாராம்

கொழும்பு, செப். 19

"தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய போன்றவர்கள் விகிதாசார தேர்தல் முறைமையை விரும்புகின்றனர். இதே போன்று தேர்தலுடன் தொடர்புடைய அரசசார்பற்ற நிறுவனங்களும், விகிதாசாரத் தேர்தல் முறைமையையே விரும்புகின்றன. தேர்தல்கள்ஆணைக்குழுவுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இடையே தொடர்புகள் இருக்கலாம்"

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா குற்றம் சுமத்தினார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

எதிர்காலத்தில் நாட்டில் விகிதாசார தேர்தல் நடத்துவதில்லை என்றே, கடந்த அரச தலைவர் தேர்தல் காலத்தின்போது, மைத்திரிபாலவும் சரி, மகிந்த ராஜபக்சவும் சரி தீர்மானம் எடுத்திருந்தனர். அதற்கு மக்களும் ஆதரவு தெரிவித்திருந்தனர். நாட்டில் 99 சதவீதமானோர் விகிதாசார தேர்தல் முறையை ஒழிக்கவே விரும்புகின்றனர். ஒரு சதவீதத்தினரே அதனை ஆதரிக்கின்றனர்.

குறிப்பாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் போன்றவர்களே விகிதாசார முறைமையை விரும்பு கின்றார்கள். 99 சதவீதமானவர்களுக்கு விருப்பமான வேலையை தேர்தல் கள் ஆணையாளர் செய்யவேண்டுமா? இல்லை ஒரு சதவீதமானவர்கள் விரும்பும் வேலையை செய்ய வேண்டுமா?

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் விகிதாசாரத் தேர்தல் முறைமையே விருப்பம். அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது. அதனை அவரிடத்தில் தான் கேட்க வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீன நிறுவனம் அல்லவா? ஆகவே கீர்த்தி தென்னக்கோன் போன்றவர்கள் விகிதாசார தேர்தல் முறைமையை விரும்புவதால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் சுயாதீன அரசார்பற்ற நிறுவனங்களின் தொடர்பும் இருக்கலாம் - என்றார். (வ-5,31)

தமிழரசுவின் மைய செயற்குழு கிழக்கில் திங்களன்று கூடுகிறது

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மைய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த நிலையில் அது மறுநாள் திங்கட்கிழமைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

கல்முனை வாடிக்காடு பகுதியிலுள்ள ஜெயா திருமண மண்டபத்தில் காலை 10 மணிக்கு கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா தலைமையில் கூட்டம் இடம்பெறும். அதற்கான ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வடக்கு-கிழக்கு மற்றும் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மைய செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கிழக்கு மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல், புதிய அரசமைப்பு, தற்கால அரசியல் நிலமைகள் போன்றன தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி. துரைராசசிங்கம் தெரிவித்தார். (வ-101)

பல்கலை. மாணவர் கொலை வழக்கில்

அரச பகுப்பாய்வு அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில் அரச பகுப்பாய்வு அறிக்கை நீதிமன்றுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கின் சந்தேகநபர்களான 5 பொலிஸாரும் பிணை நிபந்தனையை நிறைவு செய்து நேற்றுச் சிறைச்சாலையிலிருந்து வெளியேறினர்.

இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அரச பகுப்பாய்வுத் திணைக்கள அறிக்கை கிடைக்கவில்லை என்று குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். இந்த வழக்கை எதிர்வரும் நவம்பர் 23ஆம் திகதி வரை நீதிவான் ஒத்திவைத்தார்.

கொக்குவில் குழப்பிட்டிச் சந்தியில் கடந்த வருடம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கொல்லப்பட்டனர். யாழ்ப்பாணப் பொலிஸார் மீது கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டது. 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஐவருக்கும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கடந்த வாரம் பிணை வழங்கியது. (வ-4,103)

தேர்தல்...

மணிக்கு கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறும். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், 20ஆவது திருத்தத்தை 20ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதா இல்லையா? என்பது முடிவு செய்யப்படும். பெரும்பாலும், 20ஆவது திருத்தச் சட்டவரைவை கைவிடுவதால், அந்தச் சட்டவரைவு மீதான இரண்டாம் வாசிப்பையும் கைவிடுவது என்ற முடிவு எடுக்கப்படும் என்று தெரியவருகின்றது.

20ஆவது திருத்தச் சட்டவரைவைக் கைவிடுவதால், கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கு டிசெம்பர் 9ஆம் திகதி தேர்தல் நடத்தவேண்டி ஏற்படும். இதனைத் தவிர்ப்பதற்கு பிற்போடுவதற்காக, தேர்தல்முறைமை மாற்றத்தை அரசு நாடாளுமன்றில் முன்வைக்கும் என்று தெரியவருகின்றது. தேர்தல் முறைமை மாற்றம் முன்வைக்கப்படுவதால், தேர்தல்கள் ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று குறிப்பிடப்படுகின்றது. (வ-5,101)

20...

உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் அரச தலைவருக்கும், சபாநாயகருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளிவந்த பின்னர் தேர்தலை நடத்தியாக வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்படும். தேர்தலைப் பிற்போடுவதற்கு அது குறுக்கு வழியில் பயணிக்கப் பார்க்கின்றது.

தற்போது எமக்குக் கிடைத்துள்ள தகவல்களுக்கமைய அரசு தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான புதிய சட்டவரைவைக் கொண்டு வருவதற்கு உத்தேசித்து வருவதாகத் தெரியவந்துள்ளது. இது மக்களுக்கு - சனநாயகத்துக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும்.

இதனைப் புரிந்துகொண்டு மக்கள் மேற்படி விடயங்களுக்கு இடம் கொடுக்காமல் தடுக்க வேண்டும். அரசு தேர்தலைக் காலம்தாழ்த்தும் முயற்சியைக் கடுமையாக எதிர்க்கின்றோம். தேர்தல்கள் ஆணைக்குழுவிடமிருந்து தேர்தல் நடத்தும் உரிமையைப் பறிக்க வேண்டாம் என்றும் அரசிடம் கோருகின்றோம் - என்றார். (வ-5)

தேர்தலுக்கான...

கின்றது. அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவை நிறைவேற்றுவதன் ஊடாக மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு திட்டம் போட்டிருந்தது. இந்தச் சட்டவரைவை நிறைவேற்ற நாடாளுமன்றின் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடன், பொது வாக்கெடுப்பும் தேவை என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் முன்வைத்துள்ளது. இருப்பினும் இந்தச் சட்டவரைவை பொதுவாக்கெடுப்புக்குச் செல்லாதவாறு நிறைவேற்ற அரசு கடும் முயற்சி எடுத்திருந்தது. சட்டமா அதிபர் உள்ளிட்ட, சட்டவல்லுநர்களுடன் கலந்தாலோசனை நடத்தியிருந்தது.

அவர்களும் கைவிரித்துள்ளனர். உயர் நீதிமன்ற வியாக்கியானத்துக்கு அமைவாக இயைபாகவே செயற்பட வேண்டும் என்று அரசுக்கு அவர்கள் ஆலோசனை கூறியுள்ளதால், 20ஆவது திருத்தத்தைக் கைவிடும் முடிவை நோக்கி அரசு தள்ளப்பட்டுள்ளது. 20ஆவதை அரசு கைவிட்டால், 3 மாகாண சபைகளுக்கான தேர்தல் டிசெம்பர் 9ஆம் திகதி நடைபெறும். இதற்கான முன்னாயத்தப் பணிகளில் முழுவீச்சுடன் தேசிய முதன்மை அரசியல் கட்சிகள் குதித்துள்ளன. (வ-5)

நொதேர்ன்...

பிரதேசங்களில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணை கலந்த வழக்கில், சுன்னாகம் நொதேர்ன் பவர் தனியார் மின் உற்பத்தி நிலையம் சீல் வைத்து மூடப்பட்டது. அதற்கான கட்டளையை மல்லாகம் நீதிவான் மன்றம் வழங்கியது.

அந்தக் கட்டளைக்கு எதிராக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நொதேர்ன் பவர் தனியார் மின் உற்பத்தி நிலையம் சீராய்வு மனுவைத் தாக்கல் செய்தது. சுன்னாகம் மின் உற்பத்திச் சாலையின் தொழிற்பாடுகளை மீள ஆரம்பிக்கவும் மல்லாகம் நீதிவான் மன்றால் வழங்கப்பட்ட கட்டளையைத் தள்ளுபடி செய்யுமாறும் அந்த மனுவில் கோரப்பட்டது. அது விசாரணையில் இருந்து வந்தது.

நீதியரசர்களான மு. குமுதினி விக்கிரமசிங்க மற்றும் பி. பத்மன் சூரசேன முன்னிலையில் இந்த விண்ணப்பம் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே அது தள்ளுபடி செய்யப்பட்டது.

நொதேர்ன் பவர் தனியார் மின் உற்பத்தி நிறுவனத்தால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு விண்ணப்பத்தை தள்ளுபடி செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் குழாம், வழக்கை மல்லாகம் நீதிவான் மன்றத்துக்கு மீண்டும் பாரப்படுத்தியது.

"மைய சுற்றாடல் அதிகார சபையை இந்த வழக்கில் ஒரு கட்சிக்காரராக சேர்க்கப்பட வேண்டும். நொதேர்ன் பவர் நிறுவனத்தின் இயந்திரங்களைப் பராமரிப்பதற்கு ஏதுவான நடவடிக்கைகளை யாழ்ப்பாண மேல் நீதிமன்றின் இணக்கத்துடன் நீதிவான் மன்றின் ஊடாகச் செய்யப்படவேண்டும்" எனவும் மேன்முறையீட்டு நீதிமன்று கட்டளையிட்டது.

நொதேர்ன் பவர் தனியார் மின் உற்பத்தி நிறுவனம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கைத் தாங்கள் கைவாங்குவதாகவும் மன்றில் அறிவித்தார்கள். இதனடிப்படையிலும் சீராய்வு மனுத் தள்ளுபடி செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டோர் சார்பில் சட்டத்தரணி ஹரோசன் குமாரின் அனுசரணையுடன் மூத்த சட்டத்தரணி கே.வி.எஸ். கணேஷரா ஜனுடன் சட்டத்தரணிகள் சாரா ஜோர்ஜ், தீபிகா யோகராஜா ஆகியார் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று முற்பட்டிருந்தனர். சுன்னாகம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் நிலத்தடிநீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளதாகக் கூறப்பட்டது. சுன்னாகத்தில் இயங்கிய - தற்போது சீல் வைத்து மூடப்பட்ட நொதேர்ன் பவர் தனியார் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேறிய கழிவு எண்ணெய் நிலத்தில் செலுத்தப்பட்டமையே காரணம் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதனை நிரூபிப்பதாக குறித்த நிறுவனம் அமைந்துள்ள பகுதியின் சுமார் 2 கிலோமீற்றர் சுற்றுவட்டப் பரப்பில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. அதன்படி குறித்த சுற்றுவட்டப் பகுதிக்கு குடிதண்ணீர் வழங்கவேண்டும் என்று மல்லாகம் நீதிமன்று கடந்த வருடம் கட்டளை பிறப்பித்திருந்தது. (வ-4)

அமெரிக்க...

ரிக்காவுக்கு நீங்கள் செல்லவிருந்ததாகவும், உங்களுக்கு நுழைவிசைவு மறுக்கப்பட்டதாலேயே செல்லவில்லை என்றும் கூறப்படுகின்றதே. அது உண்மையா?' என்று செய்தியாளர்கள் சரத் பொன்சேகாவிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை இராணுவத்தினரின் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் பன்னாட்டு ரீதியாக சுமத்தப்பட்டுள்ளன. அந்த இராணுவத்தின் தளபதி என்ற வகையில் என்மீதும் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன. இதனால்தான் எனக்கு நுழைவிசைவு மறுக்கப்பட்டுள்ளது.

நானும் அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன உள்ளிட்டவர்கள் செல்வதாகத் தான் இருந்தது. இருப்பினும் அந்த பயணம் மறுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலமைகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காகவே விசாரணை நடத்தப்பட்டு இராணுவத்தினரில் உள்ள ஒரு சில குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று நான் திரும்பத்திரும்பக் கூறுகின்றேன்.

அவ்வாறு தண்டனை வழங்குவதற்கு இராணுவத்தினர் யாரும் எதிர்க்கவில்லை. எனக்கு இன்று இரவு நுழைவிசைவு கிடைத்தாலும் நான் அமெரிக்காவுக்குச் செல்லத் தயாராகவே இருக்கின்றேன் - என்றார். (வ-5,31)

பொலிஸாரின்...

ஓகஸ்ட் 9ஆம் திகதி இடம்பெற்றது. அதன் பின்னர், அந்தப் பகுதி மக்கள் கொதிப்படைந்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியிருந்தனர். பொலிஸ் வாகனங்கள், காவலரண்கள் சேதமடைந்தன. இந்த வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிஸாரால் 40 பேர் வரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சரணடையவில்லை என்பதால் 40 பேரும் கைது செய்யப்படும் வரையில் தேடுதல் நடவடிக்கைகள் தொடரும் என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்திருந்தன. (வ-21,26)

பொது...

எது. அதேவேளை, இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ளது. மிக முக்கியமான விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே, மகிந்த தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக அறிய முடிகின்றது. (வ-5)

வெலிக்கடை...

விமர்சனம் எழுந்தது. இதனையடுத்து, மூன்று மருத்துவர்கள் பரிந்துரை வழங்கினாலேயே, சிறைச்சாலை மருத்துவமனையில் கைதி ஒருவரை சேர்க்க முடியும் என்று சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு உத்தரவிட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மேற்படி இடமாற்றம் இடம்பெற்றுள்ளது. (வ-5)

யாழ்...

சைக்காக உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சம்பவத்தில் காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிறிரங்கன் (வயது - 36) என்பவரே பாம்புக் கடிக்கு இலக்காகினார்.

தீண்டிய பாம்பை இனம்காணும் நோக்கில் அவர், அதனை ஓர் போத்தலில் பிடித்து அடைத்து வைத்தியசாலைக்குக் கொண்டு வந்துள்ளார். அந்தப் பாம்பு சிறிது நேரத்தில் 10 குட்டிகளைப் போட்டுள்ளது. இந்தச் சம்பவத்தால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பாம்புக் கடிக்கு இலக்கானவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இதேவேளை அந்தப்பாம்புபரிசோதனையின் பின்னர் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (வ- 8-ரி1 -101)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

சென். லூட்ஸ் அபாரம்

யாழ்ப்பாணம், செப். 19
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் அண்மையில் இடம் பெற்ற ஆட்டமொன்றில் சென். லூட்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.
மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணி 7:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றது.
(ம-23)

போராடி வென்றது ஞானமுருகன் அணி

யாழ்ப்பாணம், செப். 19
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் முதல் கோல் பதிவானது. இந்தக் கோலை சுபாஸ் பதிவுசெய்தார்.
ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார் ராசா. 25ஆவது நிமிடத்தில் ஞானமுருகனின் மூன்றாவது கோல் பதிவானது.
ஆட்டத்தின் 29ஆவது நிமிடத்தில் ஸ்ரீபனால் யூனியன் அணியின் முதல் கோல் பதிவானது. முதல் பாதியின் முடிவில் 3:1 என்று ஆதிக்கம் செலுத்தியது ஞானமுருகன்.
இரண்டாவது பாதியில் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய மதிராஜ் ஆட்டத்தின் 5ஆவது, 12ஆவது, 26ஆவது நிமிடங்களில் ஆனைக்கோட்டை யூனியனின் சார்பாக கோல்களை அடுக்கினார். இதனால் 4:3 என்று முன்னிலை வகித்தது யூனியன்.
இரண்டாம் பாதியின் 21ஆவது நிமிடத்தில் தரன், ஞானமுருகன் அணியின் நான்காவது கோலைப் பதிவுசெய்தார்.
நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா 4 கோல்களைப் பதிவுசெய்த மையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக ஞானமுருகன் அணியின் சுபாஸ் தெரிவானார்.
(ம-23)

போக்குவரத்துச் சபை அணி மேரிஸை போராடி வென்றது

யாழ்ப்பாணம், செப். 19
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், அண்மையில் இடம் பெற்ற ஆட்டமொன்றில் இலங்கை போக்குவரத்துச் சபை அணி வெற்றிபெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இலங்கைப் போக்குவரத்து சபை விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் இலங்கைப் போக்குவரத்து சபை விளையாட்டுக் கழக அணிக்கு தண்டனை உதை கிடைக்க அதனை றூவான் சானக கோலாக மாற்றினார். வேறெந்த மாற்றமும் இன்றி முடிவுக்கு வந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதி ஆட்டத்தின் 31ஆவது நிமிடத்தில் இலங்கைப் போக்குவரத்து சபை விளையாட்டுக் கழக அணியின் இரண்டாவது கோலினை சாமர ஜெயவீர பதிவு செய்தார். சென். மேரிஸின் சார்பாக 32ஆவது நிமிடத்தில் கபில் ராஜ் கோலொன்றைப் பதிவுசெய்தார். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் போக்குவரத்துச் சபை அணி வெற்றிபெற்றது.
(ம-23)

ஐயனார் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 19
ஊர்காவற்றுறை அண்ணா சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் ஊர்காவற்றுறை அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் துறையூர் ஐயனார் அணி கிண்ணம் வென்றது.
அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது ஐயனார் அணி.
(ம-23)

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 19
யாழ்ப்பாண மாவட்டதாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் புதுமடம்வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)

அரச தலைவர் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடர் விரைவில்

யாழ்ப்பாணம், செப். 19
யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அங்கத்துவ அணிகளுக்கு இடையில், அரச தலைவர் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரொன்று நடைபெறவுள்ளது. எதிர்வரும் 23ஆம் திகதி இந்தத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் விரைவில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
(ம-108)

நெல்லியடி மத்தி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், செப். 19
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி தனது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்திய துடுப்பாட்டத் தொடரில், நெல்லியடி மத்திய கல்லூரி அணி கிண்ணம் வென்றது.
விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கிருஸ்ணமூர்த்தி 36 ஓட்டங்களையும், கலியுகன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிரதீபன் 2 இலக்குகளையும், ஜெயகரன், தர்சன் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 5.2 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக தர்சன் 25 ஓட்டங்களையும், விஜிதரன் 7 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுதர்சன் 2 இலக்குகளையும், கலியுகன், அபிராம் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
ஆட்ட நாயகனாக நெல்லியடி மத்திய கல்லூரி அணியின் தர்சன், தொடராட்ட நாயகனாக நெல்லியடி மத்திய கல்லூரியின் அன்பரசன் ஆகியோர் தெரிவாகினர்.
(ம-422)

மட்ரிட் - இஸ்கோ நீண்ட ஒப்பந்தம்

ஸ்பானியக் கால்பந்தாட்ட கழகமான ரியல் மட்ரிட் நட்சத்திர வீரர் இஸ்கோ இடையிலான ஒப்பந்தம் எதிர்வரும் 2022ஆம் ஆண்டுவரை கைச்சாத்தாகியுள்ளது.

ஸ்பெய்ன் புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரரான இஸ்கோ, அந்த நாட்டின் கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட் கழகத்துக்காகவும் விளையாடி வருகிறார். மட்ரிட்டின் நட்சத்திர வீரராகவும் இஸ்கோ உருவெடுத்துள்ளார். அவர் ரியல் மட்ரிட்டுடன் கொண்டிருந்த ஒப்பந்தம் இன்னும் சில வாரங்களில் முடிவுக்கு வரவிருந்த நிலையில் அவருடன் எதிர்வரும் 2022ஆம் ஆண்டு வரை ஒப்பந்தம் செய்தது ரியல் மட்ரிட். முன்னதாக நட்சத்திர வீரர் மார்செலோவுடன் கொண்டிருந்த ஒப்பந்தத்தையும் எதிர்வரும் 2022ஆம் ஆண்டுவரை மட்ரிட் நீடித்திருந்தது. (ம)

தவறியது வெண்கலம்

43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான பூப்பந்தாட்டத் தொடரில், வடக்கு மாகாண ஆண்கள் அணி வெண்கலப் பதக்கத்தைத் தவறவிட்டது.

கொழும்பு பூப்பந்தாட்டச் சங்க உள்ளக அரங்கில் நேற்று இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் மத்திய மாகாண அணியை எதிர்த்து வடக்கு மாகாண அணி மோதியது. இதில் மத்திய மாகாண அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

அன்ரனிஸை வீழ்த்தி டயமன்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 19

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் அணி சம்பியனானது.

உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென். அன்ரனிஸ் அணி மோதியது. 1:0 என்று அன்ரனிஸின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் தனது அதிரடியான ஆட்டத்தினை வெளிப்படுத்தியது வதிரி டயமன்ஸ் அணி. அந்த அணியின் வீரர்களான துசி இரண்டு கோல்களையும், றஜீ ஒரு கோலையும் பதிவுசெய்ய முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் டயமன்ஸ் அணி வெற்றிபெற்றது.

சிறந்த வீரராக டயமன்ஸ் அணியின் துசி, சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் ஜனார்த்தனன், தொடராட்ட நாயகனாக பலாலி விண்மீன் அணியின் கரண்டீபன் ஆகியோர் தெரிவாகினர். (ம-23)

பாண்டியா இருக்கப் பயமேன்

கோக்லி பெருமிதம்

"இந்திய அணியின் இளம் சகல துறை வீரராக பாண்டியா உருவெடுத்துள்ளார். அவர் ஆட்டத்தை எப்போதும் மாற்றிக்காட்டும் அற்புதமான திறமையை தன்வசம் கொண்டுள்ளார்" இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் வெற்றிபெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"நாங்கள் ஆரம்பத்தில் இலக்குகளை இழந்தோம். டோனி, கேதர் இருவரும் சிறப்பாக விளையாடினார்கள். அதன்பிறகு பாண்டியா மிக நன்றாக விளையாடினார். கடைசியில் டோனி அவர் பாணியில் ஆட்டத்தை நிறைவுசெய்தார். எமது துடுப்பாட்ட வரிசையின் பலத்தை நிரூபிக்க எண்ணுபவர்களுக்கு இந்த ஆட்டம் ஒரு எடுத்துக்காட்டு. எமது பந்து வீச்சு வரிசை தனிச் சிறப்பாக உள்ளது. வீரர்களுக்கு நம்பிக்கை அளிப்பது முக்கியம். பாண்டியா தன்னம்பிக்கை மிக்கவர். அவரிடம் சகலதுறைத் திறமை உள்ளது. அவர் அணியில் இருப்பது எமது அதிர்ஷ்டம். சாகல் மிகவும் தைரியசாலி, எந்தச் சூழ்நிலைக்கும் அவர் பந்து வீச மறுப்புத் தெரிவிப்பதில்லை. புவனேஷ்வர் குமார், பும்ரா எமது அணியின் துல்லியமான பந்துவீச்சாளர்கள். ஒட்டுமொத்தத்தில் அணிக்கு என்ன தேவையோ அதை அனைவரும் சிறப்பாகச் செய்கின்றனர்" என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

சொசைற்ரெட்டை வென்றது மட்ரிட்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அபார வெற்றி பெற்றது.

ரியல் சொசைற்ரெட்டை எதிர்த்து ரியல் மட்ரிட் மோதியது. ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவு செய்தார் போர்ஜா. 28ஆவது நிமிடத்தில் ஜேம்ஸ் றொட்ரிக்காஸ் மட்ரிட்டின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 36ஆவது நிமிடத்தில் ரியல் சொசைற்ரெட்டின் சார்பாக முதல் கோல் பதிவானது. முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது மட்ரிட்.

இரண்டாவது பாதியின் 61ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் சார்பாக பேல் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். அதுவே ஆட்டத்தின் கடைசிக் கோலுமாக அமைந்தது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வெற்றிபெற்றது.

ரியல் சொசைற்ரெட்டுடன் ஒப்பிடுகையில், ரியல் மட்ரிட் பலமான அணி. எனினும் ரியல் மட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான ரொனால்டோ விளையாடாத காரணத்தால் இந்த ஆட்டம் தொடர்பில் அதிக எதிர்பார்ப்புக்கள் இருந்தன. எதுஎவ்வாறாக இருந்தாலும் பதற்றம் இன்றி வெற்றிபெற்றது மட்ரிட். (ம)

2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரை நடத்தும் உரிமம் பிரான்ஸின் பரிஸ் நகருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில், பரிஸ் நகரில் உள்ள ஈபிள் கோபுரத்துக்கு முன்னால் ஒலிம்பிக் இலட்சினை வடிவில் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. (ம)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

சிங்கப்பூர் தொடரில் ஹமில்டன் சம்பியன்

உலக கார்பந்தயத் தொடரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற 14ஆவது சுற்றில் மகுடம் சூடினார் இங்கிலாந்து வீரர் லூயிஸ் ஹமில்டன்.

நடப்புவருடத்தின் உலக கார்பந்தயத் தொடரின் 14ஆவது சுற்று சிங்கப்பூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஒட்டுமொத்தமாக 308 கிலோமீற்றர் தூரமுடையதாகபந்தயம்அமைந்தது. 2 மணித்தியாலம் 3 நிமிடங்களில் இலக்கை அடைந்து முதலிடம் பிடித்தார் ஹமில்டன். இரண்டாவது இடத்தை ஆஸ்திரேலிய வீரர் ரிக்கார்டோ பிடித்தார். மூன்றாம் இடத்தை பின்லாந்து வீரர் போத்தாஸ் தனதாக்கினார்.

ஒட்டுமொத்தமாக முடிவடைந்துள்ள 14 சுற்றுக்களின் நிறைவில் 263 புள்ளிகளுடன் ஹமில்டன் முதலிடத்தில் உள்ளார். அவர் கிண்ணம் வெல்வதற்கான வாய்ப்பு அதிகளவில் காணப்படுகிறது. (ம)

பார்வையாளர்களுக்குக் காயம்

இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான ரி-20 ஆட்டத்தில் பார்வையாளர் அரங்கு பகுதியளவில் சேதமடைந்ததை அடுத்து மூன்று ரசிகர்களுக்கு காயம்ஏற்பட்டது. இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தபோது, மைதானத்தின் வட கிழக்கு மூலையிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றிருந்தது. தளத்தின் பகுதியொன்று உட்சென்றதாகக்கூறப்படுகின்றநிலையில், அந்தத் துவாரத்துக்குள்ளால் விழுந்தமை காரணமாக பார்வையாளர்கள் மூவர் காயமடைந்தனர்என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

ஒருநாள் தரப்படுத்தல்; முதலிடத்தில் கோக்லி

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒருநாள் ஆட்டங்களுக்கான தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. இந்திய அணித்தலைவர் கோக்லி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.

பன்னாட்டுகிரிக்கெட்சபை, ஒருநாள்ஆட்டங்களுக்கான தரப்படுத்தலை நேற்றுப் புதுப்பித்துள்ளது. கடந்த பல மாதங்களாக முதலிடத்தில் இருந்துவரும் கோக்லி அப்படியேதொடர்கிறார். ஆஸ்திரேலிய அணியின் உபதலைவர் வோர்ணர் இரண்டாவது இடத்திலும், தென்னாபிரிக்க அணியின் முன்னணி வீரர் வில்லியர்ஸ் மூன்றாவது இடத்திலும், இங்கிலாந்து அணித்தலைவர் ரூட் நான்காவது இடத்திலும், பாகிஸ்தான் அணியின் அசாம் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர். நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் ஆறாவது இடத்திலும், தென்னாபிரிக்க அணியின் இலக்குக் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான குயின்டன் டி ஹெராக் ஏழாவது இடத்திலும், தென்னாபிரிக்க அணியின் தலைவர் பிளாசிஸ் எட்டாவது இடத்திலும், இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான ரோகித் ஒன்பதாவது இடத்திலும், டோனி பத்தாவது இடத்திலும் உள்ளனர்.

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மத்தியூஸ் 23ஆவது இடத்தில் உள்ளார். இலங்கையின் சார்பாக சிறந்த தரப்படுத்தல் அடைவாக மத்தியூஸின் அடைவே உள்ளது. (ம)

லா லிகா தொடரில் பார்சிலோனா அணிக்கும் எய்பர் அணிக்கும் இடையிலான ஆட்டமொன்று நாளை நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி. (ம)

சச்சினின் சாதனைகளை கோக்லி தகர்த்திடுவார்

சேவாக் நம்பிக்கை

"இந்திய கிரிக்கெட்டின் ஜாம்பவானாகத் திகழ்ந்த சச்சினால் படைக்கப்பட்ட சாதனைகள் பலவற்றை கோக்லி தகர்த்தெறிவார்" என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் சேவாக் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வுஒன்றில்உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சச்சினைப்போல் இன்னொரு வீரர் வருவார் என்று நாங்கள் நினைத்ததில்லை. ஆனால்அந்தமனநிலையைவிராட்கோக்லி மாற்றிவிட்டார். சச்சினின் சாதனைகளை கோக்லி முறியடிப்பார் என நினைக்கிறேன். கோக்லிக்கு தற்போது 28 வயதுதான் ஆகிறது. அவரால்இன்னும்10ஆண்டுகள்விளையாடமுடியும். இதனால்அவரால்மிகப்பெரிய சாதனைகளைச் செய்ய முடியும்" என சேவாக்மேலும்தெரிவித்தார். (ம)

பதவி வெற்றிடங்கள்

சர்வதேச ரீதியில் இயங்கும் எமது பல்தேசிய கம்பனியானது (Dynamic Holdings)தனது கிளைகளை யாழ்ப்பாணம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கவுள்ளது. O/L படித்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

*அனுபவம் அவசியமற்றது
*வயதெல்லை 18 - 31
*மேற்பார்வையாளர், முகாமைத்துவ உதவியாளர், விற்பனை பிரதிநிதிகள்
*தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு.

தொடர்புகள் - 077 157 1699, 021 5679 001

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.
www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர்,தொழில்புரிவோர் இணையமுடியும்
சனி,ஞாயிறு பயிற்சி ஆரம்பம் : 23.09.2017
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
ஆங்கிலத்தில் ஒருமுழுத்தெரியாதவர்களும் எமது பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.
வாரநாள் பிரிவுகள் (திங்கள் மற்றும் புதன்) - 25.09.2017
1. காலை : 08-10 2. காலை 10-12
ஷாம்சன் ஆசிரியரின் நேரடி வகுப்பு - ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
SAAMSON
Experts in English Training
170, வெலிங்டன் சந்தி அருகில், யாழ்நகர். 077 1570 486 021 320 3313

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.